Registered as a News Paper

# மன்னா

MANNA

மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

பொழிவு - 17
குவிப்பு - 10
பக்கங்கள்- 16
விலை ரூபா 40.00
ஒக்டோபர் 2011
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.

## கிறிஸ்துவை உலகறியச்செய்யத் தவறியதற்காக

# நாம் மனம் வருந்த வேண்டும்

### தனது முன்னாள் மாணவர்கள் மத்தியில் திருத்தந்தை



கத்தோலிக்கர்களாகிய நாம் தொட்டில் குழந்தைகள்போல அடைபட்டு, கிறிஸ்துவை உலகறியச்செய்யத் தவறியதற்காக மனம் வருந்த வேண்டும் என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் கூறினார். திருத்தந்தை அவர்கள் இறையியல் பேராசிரியராகப் பணியாற்றியபோது அவர் வழிநடத்தி முனைவர் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு அண்மையில் ஆற்றிய உரையின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

திருத்தந்தை அவர்கள் தொடர்ந்து கூறியதாவது, கிறிஸ்து என்ற உண்மையை, அவர் இன்னும் நம்முடன் வாழ்கிறார் என்ற நம்பிக்கையை உலகம் கேட்பதற்கு ஆவலாக இருந்தவேளையில், இவற்றை எடுத்துச்சொல்ல கத்தோலிக்கர்களாகிய நாம் காட்டி வந்துள்ள தயக்கம் பெரும் வருத்தத்திற்குரியது.

கடவுளைத் தேடும் உள்ளத்தைப்பற்றி விபரிக்கும் திருப்பாடல் 63இல் "என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது: நீரின்றி வறண்ட பாலைநிலம்போல என் உடல் உமக்காக ஏங்குகின்றது" என்ற வரிகளை எடுத்துக்கூறி, திருத்தந்தை தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

## தமிழ் மறைமாவட்டங்களின் ஒன்றிணைந்த மேய்ப்புப்பணித்திட்ட முன்னெடுப்பு

### அடுத்த ஆண்டு மூன்று தமிழ் மறைமாவட்டங்களிலும்

# மறைக்கல்வி ஆண்டு

யாழ்ப்பாணம், திருகோணமலை - மட்டக்களப்பு, மன்னார் ஆகிய தமிழ் மறைமாவட்டங்கள் தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப சில மேய்ப்புப் பணித்திட்ட முயற்சிகளில் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்ற கருத்து ஈழத்துக் கத்தோலிக்க திருச்சபையில் பல காலமாகவே நிலவிவருகின்றது. இதற்கமைய இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைப்பாளராக யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. ஜெயக்குமார் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மறைமாவட்டங்களின் இந்த ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணித்திட்டத்தின் ஒரு பகுதியாக எதிர்வரும் 2012ஆம் ஆண்டின் மேய்ப்புப்பணி மையப்பொருளாக ஒரே தலைப்பை மூன்று மறைமாவட்டங்களும் கொள்ளவேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு அமையாக அடுத்த ஆண்டு மறைக்கல்வி ஆண்டாக மூன்று தமிழ் மறைமாவட்டங்களிலும் கொண்டாடப்படவுள்ளது.

## குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும்

# அன்புத் தந்தை சேவியர் குரூஸ் அடிகளார்




மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வரும், மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் தலைவரும், மன்னார் சிறிய குருமட அதிபருமான அருட்திரு. ஏ. சேவியர் குரூஸ் அடிகளார் இவ்வாண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி தனது குருத்துவ வாழ்வில் ஐம்பது பொன்னான வருடங்களை நிறைவுசெய்து பொன்விழாக் காண்கின்றார்.

குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும் அன்புத்தந்தை சேவியர் குரூஸ் அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர் இறைமக்கள், பிறசமய சகோதரர்கள் சார்பாக மன்னா நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## வரலாறு பலகண்ட அருளாளர் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் திருநாள் ஒக்ரோபர் 22

மறைந்த திருத்தந்தை முத்திப்பேறுபெற்ற 2ஆம் அருள் சின்னப்பரின் திருநாளை ஒக்ரோபர் 22ல் கொண்டாட திருச்சபை தீர்மானித்துள்ளது. மறைந்த திருத்தந்தை அவர்கள் 1978ல் திருச்சபையின் தலைமைப் பொறுப்பை இந்த நாளில் ஏற்றுக்கொண்டதனாலேயே இந்த நாள் அவருடைய திருநாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.



புரட்சிப் புயலாய் புவியில் வலம்வந்த திருத்தந்தையே!
அருட்சியான உம் அருள் வதனம் கண்டு அக்களிக்கின்றோம்.
இரந்திடுவீர் எமக்காய் இன்னல்கள் தீர்ந்து வழிபிறக்க!

## குருக்களே! உலகப் போக்குடன் இணைந்து நல்ல மதிப்பீடுகளை இழக்காதீர்!

### குருக்களுக்கான திருப்பீடப் பேராயத்தின் தலைவர் வலியுறுத்து

குருக்களே, உலகப்போக்குடன் இணைந்து உங்களின் மதிப்பீடுகளை இழக்காதீர் என குருக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள திருப்பீட பேராயத்தின் தலைவரான கர்தினால் மவுரோ பியாக்கன்சு (Mauro Piaccnzu) தெரிவித்தார். அமெரிக்காவில் பணியாற்றும் அனைத்து இஸ்பானியக் குருக்களையும் சந்தித்து உரைநிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

21ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான குருக்கள் எவ்விதம் வாழவேண்டும், பணியாற்றவேண்டும் என்ற கருத்துக்களை அவர்களோடு பகிர்ந்துகொண்டார்.

இன்றைய உலகில் பணியாற்றும் குருக்கள், மக்களை மையப்படுத்திய



பணிகளில் பணிவான மனதோடு ஈடுபட்டு மனித மாண்பை உயர்த்தும் நோக்குடன் செயல்படுவதே முக்கியம். மக்களின் சேவைக்காக தங்களை வழங்குவதன் மூலமே கிறிஸ்துவை இந்த உலகிற்கு வழங்க முடியும். உலகம் பெறக்கூடிய சிறந்த கொடை இத்தகைய குருக்களே ஆகும் என்றார்.

## வாசக நெஞ்சங்களே!

மன்னா பத்திரிகை மன்னார் மறைமாவட்டப் பத்திரிகையாக இருந்தாலும் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும், உலகத்தின் பல நாடுகளிலும் வாழும் தமிழ் கத்தோலிக்க மக்கள் வாங்கி வாசித்துப் பயனடையும் வகையிலேயே இதனைத் தொகுத்து, வடிவமைத்து வெளிக்கொணர்கின்றோம்.

எனவே மன்னாவை வாங்குங்கள், வாசியுங்கள். உங்கள் உறவினர், நண்பர்களும் இதனைப் பெற்று பயனடைய ஊக்குவியுங்கள். மன்னாப் பத்திரிகையை பெற்றுக்கொள்ள எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்.

- மன்னா நிர்வாகம் -

## திருவுளச் சபையின் உலகளாவிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள

# டண்ஸ்ரன் அடிகளார் முதல் தடவையாக தாயகம் வருகை

திருவுளப்பணியாளர் சபையின் (Volantas Dei) உலகளாவிய தலைவராக (Director General) தெரிவுசெய்யப்பட்டுள்ள பேரருட்திரு செல்வரெட்னம் ஜேம்ஸ் டண்ஸ்ரன் அடிகளார் தனது புதிய பணிப்பொறுப்பை ஏற்ற பின்னர் ஏறக்குயை ஒரு வருடத்தின்பின் முதல் தடவையாக உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு தாயகம் வந்திருந்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரையிலான இரண்டு வாரகாலம் அவர் மேற்கொண்ட இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது திருவுளச் சபையின் உறுப்பினர்களையும், பல்வேறு அமைப்புக்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

கடந்த ஒக்ரோபர் 19ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்திற்கு இவர் விஜயம்செய்தபோது மன்னார் பேராலயத்தில் இவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்றைய தினம் மன்னார் பேராலயத்தில் சிறப்புத்திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றிய டண்ஸ்ரன் அடிகளார் தன் பணிவாழ்வின் ஆரம்பம் மன்னார் மறைமாவட்டம் என்று கூறினார்.

கனடா நாட்டைத் தல்லைமையகமாகக் கொண்ட திருவுளச் சபை இன்று 20 நாடுகளில் பரந்து கிளைபரப்பியுள்ள ஒரு உலகுசார் சபையாகும் (Secular Institute) இலங்கையில் இருக்கின்ற ஒரே ஒரு உலகுசார் சபையாகவும் இச்சபை விளங்குகின்றது. (தொடர்ச்சி 14ம் பக்கம்)



புதிய பணிப் பொறுப்பை ஏற்றிருக்கும் டண்ஸ்ரன் அடிகளாருக்கு செபம் நிறைந்த நல் வாழ்த்துக்களை மன்னா மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றது

## அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் மரியன்னைக்கு தங்க ரோஜா கையளிப்பு

ஒவ்வொருவருடமும் ஒக்ரோபர் 7ஆம் திகதி கொண்டாடப்படும் செபமாலை அன்னை திருநாளன்று 140 நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குழந்தைகள் அமெரிக்காவின் வோசிங்ரன் பேராலயத்தில் கூடிவந்து மரியன்னைக்கு ஒரு தங்க ரோஜா மலரை அளிப்பர். கடந்த ஒன்பது ஆண்டுகளாக அகில உலக குழந்தைகளின் திருநற்கருணை நேரம் என்ற இந்த முயற்சியை ஒட்டி ஒக்ரோபர் 7ஆம் திகதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் கூடிவந்த இந்த நிகழ்ச்சியை EWTN என்ற தொலைக்காட்சி நேரடி ஒலிபரப்புச் செய்தது. பற்றிமா அன்னையின் உலகப் பணியமைப்பும், புனித குழந்தைப் பருவக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வை நியூ ஓர்லியன்ஸ (New Orleans) பேராயர் கிறகரி அய்மொண்ட் (Gregory Aymond) தலைமை ஏற்று நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது



# வாசகர் எண்ணங்கள்

## நீத்தாரை நினைப்போம்

கார்த்திகை மாதம் நீத்தாரை நினைக்கும் மாதம். நம் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்திருக்கும் நம்மவருக்காக செபிக்கும் மாதம். நீத்தாரை நினைத்து நெக்குருகும் இம்மாதத்தில் மரணம் பற்றிய யதார்த்தத்தை விவிலியத்தின் பின்னணியில் சிந்தித்து தியானிப்பது பொருத்தமானதாகும்.

### மரணம்! மறுக்கமுடியாத யதார்த்தம்

மரணம் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒரு யதார்த்தம். "ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்பார்கள். மரணம் எந்தத் தருணம் வரும் என்று நமக்குத் தெரியாது. மரணம்! நாம் பெற்றுக்கொண்டதல்ல, பிறக்கும்போதே இருப்பது, வாழும்போது தொடர்வது, நேரம் வரும்போது நிகழ்வது. ரஸ்ய அறிஞர் டால்ஸ்டாய் என்பவர் சொல்லுவார், "நாம் எல்லோரும் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள்தான். ஆனால் தூக்கில் இடும் தினம்தான் வித்தியாசம்"

இதைத்தான் நம் தமிழ் கவிஞனும் சொல்லுகிறான், "கனவு காணும் வாழ்க்கை யாவும் கலைந்து போகும் கோலங்கள். பிறக்கின்றபோதே இறக்கின்ற சேதி இருக்கின்றதென்பது மெய்தானே. உடம்புகள் என்பது உண்மையில் என்ன? கனவுகள் வாங்கும் பைதானே!" மரணம் சிலருக்கு வேதனை, சிலருக்கு விடுதலை. சிலருக்கு வேடிக்கை, சிலருக்கு வாடிக்கை. சிலருக்கு முடிவு. சிலருக்கு விடிவு. மரணத்திற்கு வயதில்லை, வகுப்பு இல்லை, மரணத்திற்கு இடமில்லை, குணமில்லை, எங்கும்.... எப்போதும். ..... யாரையும் அது எதிர்கொள்ளும்.!

### மரணம் புரியாத புதிரா?

இந்தக் கணனி யுகத்திலே, விஞ்ஞான வளர்ச்சியின் விந்தைகளை அனுபவிக்கும் மனிதன், இன்றுவரை சில வினாக்களுக்கு விடை கண்டுபிடிக்க முடியாதவனாக விக்கித்து நிற்கின்றான். அந்த வினாக்களில் ஒன்று மரணத்திற்கு பின்னர் மனிதனுக்கு என்ன நடக்கின்றது என்பதாகும். அறிவியலைப் பொறுத்தவரை மரணம் என்பது ஒரு புரியாத புதிர், விடைகாணப்படாத வினா. ஆனால் மரணத்திற்குப் பின்னர் மனினுக்கு என்ன நடக்கின்றது என்பதைக் குறித்து திருவிவிலியம் நமக்கு மிகத்தெளிவான கருத்தை முன்வைக்கின்றது.

### விவிலியம் தரும் விளக்கம்

கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் கடிதத்தில், "நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்துபோனாலும், கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனிதக் கையால் கட்டப்படாதது, நிலையானது என்பது நமக்குத் தெரியும் அல்லவா?" (5:1) என பவுலடியார் கூறுகின்றார்.

பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில், "நமக்கோ விண்ணகமே தாய்நாடு. அங்கிருந்துதான் மீட்பராம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து வருவார் எனக் காத்திருக்கின்றோம். அவர் தமது ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தமது உடலின் சாயலாக உருமாற்றவும் அனைத்தையும் தமக்குப் பணியவைக்கவும் வல்லவர்." (3: 20 - 21) என அவர் தொடர்ந்து கூறுகின்றார்.

அதனால்தான் நாம் சொல்கின்றோம், ஒரு கிறிஸ்தவன் புதைக்கப்படுவதில்லை, அவன் விதைக்கப்படுகின்றான். ஒரு கிறிஸ்தவனின் அடக்கம் என்பது மறுவாழ்வின் தொடக்கம். ஒரு கிறிஸ்தவனின் மரணம் என்பது மறுபிறப்பின் ஜனனம். ஒரு கிறிஸ்தவனின் முடிவு என்பது மறுவாழ்வின் விடிவு.

1கொரி. 15: 54ம் வசனத்தில் பவுலடியார் கூறுகின்றார், "சாவு முற்றிலும் ஒழிந்தது, வெற்றி கிடைத்தது" என்று. அப்படிக் கூறிவிட்டு சாவைப் பார்த்து இப்படிக் கேட்கின்றார், "சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?"

ஆகவே கிறிஸ்தவர்களாகிய நமக்கு சாவு என்பது சரித்திரத்தின் முடிவு அல்ல. சாவையும் கடந்து வாழ்கின்றவர்கள் நாம். சாவை சாகடிக்கக் - கூடியவர்கள் நாம் என்பதை உணர்வோமா? இதை மற்றவர்களுக்கும் உணர்த்துவோமா?

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*

**அன்புடன் - அருட்பணியாளர் தமிழ் நேசன்.**
**பதிப்பாசிரியர் - மன்னா**

### *உலகமெல்லாம் சிறகடிக்கும் மன்னாவே!*

அன்பைச் சுமந்தபடி ஆயிரம் உறவுகள்
அகில இலங்கையில் உனக்குண்டு - ஆயினும்
உலகம் முழுவதும் உறவைத் தேடி சிறகு அடிக்கிறாயே....!
இன்னும் உயரப் பறந்து உன் உறவை வளர்க்க...
எனது நல்வாழ்த்துக்கள்!

*பிறிவின் குமார் பியூமிஷா, மடுக்கரை, நானாட்டான்.*

### *எம் இதயத்தைத் தேற்றும் மன்னாவே!*

எம் இதயத்தைத் தேற்றும் மன்னாவே!
மாதம் ஒருமுறை உன்னைக் காண்பதற்காய்
என் இதயம் தவித்துக்கொண்டிருக்கின்றது.
ஆலமரம் எவ்வாறு விழுது விடுகின்றதோ
அதேபோன்று உன் பணி சிறக்க என் இதயம் நிறைந்த
வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்!

*பி. ஜெயறூபி, வா. பெற்றான் கண்டல், அளவக்கை.*

### *என்னை வசியம் செய்யும் மன்னாவே!*



மாதா மாதம் வந்து - என்னை
வசியம் செய்யும் இதய மன்னாவே!
உன்னை வாழ்த்திட எந்த அகராதியில் நான்
வார்த்தைகளைத் தேடட்டும்?
உன்னோடு சேர்ந்து கவிதை சிறுகதை... எனக்
கலக்கிக்கொண்டிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும்
என் இதயத்தின் நல்வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகுக!

*ம. திரிஷாளினி, தாஸ்கோட்டம், வவுனியா.*

### *மீண்டும் எம் கையில் தவழுகின்றாய்!*

இனிய மன்னாவே, உன்னை விட்டுப்பிரிந்து பல நாட்களாயிற்று.
ஆனால் உன்னை நினையாத நாளேயில்லை!
நீதான் எங்களிடம் வராமல் தொலைவில் நின்றாயே!
இப்போது ஒருசில மாதங்களாய் காலடி எடுத்து வைத்துள்ளாய்.
தொடர்ந்தும் எம் மக்களின் கரங்களில் நிறைவாகத் தவழ்ந்திடு.
இன்னும் பல காலடி வைத்து கம்பிக்கூட்டில் அடைபட்டிருக்கும்
அப்பாவி இறைமக்களுக்கு நற்செய்தியைக் கொண்டுவா.
மிகுந்த எதிர்பார்ப்புடன் உனக்காக காத்துநிற்கின்றேன்.
இன்னும் பல இடம் சென்று உன் பணி சிறக்க
மீண்டும் என் வாழ்த்துக்கள்.

*ம. லின்ரா, அருணாசல நலன்புரி முகாம், யுனிற் 6B வீ. இல. 7023, செட்டிகுளம், வவுனியா.*

### *நெஞ்சைக் கிள்ளும் மன்னாவே*

உள்ளத்து உணர்வுகளை
எங்களுடன் பகிரிந்திடும் மன்னாவே!
உன்னதமான படைப்புக்களுடன் எங்கள் கைகளில்
தவளும் இனிய மன்னாவே!



உரிமையுடன் உறவாடும் உன் ஆக்கங்களை
உவந்து நாங்கள் வாசிக்கின்றோம்.
உண்மையாய் நாங்கள் பயன்பெறுகின்றோம்.
இதயம் கவர்ந்த இனிய மன்னாவே,
உன் மகத்தான பணிக்கு மகுடம் சூட்டுவதற்காக
ஏராளமான கரங்கள் காத்துக்கிடக்கின்றன!
வரம் தருவாயோ?இலட்சியம் நிறைவேற.

*ம. டிசாளினி, வவு / நெளுக்குளம் கலைமகள் ம.வி.*

## உண்மையின் எண்ணங்கள்

# வளர்ச்சிகண்டுவரும் மன்னார் மறைமாவட்டம்

## அமெரிக்காவில் இருந்து ஓர் அன்பு மடல்



எஸ். ஞானக்கோன் மார்க்.

அகில இலங்கை ரீதியில் கடந்த காலங்களில் பின்தங்கிய மாவட்டமாக எல்லாராலும் கணிக்கப்பட்டுவந்த மன்னார் மாவட்டம் இன்று உலகளாவிய ரீதியில் தேவ அழைத்தலின் விளைநிலமாக மாறி எல்லா மக்களாலும் போற்றக்கூடிய மறைமாவட்டமாக உருவெடுத்துள்ளது. ஓவ்வொரு புதிய வருடமும் புதிய குருக்களையும், துறவிகளையும் அருட்சகோதர, சகோதரிகளையும் மன்னார் மண் அள்ளிக்கொடுத்து வருகின்றது.

போரால் எம்மக்கள் ஓர் பக்கம் அழிந்தாலும் மறுபக்கம் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட தேவ அழைத்தலின் குடும்பங்களாக நாம் இன்று மாறி இருக்கின்றோம். இறைவன் இயேசு அன்று பெத்தலேகேம் நகரில் பிறந்து வாழ்ந்தாலும், இன்றைய காலங்களில் எமது குருக்கள் ஊடாகவும் அவர்கள் நாளாந்தம் ஒப்புக்கொடுக்கும் திருப்பலியின் ஊடாகவும் எம்மத்தியில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார். மன்னார் மறைமாவட்டம் உருவாக்கப்பட்டு 30 ஆண்டுகளை நாம் நிறைவுசெய்கின்றோம். இவ்வேளையில் மன்னார் மறைமாவட்டத்தை வழிநடத்திவரும் எமது நல்லாயனாம் இராயப்பு யோசப்பு ஆண்டகையின் அர்ப்பணமும், கட்டுக்கோப்பான வழிநடத்தலும், அவரின் ஆழமான ஆன்மீகமும் மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பைச் செய்துள்ளமையை மறுக்கமுடியாது.

குருவி தன் குஞ்சுகளை தன் இறக்கைகளுக்குள் வைத்து காத்து வருவதுபோல மன்னார் ஆயரும் தமது பிள்ளைகளான குருக்களை அரவணைத்து பணிசெய்து வருகின்றார். மன்னார் மறைமாவட்டத்திற்கு இறைவனால் அனுப்பப்பட்ட மாபெரும் தூதனாக, கொடையாக யோசப்பு ஆண்டகை விளங்குகின்றார். அந்த நல்ல ஆயனின் அன்பு மக்களாக நாம் அனைவரும் திகழ்வது மகிழ்ச்சிக்குரியது

மன்னார் மறைமாவட்டம் பல சாதனைகளை நிலைநாட்டி வளர்ந்து செழித்தோங்கி நிற்கின்றது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## அதிர்ச்சிதரும் துணுக்குச் செய்திகள்

- எத்தியோப்பிய அகதிகள் முகாம்களில் நிகழும் குழந்தை இறப்புக்கள் அதிர்ச்சியூட்டுவதாய் உள்ளன என்றும், இங்கு ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் தினமும் பத்துப் பேர் வீதம் இறக்கின்றனர் என்றும் ஐ.நா. கூறுகிறது.
- தெற்காசியாவிலேயே மிகவும் இராணுவ மயப்படுத்தப்பட்ட நாடாக இலங்கையைக் குறிப்பிட்டுள்ள 'நியுசிலண்ட் ஹெரால்ட்' என்ற இதழ், இலங்கையில் ஒவ்வொரு 10 இலட்சம் மக்களுக்கும் 8000த்திற்கும் அதிகமாக ஆயுதப்படையினர் இருப்பதாகக் கூறியுள்ளது.
- எந்த நாட்டிலும் சேர்க்கப்படாதவர்களாய், குடியுரிமை மறுக்கப்பட்டவர்களாய் இன்றைய உலகில் 120 கோடி மக்கள் வாழ்வதாக ஐ.நா.வின் இடம்பெயர்ந்தோருக்கான தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது. குடியுரிமை மறுக்கப்பட்டுள்ளோரில் பலர், சமுதாயத்தில் வலுவற்ற நிலையிலுள்ள தாழ்த்தப்பட்ட இனத்தவராகவும், பழங்குடி இனத்தவராகவும் இருக்கின்றனர் என்றும் இச்செய்தி கூறுகிறது.
- அதிகக் கடன் சுமையுள்ள இருபது வளரும் நாடுகளின் பட்டியலில் இந்தியா ஐந்தாவது இடத்தில் இருக்கிறது என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார்.
- 'இந்தியாவில் 50 விழுக்காட்டு விவசாயிகள் கடன் சுமையில் மூழ்கியுள்ளனர்' என மத்திய அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி. மெசஞ்சர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைத்தூதுப் பணிக்கான வாய்ப்பாக திருச்சபை ஊடகங்களைப் பயன்படுத்துகின்றது

## அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா



மறைத்தூதுப் பணிக்கான வாய்ப்பாக அமையும் ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இன்று திருச்சபை காட்டும் விருப்பு நற்செய்தியை அறிவிப்பதில் திருச்சபை கொண்டுள்ள நேர்நிலைப் பரிமாணத்தின் ஆரோக்கியத் தன்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது என மன்னார் மறைமாவட்டக் குருவும் தற்போது சுவிஸ் நாட்டு தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் இயக்குனராக இருப்பவருமான அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகையான உறவுகள் பத்திரிகையின் பத்தாம் ஆண்டு நிறைவையொட்டி அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். டலிமா அடிகளார் தொடர்ந்து கூறுகையில், தெளிவை நோக்கிய தேடலகளோடு தொடரும் மனித வாழ்விற்கு கிறிஸ்துவின் வாழ்வும், பணியும் கொடுக்கும் சுட்டிப்பான பதிலும், கிறிஸ்துவின் நற்செய்தியை மையமாகக்கொண்ட திருச்சபையின் விசுவாசக் கோட்பாட்டு உண்மைகளும் வலுவான புரிதல்களைக் கொடுக்கின்றன என்றார்.

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு 2012 ஒக்ரோபர் தொடக்கம் 2013 நவம்பர் வரை

# விசுவாச ஆண்டாகத் திருத்தந்தை அறிவிப்பு

புதிய நற்செய்தி அறிவிப்பாளர்களுக்காக வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் அண்மையில் திருப்பலி நிகழ்த்திய திருத்தந்தை அவர்கள் எதிர்வரும் வழிபாட்டு ஆண்டை விசுவாச ஆண்டாக அறிவித்தார்.

இவ்விசுவாச ஆண்டானது, 2012ம் ஆண்டு ஒக்டோபர் 11ம் திகதி தொடங்கி கிறிஸ்து அரசர் பெருவிழாவாகிய 2013ம் ஆண்டு நவம்பர் 24ம் திகதி நிறைவடையும்.

முழுமையாக மனம்மாறிக் கடவுளிடம் தன்னை அர்ப்பணிக்கும் திருஅருளின் மற்றும் அர்ப்பணத்தின் காலமாகவும், அவரில் நம் விசுவாசத்தை உறுதிப்படுத்தி மகிழ்ச்சியோடு அவரை அறிவிக்கும் காலமாகவும், மனிதரைப் பாலைவன வாழ்விலிருந்து வெளியே கொணருவதற்கு அகில உலகத் திருச்சபையின் பணிக்கு புதிய உந்துதலைக் கொடுப்பதாகவும் இவ்விசுவாச ஆண்டு இருக்கும் என திருத்தந்தை குறிப்பிட்டார்.

வத்திக்கான் பேதுரு சதுக்கத்தில் கூடியிருந்த சுமார் நாற்பதாயிரம் திருப்பணியாளர்களுக்கு மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை, இந்த விசுவாச ஆண்டு குறித்த திட்டங்களை விளக்கினார்.

திருச்சபையின் பணியானது கிறிஸ்துவைப் போன்று கடவுளின் இறையாட்சியை நினைவுகூர்ந்து கடவுள் பற்றிப்பேசுவதாகும் எனவும் குறிப்பாக தங்களது தனித்துவத்தை இழந்திருக்கும் கிறிஸ்தவர்களுக்குக் கடவுள் பற்றி எடுத்துரைப்பதாகும். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

### இன்றைய காலத்தின் மிகப்பெரிய அவல நிகழ்வு

## கலாச்சார சீரழிவே!

இன்றைய காலத்தின் மிகப்பெரிய அவல நிகழ்வு என்பது கலாச்சாரங்களின் சீரழிவே என்றார் இந்தியாவின் கௌஹாத்தி பேராயர் தாமஸ் மேனாம்பரம்பில்.

உலகமயமாக்கல் என்ற கொள்கையின்மீது தங்கள் சொந்த கலாச்சாரத்திலிருந்து விலகிச்செல்லும் மக்கள், அதனோடு இணைந்து தங்கள் பாரம்பரிய அறநெறி மதிப்பீடுகளையும் இழக்கிறார்கள் என்ற பேராயர், சமூக உணர்வுகளும், உறவுகளும் காணாமற் போவதாகவும் கவலையை வெளியிட்டார்.

## மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு

மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு நவம்பர் மாதம் 18ஆம் 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அடுத்த ஆண்டு 2012 மறைக்கல்வி ஆண்டாக இருப்பதனால் மறைக்கல்வி பற்றிய தலைப்பில் இம்மாநாடு நடாத்தப்படவுள்ளது.

குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் இம்மாநாட்டுக்கான பூர்வாங்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிறைவுபெறும் இந்த இளைஞர் ஆண்டின் செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு அறிக்கைகளை மாநாட்டுச் செயலர் அருட்பணி டக்ளஸ் பங்குகளிடம் கோரியுள்ளார்.

### ஜெயசேகரம் அடிகளாரின் முயற்சியில் உருவான யேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின்

# வெள்ளி விழா

தமிழர்கள் தொன்மையான பாரம்பரியங்களுக்கு உட்பட்டுள்ளதுபோலவே தமது புலப்பெயர்வுகளின்போதும் பண்பாட்டையும் கலைகளையும் சமய நெறிக்குரிய அடையாளங்களையும் சுமந்துசென்றார்கள்.

அவர்கள் பல பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்கை அழிவுகளாலும் பின் அரசியலாலும் ஒருசில நூற்றாண்டுகளின் முன் பொருண்மிய பின்னடைவுகளாலும் பல முறை இடப்பெயர்வுகளைச் சந்தித்து இறுதியாக சென்ற நூற்றாண்டின் இறுதியில் போரினால் இடம்பெயர்ந்தனர். அவ்வாறு இடம்பெயர்ந்தோரில் பலர் யேர்மன் நாட்டில் குடியுகுந்தனர் என்பது எம்மைப்பற்றி வரலாறு கூறும் உண்மைகளாகும்.

அவ்வாறு புலம் பெயர்ந்த கத்தோலிக்க தமிழர்கள் பண்பாட்டிலும் மொழிப்பற்றிலும் இன்றுவரை உறுதியாக வாழ்வதற்கு, பல இடர்களின் மத்தியில் அன்று ஆரம்பிக்கப்பட்டதே யேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் ஆகும்.

அவ்வாறு 1987இல் உருவான யேர்மன் ஆன்மீகப் பணியகம் வருகிற ஆண்டில் தன் இருபத்தைந்து அகவையைப் பூர்த்திசெய்து வெள்ளி விழா நிறைவைக் கொண்டாட உள்ளது.

அதனடிப்படையில் இவ்வாண்டு கேவலார்த் திருவிழாவின்போது வெள்ளிவிழாக் கொடி ஏற்றப்பட்டு, 2011 ஒகஸ்ட் தொடக்கம் 2012 ஒகஸ்ட் வரையுள்ள ஓராண்டு காலப்பகுதி வெள்ளி விழா ஆண்டாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இந்த யேர்மன் ஆன்மீகப் பணியகத்தை 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்துவைத்த அருட்பணியாளர் ஜெயசேகரம்



வெளிநாடுகளில் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகங்கள் உருவாக முன்னோடியாகத் திகழ்ந்த அருட்பணியாளர் ஜெயசேகரம் அடிகளார்.

அவர்கள் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர். தற்போது இப்பணியகத்தின் இயக்குனராக இருக்கும் அருட்பணியாளர் அன்ரனி பேர்னாண்டோ பெனற் அடிகளார் யூபிலிவிழா ஆயத்தங்களை மேற்கொண்டுவருகிறார்.

## அடுத்த உலக இளையோர் தினம் பிரேசில் நாட்டில்

அடுத்து உலக இளையோர் தினக் கொண்டாட்டங்கள் 2013 ஆம் ஆண்டு பிரேசில் நாட்டில் ரியோ டி ஜெனீரோ நகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## எழுத வாசிக்கத் தெரியாதோர்

தற்போது உலகெங்கும் 793 மில்லியன் வயது வந்தோர் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக உள்ளதாக ஐ. நா. அமைப்பின் யுனெஸ்கோ நிறுவனம் எடுத்த அண்மைய கணிப்பில் தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையில் அரைவாசிப்பேர், மக்கள் தொகை செறிந்த நாடுகளான சீனா, இந்தியா, பங்களாதேஸ் மற்றும் பாக்கிஸ்தான் போன்ற நாடுகளில் வாழ்கின்றனர். இந்த முழு எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பகுதியானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் எழுத்தறிவுவீதம் கணிசமாக அதிகரித்த நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 100 வயதிலும் மறையுரையாற்றும் அங்கிலிக்கன் குருவானவர்

பிரித்தானிய - லீட்ஸ் நகரைச் சேர்ந்த யோண் கிளேற்றன் (John Clyton) எனும் அங்கிலிக்கன் குருவானவர் கடந்த யூன் மாதம் தமது 100வது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். தமது குருத்துவத்தை 1936ல் பெற்றிருந்த இவர் தொடர்ந்தும் தமது இரண்டாவது நூற்றாண்டில் பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளார்.

1976ல் உத்தியோகபூர்வமாக ஓய்வுபெற்ற இக்குருவானவர் அங்கலிக்கன் திருச்சபையின் வழிபாடுகளில் தவறாது மாதம் ஒருமுறை மறையுரையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

### விமான ஓட்டிகளின் முன்னாள் பயிற்சியாளர்

## ஆயராக நியமனம்

முன்னாள் விமான ஓட்டிகளின் பயிற்சியாளர் 55 வயதான அருட்பணி. றொபேட் குறூஸ் (Robert Gruss) அவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் சுடக்கோற்றா (Suddakota) மாநிலத்திலுள்ள றப்பிட் சிற்றி (Rapid City) மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றுள்ளார்.

ஆக்கென்சாசிலுள்ள ரெக்சக்கானா எனும் ஊரைச் சேர்ந்த குறூஸ் அவர்கள் இறையியல் கற்பதற்குமுன்பாக விமான ஓட்டியாகவும் விமானப் பயிற்சியாளராகவும் தொழில் புரிந்தார். மிக அதிகமான 200,000 சதுரக் கி. மீ. பரப்பளவையும் மிக ஐதாக பலநூறு கி. மீ. தொலைவில் வாழும் 800,000 மக்களையும் கொண்டுள்ள இந்த மறை மாவட்டத்தில் ஆயராகப் பணியாற்றும் இவருக்கு விமானம் ஓட்டத் தெரிந்துள்ளது எதிர்காலத்தில் அவரது பங்குத் தரிசிப்புகளுக்கு மிக உதவியாக இருக்கும் என எண்ணப்படுகின்றது.

## ஈராக் பேராயரின் முன்மாதிரிகை

முஸ்லீம்களின் நோன்பு மற்றும் செபத்தின் காலமாகிய இரம்ழான் மாதத்தையொட்டி, ஈராக்கின் கிர்குக் கத்தோலிக்கப் பேராயர் லூயிஸ் சாக்கோ தலைமையிலான குழு, 300 கிலோவுக்கு அதிகமான மருந்துகளையும் பிற உதவிகளையும் உள்ளூர் மருத்துவமனைக்குக் கொடுத்து தன் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

## புனித அந்தோனி மரிய கிளாரட் நற்கருணை மூலம் பெற்றுக்கொண்ட தனிவரத்தின் 150வது ஆண்டு



ஆவணி மாதம் 26ம் திகதி கிளரீசிய துறவற சபையின் ஸ்தாபகரான புனித அந்தோனி மரிய கிளாரட் (1807 – 1870) 'நற்கருணை' மூலம் பெற்றுக்கொண்ட 'தனிவரத்தின்' 150வது ஆண்டு நிறைவாகும்.

1861ம் ஆண்டு, செபத்தின் மூலம் பெற்ற இறையனுபவத்தில் மூழ்கி இருக்கும்போது, தூய ஆவியானவரின் தூண்டுதலினால் இவ்விசேட வரமானது அவருக்கு அருளப்பட்டது. இவர் இவ்வரிய வரத்தினைப் பெற்று, 'வாழும் நற்கருணைப் பேழை" என்னும் சிறப்புப் பெயரை இறைவனின் ஆவியினூடாக பெற்றுக்கொண்டார்.

இத்தனிவரம் பற்றி அவர் விபரிக்கும்போது, .... 1861ம் ஆண்டு ஆவணி 26ம் நாள் மாலை 7.00 மணியளவில் லாகிரான்ஹா என்னுமிடத்திலுள்ள 'திருச்செபமாலை' ஆலயத்தில் செபித்துக்கொண்டிருக்கும்போது திவ்விய நற்கருணையை எனது உள்ளத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கக்கூடிய அருளை கடவுள் எனக்கு அருளினார்." அவர் இவ்வுலகில் வாழ்ந்த இறுதி நாட்களில் இயேசுவின் உடலையும், திரு இரத்தத்தையும் மறுதிருப்பலி ஒப்புக்கொடுக்கும்வரை எந்தவிதத்திலும் மாசுபடாமல் பாதுகாப்பாக வைத்திருக்கும் அனுபவத்தை மரியன்னையுடன் பகிர்ந்துகொள்கிறார். "கடவுளின் திருவுடலை தாங்கும் மனித பேழையாக நான் இருக்கின்றேன். ஆராதனைக்குரிய இத்திருவுடலை இரவும் பகலும் சுமக்கிறேன். இதைத் தாங்கிச் சுமப்பதற்கு அடியேன் தகுதியற்றவன் என்ற எண்ணத்தை எப்போதும் என்னுள் வளர்த்துக்கொள்கிறேன்" என்றார்.

அவரது வாழ்வில், இதுவே இவர் பெற்ற அதிவிசேட சிறப்பு வரமாகக் கணிக்கிறார். ஏனெனில் தன்னையும் கிறிஸ்துவையும் முழுமையாக இணைக்கக் காரணமாக இருந்தது இவ்வரம்தான் என்கிறார். உயிர்த்த ஆண்டவரும் புனித கிளாரட்டின் உள்ளம் என்னும் பேழையில் குடிகொண்டு அவருடைய பணிவாழ்வுக்கு தேவையான சக்தியை அளித்து, முத்திபேறுபெற்ற (அருளாளர்) நிலைக்கு உயர்த்தினார். இப்புனிதர் எமக்கு விட்டுச்சென்ற செய்தி "எச்சந்தர்ப்பத்திலும் கிறிஸ்துவுக்கும் அவரது நற்செய்திக்கும் பிரமாணிக்கமாய் வாழவேண்டும்" என்பதாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்வு தரும் வார்த்தை

## பாவம் எப்படிப் பிறக்கின்றது

### விவிலியப் பின்னணியில் ஓர் பார்வை!

திருமதி. என். லோஜி, நூறு வீட்டுத்திட்டம், மன்னார்.

"வைகறைப் புதல்வனாகிய விடிவெள்ளியே, வானத்திலிருந்து நீ வீழ்ந்தாயே! மக்களினங்களை வலிமைகுன்றச் செய்தவனே, வெட்டப்பட்டுத் தரையில் வீழ்ந்தாயே. 'நான் விண்ணுலகிற்கு ஏறிச்செல்வேன். இறைவனுடைய விண்மீன்களுக்கு மேலாக உயரத்தில் என் அரியணையை ஏற்படுத்துவேன். வடபுறத்து எல்லைப் பகுதியிலுள்ள பேரவை மலைமேல் வீற்றிருப்பேன். மேகத்திரள்மேல் ஏறி உன்னதருக்கு ஒப்பாவேன்' என உன் உள்ளத்தில் உரைத்தாயே. ஆனால் நீ பாதாளம்வரை தாழ்த்தப்பட்டாய். படுகுழியின் அடிமட்டத்திற்குள் தள்ளப்பட்டாயே" (ஏசாயா 14:12-15).

மேற்சொல்லப்பட்ட விடிவெள்ளியாகிய அலகை பாவத்தை உண்டாக்கியது. அதனால் அலகைக்கு செவிமடுக்கின்ற எல்லாரும் பாவத்தைப் பிறப்பிக்கின்றனர். இதனால் ஒவ்வொருவரிடமும் "தீய நாட்டம் கருக்கொண்டு பாவத்தைப் பெற்றெடுக்கின்றது. பாவம் முழுவளர்ச்சியடைந்து சாவை விளைவிக்கின்றது" (யாக் 1-15).

எனவே மனிதா! நீயே பாவத்தை பெற்றெடுத்தாய். நீ பாவத்தைப் பெற்றெடுத்த நாள்முதல் இறை அன்பையும், இறைவார்த்தைகளையும் சந்தேகித்தாய். எதையெல்லாம் இறைவன் வேண்டாமென்றாரோ அதையே நீ சொந்தமாக்கிக்கொண்டு வாழ்கின்றாய். இவ்வாறு நீ சாவால் கவ்வப்பட்டு அழிந்துகொண்டிருக்கின்றாய். ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது. அதுபோலவே எல்லா மனிதரும் பாவம் செய்ததால் எல்லா மனிதரையும் சாவு கவ்விக்கொண்டது.

### நீ ஒரு பாவியா?

"அந்தப் பாவிகளுள் முதன்மையான பாவி நான்" (1 தீமோ 1:15). "ஆனால் பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்கிறோம். உண்மையும் நம்மிடம் இராது" (1யோ 1:8).

"நாம் பாவம் செய்யவில்லை என்போமென்றால் அவரைப் பொய்யராக்குவோம். அவருடைய வார்த்தை நம்மிடம் இல்லை என்றாகும்." (1யோ 1:10).

"பாவம் செய்யாத மனிதரே இல்லை" (2 குறி. 6:36).

"மாறாக நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார்" (1 யோ 1:9).

நாம் பாவிகள் என்பது நமக்குத் தெளிவாகின்றது. நாம் ஒவ்வொரும் பாவிகளே என்பதை உணர்ந்துகொள்வோம்.

### இயேசுவே உன் மீட்பர்

"ஒருவர் பாவம் செய்ய நேர்ந்தால் தந்தையிடம் பரிந்து பேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கின்றார். அவரே மாசற்ற இயேசுக் கிறிஸ்து. நம் பாவங்களுக்கு கழுவாய் அவரே, நம் பாவங்களுக்கு மட்டுமல்ல அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே" (1 யோ 2:1, 2).

"இவர் வழியாக உங்களுக்குப் பாவ மன்னிப்பு உண்டு என அறிவிக்கப்படுகின்றது." (தி.பணி 13:38).

"மேலும் வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் நடுவராகக் கடவுளால் குறிக்கப்பட்டவர் இயேசுதாம் என்று மக்களுக்குப் பறைசாற்றவும் சான்றுபகரவும் அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரிடம் நம்பிக்கைகொள்ளும் அனைவரும் அவரது பெயரால் பாவமன்னிப்புப் பெறுவர் என்று இறைவாக்கினர் அனைவரும் அவரைக்குறித்துச் சான்றுபகர்கின்றனர்." (தி.பணி 10:43).

இயேசு தம் இரத்தத்தினாலும், வார்த்தையினாலும், மன்னிப்பினாலும் உன்னை மீட்கிறார். நீ ஒரு பாவி என்பதை ஏற்று, உன் பாவத்தை ஒப்புக்கொண்டால் இயேசு உன்னை மன்னிப்பார். உன் அவல நிலையை உணர்ந்து மன்னிப்புக் கேள்.

### ஒரு பாவியின் அவல நிலை

நீ பாவம் செய்தால் உன் நிலை என்ன? எந்த நிலையில் நீ இருக்கின்றாய்? கீழ்க்காணும் இறைவார்த்தை உனக்கு ஒளிதரும்.

**இறைமேன்மையை இழந்தவர்கள்!** "ஏனெனில் எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்துபோயினர்" (உரோ 3 :23).

**அடிமைகள் :** "எதற்கு அடிமைகளாக உங்களை ஒப்புவித்து கீழ்ப்படிகிறார்களோ அதற்கே நீங்கள் அடிமைகள் என்பது உங்களுக்குத் தெரியும் அன்றோ? அப்படியிருக்க நீங்கள் பாவத்திற்கு உங்களையே அடிமையாக்கினால் சாவீர்கள்." (உரோ 6:16).

**செத்தவர்கள் :** "பாவம் செய்பவரே சாவர்" (எசே 18:20). "இறைமகனைக் கொண்டிருப்போர் வாழ்வைக் கொண்டுள்ளனர் அவரைக் கொண்டிராதோர் வாழ்வைக் கொண்டிரார்." (1யோ 5:12).

**அலகையின் மகன் :** "சாத்தானே உங்கள் தந்தை. உங்கள் தந்தையின் ஆசைப்படி நடப்பதே உங்கள் விருப்பம்" (யோ 8:44)

**மனக்கண் குருடானவன் :** "இவ்வுலகின் தெய்வம் நம்பிக்கை கொண்டிராதோரின் அறிவுக் கண்களைக் குருடாக்கிவிட்டது. எனவே அவர்கள் கடவுளின் சாயலாய் விளங்கும் கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தி ஒளியைக் காணமுடிவதில்லை" (2 கொரி 4:4)

**சாவுக்குரியவன் :** "பாவத்துக்கு கிடைக்கும் கூலி சாவு" (உரோ 6:23).

**தீட்டுப்பட்டவன் :** "ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தமை, களவு, கொலை, விபச்சாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன. தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன." (மாற் 7, 21, 23).

**நன்மையைக் கெடுப்பவன் :** "ஒரே தவறு நன்மைகள் பலவற்றை கெடுத்துவிடும்" (ச.உரை 9:18).

### பாவங்களை மறைக்க முடியுமா?

அனைத்தையும் ஊடுருவிப்பார்க்கும் ஆண்டவனுக்கு முன்னால் எதையும் மறைக்க முடியாது. ஏனெனில் அவருக்கு எல்லாம் வெட்ட வெளிச்சமாகத் தெரியும். உள்ளங்களை ஆராய்ந்து பார்க்கிறவர், உணர்வுகளைத் தெரிபவர், எல்லாவற்றையும் அறிபவர், மறைவான உன் பாவங்களை அவரே வெளியாக்குவார். ஆதாம், காயின், ஆகார், அனனியா, சப்பிராள் ஆகியவர்கள் தம் பாவங்களை மூடிமறைக்க முற்பட்டனர். ஆனால் அவர்கள் தோற்றுப்போனார்கள். எனவே என் அருமை சகோதர சகோதரியே, நீ உன் பாவத்தை மறைக்க முற்பட்டு தோற்றுப்போகாதே. இறைவனை நீ இழந்துவிட்டால் எல்லாவற்றையும் இழந்தவனாவாய்.

"தம் குற்றப் பழிகளை மூடி மறைப்பவரின் வாழ்க்கை வளம்பெறாது. அவற்றை ஒப்புக்கொண்டு விட்டுவிடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவர்" (நீ.மொழி 28:13).

"எனவே ஆண்டவராகிய கடவுள் அவன் உருவாக்கப்பட்ட அதே மண்ணைப் பண்படுத்த அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பிவிட்டார்" (தொ.நூ 3:23).

"எவ்வகை எண்ணமும் அவருக்குத் தெரியாமல் இருப்பதில்லை, ஒரு சொல்கூட அவருக்கு மறைந்திருப்பதில்லை" (சீராக் 42:20).

"என் கண்ணில் படாதபடி எவராவது பதுங்கிடங்களில் ஒளிந்துகொள்ள முடியுமா? என்கிறார் ஆண்டவர். விண்ணிலும் மண்ணிலும் நிறைந்திருப்பது நானல்லவா? என்கிறார் கடவுள்" (எரேமி. 23:24).

"ஆண்டவராகிய நானே இதயச் சிந்தனைகளை ஆய்பவர், உள்ளுணர்வுகளைச் சோதித்து அறிபவர்" (எரேமி 17:10).

"உன் குற்றங்கள் மறைக்கப்படவில்லை. நீங்கள் இழைத்த தவறுகள் வெளியாக்கப்பட்டுள்ளன. உங்கள் செயல்கள் எல்லாவற்றிலும் உங்கள் பாவங்கள் காணப்படுகின்றன." (எசே. 21:24).

"தலைவராகிய ஆண்டவரின் கண்கள் பாவம் செய்யும் அரசை உற்றுப் பார்க்கின்றன. மண்ணுலகில் இராதபடி அதை நான் அழித்துவிடுவேன்" (ஆமோ 9:8).

"அந்த அகல்கள் ஏழும் நிலவுலகெங்கும் சுற்றிப் பார்க்கும் ஆண்டவரின் கண்கள் என்றார்." (செக். 4:11).

"ஆண்டவரின் கண்கள் கதிரவனைவிட பத்தாயிரம் மடங்கு ஒளி படைத்தவை! அவை மாந்தரின் வழிகளையெல்லாம் காண்கின்றன. மறைந்திருப்பவற்றை அறிகின்றன என்பதை அவர்கள் அறியார்கள்." (சீரா 23:19)

### நிறைவுரை

எனவே தொடக்கநூல் மூன்றாம் அதிகாரத்திலே சொல்லப்பட்டிருப்பதுபோல கீழ்ப்படியாமையால் ஆதாம் ஏதேனை இழந்தான். பாவமும் அவனைத் தொடர்ந்தது. அதனால்தான் அதை ஜென்ம பாவம் என்று திருச்சபை நமக்குக் கற்றுத் தந்து, திருமுழுக்கினால் நம்மைக் கழுவுகின்றது. இன்றுவரை ஆதாமின் பாவத்தை மறைக்க முடியாமல் போய்விட்டமை தெளிவாகின்றது. எனவே அதைக் கழுவி தூய்மையாக்க உன் பாவத்தை அறிக்கையிடு. அது இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு இல்லாமல் போகும்.

நான் பாவி நான் பாவி
இயேசுவே என்னை மன்னியும்
உம் இரத்தத்தால் என்னைக் கழுவும்

உடலிச்சைப் பாவங்கள் புரிந்தேன்
உடல்நலம் இழந்து திரிந்தேன்
உடலினை ஒறுத்திடத் துணிந்தேன்
உடல்நலம் தாரும் என் தேவா

இறைபணியாற்றிட அழைத்தீர்
இறை உம்மை மறந்து நான் வாழ்ந்தேன்
என் இறைவா நீர் எனை ஏற்பேன்
என் பாவம் பொறுத்தென்னை ஏற்பீர்.

## யார் கிறிஸ்தவன்?

கி. அருளப்பு,
தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்
7ம் வட்டாரம், விடத்தல்தீவு.

கிறிஸ்து + அவன் = கிறிஸ்தவன். முதன் முதலில் அந்தியோக்கியா என்னும் இடத்தில் இயேசுவைப் பின்பற்றுவோர் ஏனைய மக்களால் 'கிறிஸ்தவர்கள்' என அழைக்கப்பட்டனர். (தி.தூ.11.26) அதுவரை அவர்கள் சீடர்கள் என்றே அழைக்கப்பட்டனர். தற்போது திருமுழுக்குப்பெற்ற நாம் அனைவரும் கிறிஸ்தவன் - கிறிஸ்தவள் என்று அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்து ஒரு மதத்தை ஏற்படுத்த இந்த உலகிற்கு வந்தவரல்ல. கிறிஸ்துவின் போதனைகள், உபதேசங்கள் ஒரு தனிப்பட்ட பிரிவினருக்கு மட்டும் உரியவை அல்ல, அவை மனித சமூகம் அனைத்திற்கும் பொதுவானவை. "யூதன் என்றோ கிரேக்கன் என்றோ, அடிமை என்றோ, உரிமைக் குடிமகன் என்றோ வேறுபாடில்லை. ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை" (காலா. 3.28). அப்படியானால் கிறிஸ்தவர்களென்று ஒரு பிரிவினர் அழைக்கப்படக் காரணம் என்ன? ஆரம்ப காலத்தில் கிறிஸ்துவின் போதனைகளை தங்கள் வாழ்க்கையில் கைக்கொள்வோமென உறுதிபூண்டு ஒரு குழுவாய் சேர்ந்தனர் பலர். அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளவில்லை. ஆனால் ஏனைய மக்கள் அவர்களில் கிறிஸ்துவின் போதனையை நடைமுறையில் கண்டதால் அவனே கிறிஸ்து - அதாவது கிறிஸ்து அவன் என்று அழைக்கலாயினர்.

ஒருவனை கிறிஸ்தவன் என அறிந்துகொள்வதற்கு அவன் பெயரோ மதமோ மொழியோ பயன்படாது. இக்காலத்தில் இயேசுவின் போதனைக்கும் வாழ்வுக்கும் எந்த ஒரு தொடர்பு இல்லாதவர்களும் பிறப்பாலும் பெயராலும் மற்றவர்களால் கிறிஸ்தவர்களென அழைக்கப்படுகின்றனர். அதே நேரத்தில் கிறிஸ்துவின் போதனைகளை சரிவர நிறைவேற்றிவரும் உண்மைக் கிறிஸ்தவர்கள் வெளிப்படையாக கிறிஸ்தவர்களென அழைக்கப்படாத நிலை இருப்பதைக் காணுகின்றோம். ஏன் இந்த நிலை? ஒருவன் உள்ளத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது. அவர் சொல்லும் செயலும் கிறிஸ்துவை வெளிப்படுத்த வேண்டும். இயேசு மூன்று நபர்களைத் தேர்ந்துகொண்டார். முன்னவர் சீமோன் இராயப்பர், அடுத்தவர் அருளப்பர், மற்றவர் இயாகப்பர், இந்த அப்பர்களோடு சேர்த்து ஏனைய ஒன்பது பேரையும் தேர்ந்து அப்போஸ்தலர்கள் எனப் பெயரிட்டார். "உன் பெயர் பேதுறு. இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா. விண்ணரசின் திறவுகோலை உனக்குத் தருவேன்" என்று இராயப்பரிடம் கூறுகின்றார். (மத். 16 : 18-20).

முன்னோர்கள் சொன்னவற்றை அழிப்பதற்கோ!
முறைமாற்றி வைப்பதற்கோ வந்தேனில்லை!
என்னாளும் அவற்றை நிறைவேற்ற வந்தேன்! இதை
என்தன் கடமையென ஏற்றுக்கொண்டேன்.
விண்ணோடு மண்ணுலகம் உள்ளமட்டும்!
வேதங்கள் நிறைவேறும் சட்டம் வாழும்.
என்னாளும் ஓர் எழுத்தும் பொய்யாகாது இது உண்மை.

. என்று தான் உருவாக்கிய திருச்சபையை அவர்களிடம் ஒப்படைத்தார். அது இன்றுவரை பரந்து விரிந்து பாரெங்கும் பரவிநிற்கிறது. எத்தனையோ தடைகள் இடையூறுகள் மத்தியிலும் கறை திரை இன்றி வளர்ந்து வருகின்றது. இன்று எம் மத்தியில் இருக்கும் பாப்பரசர் 16வது ஆசீர்வாதப்பர், இராயப்பர் வரிசையில் 265வது தலைமை என்பதில் திருச்சபை பெருமிதம் கொள்கிறது. இராயப்பர் எங்கேயோ அங்கேயே திருச்சபை. இதுவே பாறை என்பதன் மறைபொருள். இச்சபைக்கென்று சில வெளியரங்கமான பாரம்பரியங்கள், சட்டங்கள், சடங்காசாரங்கள் உண்டு. அவைகளையும் கிறிஸ்தவன் செய்யவேண்டியவனாக இருக்கின்றான். இவை இல்லாத பட்சத்தில் கிறிஸ்தவன் அல்லாதவனாகிறான்.

கிறிஸ்துவைப் பின்பற்றிய மனிதர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று அவரது வார்த்தையால் ஈர்கப்பட்டு அவரைப் பின்பற்றியவர்கள். இன்னொன்று குணம்பெறும் பொருட்டு அவரைத் தேடியவர்கள். வெறுமனே புதுமைக்காகவும் குணத்திற்காகவும் வந்தவர்களே இவர்கள். அதைப் பெற்றவுடன் அவரைவிட்டு விலகிவிடுகின்றனர். ஆனால் இயேசுவைப் பின்பற்றியவர்களோ தங்களுடைய சுயநல எதிர்பார்ப்புக்களை முன்வைக்காமல் இயேசுவை முன்வைத்து அவரைப் பின்பற்றியவர்கள். இவர்கள்தான் சீடராக மாறமுடியும். வெறுமனே புதுமைகளை எதிர்நோக்கி இருந்தோமென்றால் நாம் வெறும் பக்தர்களே. அதாவது பெயரளவில் கிறிஸ்தவர்களே! இயேசு பக்தர்களை அல்ல, சீடர்களையே தேடுகின்றார். அதாவது மெய்கிறிஸ்தவனையே தேடுகின்றார். நாம் பக்தர்களா, சீடர்களா என்பதை சுய ஆய்வு செய்வோம்.

கிறிஸ்தவர்கள் என்ற கௌரவப் பெயரைப் பெற்றுக்கொண்டு காலத்துக்குக் காலம் அருட்சாதனங்களைப்பெற்று திருவிழாக்களையும் புனிதர்கள் விழாவையும் வெறுமனே கொண்டாடி ஏனோ தானோ என்று நாம் இருப்போமானால் நாங்களும் ஒரு முடக்குவாதக்காரனைப்போலவே இருப்போம். உள்ளத்தால் கிறிஸ்தவனை நாம் அறியும்விதம் அவன் மனம். மரம் நல்லது, கெட்டது என்பதை எவ்வாறு அதன் கனி வெளிப்படுத்தி நிற்கின்றதோ அவ்வாறே மனிதனின் நிலையை அவன் சொல்லும் செயலும் வெளிப்படுத்தி நிற்கும்.

கிறிஸ்தவன் வேறு, கிறிஸ்தவம் வேறு. இயேசுவின் விழுமியங்களை அவரது போதனைகளைச் சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தி நிற்பவனே கிறிஸ்தவன்! எனவே ஒருவனை கிறிஸ்தவனென உணர்த்துவது புறம்பான எந்த அடையாளமோ பிறப்போ அல்ல! அவனது சொல்லும் செயலுமே. கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற நாம் உண்மைக் கிறீஸ்தர்களா, அன்றேல் பெயரளவில் கிறீஸ்தவர்களா என இன்றே முடிவெடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை நிர்வாகிகள்



பொதுநிலையினர் பேரவை உருவாக்கக் கருத்தரங்கில் பங்குபற்றிய மறைமாவட்ட பிரதிநிதிகளையும், மறைமாவட்ட ஆயரின் செய்தியை குருமுதல்வர் வழங்குவதையும், புதிதாக தெரிவுசெய்யப்பட்ட பொதுநிலையினர் பேரவையின் நிர்வாக உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்வதையும் படங்களில் காண்கின்றீர்கள்.

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையானது கடந்த 31.07.2011 அன்று உருவாக்கப்பட்டது. அன்றைய தினம் மன்னார் மறைமாவட்ட பங்குகள் ஒவ்வொன்றிலுமிருந்து ஐந்து பேர் வீதம் தெரிவுசெய்யப்பட்ட பொதுநிலையினர் 140 பேர் காலை 9.00 மணிக்கு மன்னார் குடும்பநல பொதுநிலையினர் பணி மையத்தில் கூடியிருந்தனர். மேற்கூறப்பட்ட பங்கு பிரதிநிதிகள் ஐவரில் இருந்து அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட இருவர் வீதம் அறுபது உறுப்பினர்கள் மண்டபத்தின் முன் பகுதியில் அமர்த்தப்பட்டனர். ஏனையவர்கள் பின்பகுதியில் அமர்ந்துகொண்டனர்.

மேடையில் மன்னார் ஆயரின் பிரதிநிதியாகிய குரு முதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரும் குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா கொடுதோர் அடிகளாரும் தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்து பங்குபங்காகச் சென்று பொதுநிலையினர் பேரவையைப்பற்றி விளக்கங்கள் கொடுத்து அனைவரையும் தயார்படுத்திய அருட்பணி. இரட்சணியதாஸ் அடிகளாரும் அமர்ந்திருந்தனர்.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து அன்றைய நிகழ்வின் நோக்கம் பற்றி அருட்பணி. இரட்சணியதாஸ் அடிகளார் விளக்கம் கொடுத்தார். தேனீர் இடைவேளையை தொடர்ந்து அடித்தளக் குழுக்களை உருவாக்க கொடுக்கப்பட்ட பயிற்சிக்கான சுருக்கம், அருட்பணிப் பேரவை பற்றிய விளக்கம் என்பவை வழங்கப்பட்டன. பின் குழு ஆய்வும் தொடர்ந்து மதிய உணவும் இடம்பெற்றது. பின்னர் அனைவரும் மீண்டும் ஒன்றுகூடினர். யாப்பு விதிமுறைகளின் விளக்கத்தை சுருக்கமாக அருட்பணி. இரட்சணியதாஸ் அடிகளார் எடுத்துரைத்தார்.

மன்னார் மறைமாவட்டத்திற்கென பொதுநிலையினர் பேரவையை அமைப்பதற்கான தேர்தலை நடாத்துமாறு ஆயரின் பிரதிநிதியாக வருகை தந்திருந்த குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

ஆயரின் பணிப்பின் பேரில் யாப்பின் விதிமுறைகளுக்கு அமைவாக திரு. கபிரியேல் ஜேக்கப் அவர்கள் (காத்தான்குளப் பங்கு) தலைவராக நியமனம் பெறுகிறார் என குருமுதல்வர் அறிவித்தார். தொடர்ந்து ஏனைய நிர்வாகிகள் வாக்களிப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர். செயலாளராக திரு. S. எட்வேட் (மன்னார் பங்கு), பொருளராக திருமதி. ஆபிரகாம் சோசை (வங்காலைப் பங்கு), துணைப் பொருளராக A.D. தேவதாசன் (முருங்கன் பங்கு), இணைச் செயலராக திருமதி. A.M. லூசியா (இறம்பைக்குளம் பங்கு), துணைத்தலைவராக திருமதி. T. வியாகுல நாயகி (வேப்பங்குளம் பங்கு), செய்தித் தொடர்பாளராக திரு C. கட்சன் றோச் (பள்ளிமுனைப் பங்கு) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். புதிதாக தெரிவுசெய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் மன்னா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

## மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து ஒன்பது மாணவர்கள் பெரிய குருமடம் செல்லத் தகுதி

### சேவியர் குரூஸ் அடிகளாரின் சிறிய குருமட அதிபர் அனுபவத்தில் முதல் தடவையாக பெரும் எண்ணிக்கையான மாணவர்கள்



மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தைச் சேர்ந்த ஒன்பது மாணவர்கள் இவ்வாண்டு பெரிய குருமடத்திற்கு செல்லத் தகுதிபெற்றுள்ளனர்.

மன்னார் சிறிய குருமடத்தில் ஏறக்குறைய 6 வருடங்கள் பாடசாலைக் கல்வியையும், ஆங்கிலக் கல்வியையும் கற்று பெரிய குருமடத்திற்கான ஆங்கில நுழைவுத் தேர்விலும் சித்திபெற்று இவர்கள் இத்தகுதியைப் பெற்றுள்ளனர். இவர்கள் களுத்துறையில் அமைந்துள்ள ஆரம்ப மெய்யியல் குருமடத்தில் (Pre Philosophate) தமது குருத்துவப் பயிற்சியை ஆரம்பித்துள்ளனர்.

இவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு கடந்த 9.10.2011 அன்று மன்னார் சிறிய குருமடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் சிறிய குருமட அதிபர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா உரையாற்றும்போது இந்தக் குழுவினர் சிறப்பான கல்வித்தகைமையும் பல்துறை ஆற்றலும் வாய்ந்தவர்களாக, ஏனைய மாணவர்களுக்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்கள் என்று குறிப்பிட்டார்.

குருமட அதிபர் சேவியர் குரூஸ் அடிகளார் உரையாற்றும்போது யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் பல ஆண்டுகள் சிறிய குருமட அதிபராகப் பணியாற்றிய தனது அனுபவத்தில் இத்தனை பெரிய எண்ணிக்கையான ஒரு குழுவை இதுவரை தான் பெரிய குருமடத்திற்கு அனுப்பவில்லை என்றார்.

குருமடம் செல்லும் மாணவர்களின் விபரம் வருமாறு. ரி. ஜொலிமன் (உயிலங்குளம் பங்கு), எம். டிலோசன் கூஞ்ஞ (வங்காலைப் பங்கு), ஜி. கிருஷா (உயிலங்குளம் பங்கு), ஈ. ஐ. ஜோர்ச் கரன் (வஞ்சியன் குளம் பங்கு), ஏ. அங்ஸ்ரன் குரூஸ் (வங்காலைப் பங்கு), ஆர். ஸ்ரெல்னர் மார்க் (வங்காலைப் பங்கு), சி. கொண்சியஸ் கொலின்ஸ் (வஞ்சியன்குளம் பங்கு), ஏ. அருண்தாஸ் குரூஸ் (வங்காலை பங்கு), பி. பிரசாந்தன் (அடம்பன் பங்கு) தகுதி பெற்ற மாணவர்களையும், இம்மாணவர்களுக்கு பயிற்சி அளித்த முன்னாள், இன்னாள் குருமட அதிபர்களையும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துகின்றது.

### பங்குகள்தோறும் நடைபெற்றுவரும்

## இளைஞர் ஆண்டு மேய்ப்புப்பணித்திட்ட மீளாய்வு

மன்னார் மறைமாவட்டத்தில் இவ்வாண்டு இளைஞர் ஆண்டாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டின் நிறைவை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் பங்குகளில் இந்த இளைஞர் ஆண்டுத் திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதையும், எப்படியாக இளைஞர்கள் இந்த ஆண்டில் பயனடைந்தார்கள் என்பதையும் ஆய்வு செய்யும் முகமாக பங்குகள்தோறும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேய்ப்புப்பணிப் பேரவைச் செயலாளர் அருட்திரு. டக்ளஸ் அடிகளார் இந்த மீளாய்வு முயற்சிகளுக்குப் பொறுப்பாக இருந்து செயற்படுகின்றார். இந்த மீளாய்வுக் குழுவில் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை, சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன், மறைக்கல்வி இயக்குனர் அருட்திரு. றெஜினோல்ட் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.



மேய்ப்புப்பணிப் பேரவைச் செயலாளரும் அன்பிய இயக்குனருமாகிய அருட்திரு. டக்ளஸ் அடிகளார்.

## தென்பகுதி சர்வமதக் குழுவினர் மன்னார் வருகை

### மன்னார் சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தில் வரவேற்பு


தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் தென்பகுதியைச் சேர்ந்த 40 பேர்கொண்ட சர்வமதக்குழுவினர் வடபகுதிக்கான சமாதானச் சுற்றுலாவை மேற்கொண்டனர். இந்தச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக இக்குழுவினர் மன்னாருக்கும் விஜயம் செய்தனர். காலி, மாத்தறை, குருணாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த சர்வமதத் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

கடந்த செப்ரம்பர் மாதம் 20ஆம் திகதி வருகை தந்த இவர்களை மன்னார் சர்வமதக் குழுவினர் வரவேற்றனர். மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தில் இடம்பெற்ற இந்த வரவேற்பு நிகழ்வில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களும் மற்றும் மன்னார் சர்வமத உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். மன்னார் குழுவினர் வருகை தந்த தென்பகுதிக் குழுவனருக்கு வடபகுதியில் நிலவும் தற்போதைய பிரச்சினைகளை, மக்களின் கஸ்ரங்களை எடுத்துக்கூறினர். மன்னார் மக்கள் சார்பாக பனை ஓலையால் செய்யப்பட்ட அன்பளிப்புப்பொருட்கள் தென்பகுதிக் குழுவினருக்கு வழங்கப்பட்டன.
இச்சந்திப்புக்கான ஏற்பாடுகளை மன்னார் மறைமாவட்ட சர்வமத ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாரும் சர்வமதப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் ஆர். பி. ஆர் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. சீ. தயாளராஜன் அவர்களும் மேற்கொண்டிருந்தனர்.

## தேவன்பிட்டிப் பங்கில் இளைஞர் ஆண்டை ஒட்டிய கலைநிகழ்வுகள்

தேவன்பிட்டிப் பங்கில் கடந்த 09.10.2011 அன்று ஞாயிறு மாலை திருப்பலியுடன் இளைஞர் ஆண்டையொட்டிய கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இக்கலை நிகழ்ச்சிகளின் வழியாக இளைஞர்கள் தங்கள் ஆன்மீக வாழ்விலும் சமூக வாழ்விலும் ஒன்றிணைந்து செயற்படும் இளைஞர்களாக வாழ்வோம் என்பதனைக் காட்டி நின்றார்கள்.

"இளைஞனே கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு" என்னும் மையக் கருத்தோடு இந்நிகழ்வுகள் வெகுசிறப்பாக நடைபெற்றன. பங்குத் தந்தை றொக்சன் குரூஸ் அடிகளாரின் வழிகாட்டலில் அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றன. இதில் 100இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர்.



அருட்பணியாளர் றொக்சன் குருஸ்

### பங்குகளில் உற்சாகமாக நடந்தேறிய

## மறைபரப்பு நிதிசேகரிப்பு முயற்சிகள்

கடந்த பல ஆண்டுகளாக மறைபரப்பு ஞாயிறு தினம் அன்று சேகரிக்கப்படும் நிதி விடயத்தில் மன்னார் மறைமாவட்டம் அதிக அக்கறையோடும், முயற்சியோடும் செயலாற்றி வருகின்றது.

மன்னார் ஆயர் அவர்கள் இவ்விடயத்தில் பங்குகளுக்கு வழங்கிவரும் உற்சாகம் காரணமாக மறைபரப்பு சந்தைகள் போன்றவற்றை நடாத்தி பெருமளவிலான நிதி சேகரிக்கப்படுகின்றது. இலங்கை மறைமாவட்டங்களில் மறைபரப்பு ஞாயிறு நிதி கேசகரிப்பில் மன்னார் முதலிடம் வகித்துவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. பங்குத்தந்தையர்களதும் பங்கு மக்களதும் அதீத முயற்சிகளுக்கு குருமுதல்வர் விக்ரர் அடிகளார் நன்றி தெரிவிக்கின்றார்.

## காத்தான் குளம் பங்கு அருட்பணிப் பேரவை

புதிதாக உருவாக்கப்பட்ட காத்தாங்குளம் பங்கிற்கான பங்கு அருட்பணிப் பேரவை கடந்த செப்ரம்பர் மாதம் 04ம் திகதி அமைக்கப்பட்டது. காத்தாங்குளம் பங்குத்தந்தை அருட்திரு. எஸ். வசந்தகுமாரின் தலைமையில் மன்னார் மறைமாவட்ட குடும்ப மேய்ப்புப் பணி இயக்குனர் அருட்திரு. எஸ். கே. தேவராஜாவின் நெறிப்படுத்தலில் இந்தப் பேரவை அமைக்கப்பட்டது.

பங்குத்தந்தையை தலைவராகக் கொண்ட இந்த அருட்பணிப் பேரவையின் பொதுச் செயலாளராக திரு. ஜி. ஜேக்கப் அவர்களும், செயலாளராக திரு. செ. கொண்சன்ரைன் அவர்களும், பொருளாளராக திரு. எஸ் சிலுவேஸ்திரன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## அடம்பனில் இளைஞர் ஒன்றியக் கலைவிழா

இளைஞர் ஆண்டை முன்னிட்டு ஒக்ரோபர் 09ம் திகதி நெடுங்கண்டல் புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் அடம்பன் பங்கின் இளைஞர்கள் பங்குச்சபையுடன் இணைந்து இளைஞர் கலைவிழாவை நடாத்தினர்.

அடம்பன் பங்கு இளைஞர் ஒன்றியத்தின் நாட்டுக்கூத்து நிகழ்வும், ஆட்காட்டிவெளி - காத்தான்குளம் இளைஞர் ஒன்றியத்தின் நாட்டுக்கூத்து நிகழ்வும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. அத்துடன் நடன நிகழ்வுகளும் பாடல்களும் இடம்பெற்றன. அடம்பன் பங்குத்தந்தை அருட்திரு. லக்கோன்ஸ் பிகிறாடோ அவர்களின் வழிநடத்தலில் இந்நிகழ்வுகள் சிறப்பான நடந்தேறின.

## தேவன்பிட்டியில் அருட்சகோதரர்கள்

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த 21 அருட்சகோதரர்களும் இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் அவர்களும் கடந்த 13.09.2011 அன்று தேவன்பிட்டி பங்கிற்கு வருகைதந்து மூன்று நாட்கள் தங்கிநின்றார்கள். இவர்கள் மக்களை, இளைஞர்களை, மாணவர்களை சந்தித்து ஆன்மீக விழிப்புணர்வுகளையும், கலைநிகழ்வுகளையும் நடாத்தினர். இந்நிகழ்வுகளை தேவன்பிட்டி பங்குத்தந்தை றொக்சன் குரூஸ் அடிகளார் நெறிப்படுத்தியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

இளைஞர் ஆண்டு சிறப்புக் கட்டுரை

## இளைஞரும் இறைவார்த்தையும்

*எஸ். பெனிற்ரா, பள்ளமடு, விடத்தல்தீவு.*

"வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது; உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது. இதுவே நீங்கள் நம்பிக்கைகொள்ள வேண்டிய செய்தியாகும்" (உரோ 10: 8).

முன்மதியுடன் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க பெயர் சொல்லி அழைக்கப்பட்ட இளைஞர்களே! நீங்கள் கிறிஸ்தவ வாழ்வின் ஒளி விளக்காய் திகழவேண்டுமானால் இறைவார்த்தைக்கு முதலிடம் கொடுங்கள். நற்சிந்தனை நிறைந்த, இறைவார்த்தை சார்ந்த பணியில் ஆர்வமுடன் ஈடுபடுங்கள். உங்கள் எதிர்கால வாழ்வின் கனவுகள், ஆன்மீக வாழ்வு, சமுதாய வாழ்வு ஒளிமயமாகத் துலங்கும்.

இளைஞர்களே! உருவற்று வெறுமையாக ஒன்றுமில்லாத நிலையில் இருந்த உலகை இறைவன் 'தோன்றுக' என்னும் இறைவார்த்தையினாலே படைத்தார். நீங்கள் உங்கள் ஆற்றல்கள், திறமைகளை வெளிப்படுத்தி இறைவார்த்தையின் வல்லமையினால் தீமைகளை வெல்லுங்கள். புத்துலகு படைக்கும் கருவிகளாகத் திகழ தினமும் இறைவார்த்தையை வாசித்து செயல்படுங்கள்.

இறைவார்த்தையினால் இறைவன் உலகைக் கண்டித்துத் திருத்தினார். இன்றைய உலகில் பல தீமைகள் மலிந்துள்ளன. குறுக்குவழியில் பணம் சம்பாதித்தல், மோசடி, கொள்ளை, கொலை, ஏமாற்றுதல் போன்ற தீமைகளின் விளைவுகள் குறித்து ஏற்றமுறையில் பிறருக்கு எடுத்துரையுங்கள். வளமான வாழ்வை அவர்கள் பெற்று வாழ இறைவார்த்தைகளை எடுத்துக்கூறி அவர்களை நல்வழிப்படுத்துங்கள். இறையாட்சி இவ்வுலகில் மலர, இறையரசின் கருவிகளாக நீங்களும் விளங்க, தினமும் இறைவார்த்தையை வாசித்து செயல்படுங்கள்.

இறைவன் இறைவார்த்தையினால் பலரின் உடல், உள நோய்களைக் குணமாக்கினார். பாவங்களை மன்னித்து, தீயசக்திகளின் பிடியில் அகப்பட்டோரை விடுதலையாக்கினார். முடிவில்லா வாழ்விற்கு அவர்களை அழைத்துச் சென்றார்.

நீங்களும் இன்றைய உலகில் நிலவும் பல்வேறுபட்ட தனி, மனித, சமுதாய, அரசியல் நோய்களை குணமாக்க அழைக்கப்படுகின்றீர்கள். எனவே ஆற்றலும், சக்தியும், பலமும், துணிவும் தரக்கூடிய இறைவார்த்தைகளை வாசித்து தியானித்து அனைத்தையும் மேற்கொள்ள தைரியம் பெறுங்கள்.

இறைவார்த்தைகள் உங்கள் எதிர்கால வாழ்விற்கு வளமும் வனப்பும் சேர்க்கின்றது என்பதை மறவாதீர்கள். அன்றாட வாழ்வில் இறைவார்த்தையை தினமும் வாசிக்கத் தவறாதீர்கள்.

இறைவார்த்தையை வாசிக்கும் இளைஞர்களே! நீங்கள் பலருக்கு மடையர்களாக, கோளையர்களாகத் தெரியலாம். ஆனால் நீங்கள் அப்படி செயல்படுபவர்கள் அல்ல, மாறாக இறைவாக்கினர்களாக செயல்படுகின்றீர்கள் என்பதையும், மேலோட்டமான வேரறுந்த, பயனற்ற வாழ்க்கைக்கு அல்ல, மாறாக ஆழமான, வேரோட்டம் நிறைந்த, உயிருள்ள அழியா வாழ்விற்கு வித்திடுகின்றீர்கள் என்பதையும் மறவாதீர்கள். எனவே அழியா வாழ்வின் ஊற்றாகிய இறைவார்த்தையை வாசிப்பதில் தயங்காமல் ஆர்வம் காட்டுங்கள்.

தி.பா 71:5 இல் கூறுவதுபோன்று "என் தலைவரே நீரே என் நம்பிக்கை. ஆண்டவரே இளமை முதல் நீரே என் நம்பிக்கை" என ஆண்டவரிடம் கூறுங்கள். உங்கள் எதிர்கால வாழ்விற்கு வித்திடும் இறைவார்த்தை என்னும் விதைகளை நல்ல நிலத்தில் விதையுங்கள். தீய நண்பர்களின் தூண்டுதலாலும், வழி நடத்தலாலும், முட்செடிகளிலும், பாறைகளிலும் பயனற்ற நிலத்தில் விதைக்காதீர்கள். மாறாக அவை வேரூன்றி செழித்து வளரக்கூடிய நல்ல நிலத்தில் விதையுங்கள். அவை நூறு மடங்காக பலன் அளிக்கும் என்பதை உணருங்கள்.

"நீ குழந்தைப் பருவம் முதல் திருமறையை நன்கு அறிந்திருக்கின்றாய். அது யேசுக்கிறிஸ்துவின்மீதுள்ள நம்பிக்கையால் உன்னை மீட்புக்கு வழிநடத்தும் ஞானத்தை அளிக்க வல்லது" (2 திமொ 3:15).

எனவே பயனற்ற சிந்தனையால் உருக்குலைந்து போகாதீர்கள். இலட்சியப் பிடிப்பில்லாமல் வாழ்க்கையை வீணாக்காதீர்கள், சமுதாய பகுப்பாய்வு இல்லாத சிந்தனையால் சீரழியாதீர்கள், விசுவாச வாழ்வு பற்றிய தெளிவின்மையால் ஆன்மீக வாழ்வை இழந்துவிடாதீர்கள். எதிர்காலத் திட்டம் இல்லாமல் இளமைப் பருவ வாழ்வை பாதை ஓரத்தில் விழுந்த விதைகள் போன்று வீணாக்கிவிடாதீர்கள்.

புடைக்கும், மீட்கும், செயலாற்றும், உண்மை மீட்புக்கு வழிநடத்தும், ஞானத்தை அளிக்கும் ஆற்றல் கொண்ட இறைவார்த்தையை வாழ்வில் கடைப்பிடித்து உங்கள் நடத்தையை மாசற்றதாய் காத்துக்கொள்ளுங்கள். இறைவார்த்தையில் உங்கள் வாழ்வை உருவாக்கிக்கொள்ளுங்கள். உருவாக்கத்திற்கு உதவுவோரை அடையாளம் கண்டுகொள்ளுங்கள். தடையாக இருப்போரை தட்டிக்கேட்கவும் தயங்காதீர்கள்.

"ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவை பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாக கருதுகின்றேன்" (பிலிப்பியர் 3:8) என்னும் இறைவார்த்தைக்கு ஏற்ப இளைஞர்களாகிய நீங்கள் உங்கள் வாழ்வில் நிறைவை, அமைதியைத் தரமுடியாத அனைத்தையும் குப்பையாகக் களைந்துவிடுங்கள். மன நிறைவையும், அமைதியையும் தரக்கூடிய ஒப்பற்ற செல்வமாகிய இறைவார்த்தையைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். சாதனை புரிந்து சரித்திரம் படைக்கவும், மனநிறைவு கொண்டு வாழவும் இறைவார்த்தையில் நிலைத்திருங்கள்.

இளையோரே! இளமைப் பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே, மனக்கவலையை ஒழியுங்கள். குழந்தை பருவமும், இளமையும் மறையக்கூடியவையே ஆகையால் "உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே". எனவே இளைஞனே எதிர்காலம் உனதே. எழுந்து ஒளி வீசு!


# வாழ்க்கை!

*அருட்சகோதரி மார்த்தா (CIC) எழுதும் தொடர் சிந்தனை*

## நடைபோடும் வாழ்க்கை .....!

ஐம்பது வயது
மதிக்கத்தக்க ஒருவரிடம்
"உங்கள் வாழ்க்கை
அனுபவத்தை
பகிர்ந்துகொள்ள முடியுமா?"
என்றேன். "ஓம் முடியும்"
எனத் தொடங்கினவர்
கூறுவார். "நான் திருமணம்
முடித்த காலத்தில் என்
மனைவி வைத்த
மீன்கறியின் சுவைக்கும்
தற்பொழுது வைக்கும்
கறியின் சுவைக்கும்
வித்தியாசம் இருக்கிறது.
காரணம், திருமணமான
புதிதில் நான் நன்றாகச்
சாப்பிட வேண்டுமென
நினைத்துக்கொண்டு
சமைப்பாள். இப்போது
என்னையும் என்
பிள்ளைகளையும்
நினைத்துக்கொண்டு
சமைக்கிறாள். இதுதான் என்
வாழ்க்கையின் சுருக்கம்.
மாற்றங்கள் அனைத்தையும்
ஏற்க மனம் இல்லை
என்றாலும் எது நல்லதோ
அவைகளை ஏற்று,
இயந்திரமயமான இந்த
உலகில் உறவின் முகங்கள்
ஒவ்வொன்றாக தொலைந்து
கொண்டிருக்கும்
நிலையிலிருந்து
காத்துக்கொள்ள வேண்டும்"
என முடித்தார்.

பெரும்பாலும் குடும்பம்
என்ற புயலுக்குள்
குத்துவிளக்கை ஏற்றி
அணையாமல் பார்த்துக்
கொண்டு வருவதுதான்
வாழ்க்கை. வாழும்
வாழ்க்கையில் பாதிக்
காலம் முடிந்துவிட,
தேடியவைகளைக் கொண்டு
அதிலே பயணிக்கின்றான்
மனிதன். தேடிவருவதை
ஏற்றுக்கொண்டு தனக்கு மீறி
எதுவும் நடக்கப்
போவதில்லை என்ற
நிதானம் பற்றிக்கொள்ள
உணர்ச்சியைப் பின்வைத்து,
அனுபவத்தையும்,
அறிவையும் முன்வைத்து
சிக்கல்களை சந்திக்க
பிறருக்கு வழிகாட்டும்
பக்குவம் உடையவனாய்
மனிதன் மாறுவது எப்போது?
எங்கு எப்போது எந்த
இடத்தில் எது நடக்க
வேண்டுமோ, அங்கே
அவற்றைச் செய்து உறவு
வாழ்வில், குடும்ப வாழ்வில்,
சமுதாய வாழ்வில்
தனக்கென்ற ஒரு நிறைவை
தேட நினைப்பவர்கள் எங்கே
உள்ளனர்? தனக்கென்ற
எதிர்பார்ப்பும்,
தனித்தன்மையும்
கொண்டவர்கள் யார்? ஆம்
உலகத்தின் இயக்கமே
இவர்களிடம்தான் இருக்கிறது.
எவ்வாறெனில் குடும்பம்
தொடங்கி தனது வாழ்க்கை
முன்னேற்றத்திற்காகப்
பணி செய்யும் இடம்வரை
பார்க்கும்போது ஒன்றைக்
கொடுத்து ஒன்றைப்
பெறுவதாக உள்ளது.
அதாவது பெண் கொடுத்து
பெண் பெறுவதைப் போன்றது.
சமுதாயத்தை
வளர்ப்பவர்களும்,
சமுதாயத்தின் தவறுகளைச்
சுட்டிக்காட்டும் தைரியம்
உடையவர்களும்
இவர்கள்தான். கூலி வேலை
தொடக்கம், பெரிய
உத்தியோகம் வரை
இவர்களின் சேவை
குறைந்தால் அனைத்து
உற்பத்தியுமே
குறைந்துவிடுகிறது. இவ்வாறு
அனைத்துத் துறைகளிலும்
முக்கியமானவர்களாகிய
இவர்களை சுயநலம்
பற்றிக்கொள்ள வீடுகள்
வீதியாகின்றன, அறைகள்
சிறையாகின்றன, சமூகம்
சந்தையாகின்றது,
உணர்வுகள்
ஊதாரியாகின்றன,
உரிமைகள்
பறிக்கப்படுகின்றன. இன்றைய
காலகட்டத்தில் ஒருவகையில்




எதிர்மறையான
குணநலன்கள்கூட நன்மை
பயப்பதாகத் தெரிகிறது.
உதாரணமாகச் சொல்லப்
போனால் சமுதாயத்தில்
எனது மதிப்பு குறையும் என
அடுத்தவர்களுக்காக என்
வாழ்க்கைத் தரத்தை ஒரு
நோக்கமே இல்லாது
உயர்த்திக்கொள்வது
சகஜமாகிவிட்டது.

சிற்பி ஒருவன் சிலை
ஒன்று செய்து
கொண்டிருந்தான். அதன்
பக்கத்தில் அதைப்போல்
இன்னொரு சிலை இருந்தது
"ஏன் இரண்டு சிலைகளை
ஒரே மாதிரி வடிக்கின்றீர்கள்?"
என வழிப்போக்கன் ஒருவன்
வினவ சிற்பியோ, "அதில்
ஒரு குறை வந்துவிட்டது
ஆகவே இன்னொன்று
வடிக்கின்றேன்" என்றான்.
தெய்வத்தைச் சுற்றி வலம்
வருவதைப்போல அந்த
சிலையைச் சுற்றிப்
பார்த்தவன்
ஆச்சரியப்பட்டான். அவனால்
எந்தக் குறையையும் காண
முடியவில்லை. "இதை
எங்கே
வைக்கப்போகிறீர்கள்?" என
வழிப்போக்கன் வினவ, "நூறு
அடி உயரத்தில்" என சிற்பி
பதில் கூறினான்.
வழிப்போக்கனோ, "பக்கத்தில்
பார்த்த என் கண்ணுக்கே
எந்தக் குறையும்
தெரியவில்லை, நூறு அடி
உயரத்திலா தெரியப்
போகிறது?" எனச் சொல்லி
சிற்பியைக் கிண்டலாகப்
பார்த்தான்.
சிற்பியோ அவனிடம், "இந்தக்
குறை எனக்குத் தெரியும்.
என் மனச்சான்றுக்கு புரியும்"
என்றான்.

பக்குவத்தைப் பதமாய்
பார்க்கும் அளவுக்கு
எண்ணத்தில் உயர்வு
இல்லை என்றாலும்
முயற்சித்துப்
பயணிக்கும்போது மனச்சாட்சி
மழுங்கடிக்கப்பட மாட்டாது.
நமது உயர்ந்த
எண்ணத்தினால் உண்டாகும்,
சுயகட்டுப்பாடு,
செயல்பாடுகள்,
வார்த்தைகள்.
குழந்தைகளை,
இளைஞர்களை,
பொதுமக்களை நமது
இருத்தல் சாதிக்க
வழிவகுப்பதாக அமைகிறது.

தொலைந்தவை பல,
பெற்றவை சில.
இவைகளுக்கு முகவரி
கொடுப்பவர்களும்,
கொடுக்காமல்
இருப்பவர்களும் அதை
மறந்தவர்களும் நாமே!
வளர்ச்சிப்பாதைக்கு வித்திட
வேண்டுமென
எண்ணமிருப்பினும்,
மனசாட்சிக்கு மருதாணி
வைத்தவர்களாக,
மனச்சாட்சிக்குள்
ஒழிந்துகொண்டு, அறிந்தோ
அறியாமலோ வாழ்க்கை
என்ற போர்க்களத்தில்
கற்பனைகளை உருவாக்கி
போராடிக்கொண்டு
ஒவ்வொருவர்க்குள்ளும் ஒரு
பொய் முகத்தை புதைத்துக்
கொண்டு பொறுப்புகளில்
போலித்தனமும்,
முன்மாதிரிகையில்
முனங்கல்களுடனும் வாழ்வை
நகர்த்தி வருகிறோம்.
"மனிதன் துருப்பிடித்து
சாவதைவிட களைப்படைந்து
சாவதே மேல்" என்று
விவேகானந்தர் கூறுவார்.
இயலாமை ஒருபுறம் ஒன்றன்
பின் ஒன்றாகத் துரத்த,
சலிப்பு தொற்ற, வாழ
வேண்டும் என்ற பற்று
குறைந்து, நடப்பது
நடக்கட்டும் என பின்வாங்கி,
பாதுகாப்பிற்காக நாம் இட்ட
திரைகள் மற்றவர்கள்
உள்ளே நுழைவதை
மட்டுமல்ல நாம் வெளியே
செல்வதையும் தடுப்பதாக
உள்ளது.

லியோனார்டோ டாவின்சி
செதுக்கிய சிற்பங்கள் எப்படி
இவ்வளவு அழகாக
இருக்கின்றன என அவரிடம்
கேட்கப்பட்டது. அவர்
அதற்கு, "ஒன்றுமில்லை
தேவையில்லாதவற்றை
அகற்றிவிடுகிறேன்
அவ்வளவுதான்" என்றார்.

எனவே அம்மா, அப்பா,
தாத்தா, பாட்டி, நண்பன்,
உறவினன் ஸ்தானத்தில்
இருக்கும் நாம்
வாழ்க்கையை
வளப்படுத்தணும்,
வடிவாக்கணும் என்றால்
சிற்பியின் கவனமும்
மனநிலையும் குயவனின்
சகிப்புத் தன்மையும்,
கைப்பக்குவமும், ஓவியனின்
ரசனையும் உள்ளுணர்வும்
நமக்கு வேண்டும். எனவே
வாழ்க்கை என்ற
இரகசியத்தில் இருக்கும்
யதார்த்தத்தைப் புரிந்து
கொண்டு நடைபோடுவோம்
வாழ்க்கை எளிதாகும்.

(வாழ்க்கை தொடரும்..)

## இளைய தலைமுறையே...

*- ம. வசந்தன் குருஸ், பேசாலை.*

இருண்டு கிடக்கிறது... இன்னல்களால் பூமி...
இழுத்துப் போர்த்தி உண்டு உறங்கினால்
இளைஞா நீ படு பாவி!

கண் கெட்டபின் வேண்டாம் சூரிய நமஸ்காரம்...
கண்ணைக் கசக்கி விழித்துப் பார்!
கயவரின் உலகில் உனது கடமையை
துவண்டு தூரப்போகாதே, துடிப்பிற்கு வித்திடு...

போதையும், பேதையும் போக்கத்தவனின் போக்கு...
பணத்தை விடு, பிணம் தின்னாது
குணத்தை எடு குறையிருக்காது.

வாழ்வதற்காக வாழ்வது வலதுகுறைந்தவன் வாழ்க்கை...
வலு உடலில் வேண்டாம் அதை உள்ளத்தில் ஏற்று...
வாளை வேண்டாம், கொஞ்சம் வைராக்கியத்தை எடு...

அநீதிக்கு தலை சாய்க்கும் உன் தலை எதற்கு?
கயமைக்கு கட்டி நிற்கும் உன் கை எதற்கு?
அறிந்தும் அறியாமல் வாழ அந்த ஆறு அறிவெதற்கு?

ஒளியிருந்தும் இருள் எதற்கு? வழியிருந்தும் வலி எதற்கு?
கனியிருந்தும் காய் எதற்கு??

நண்பா!! குருடனும் ஒன்றுதான் - நம்
குல இளைஞனும் ஒன்றுதான்...

சாதி, சமயத்தை சவக்குழி அனுப்பிவிடு...
உன்னை மதித்தால் உயிரையும் கொடு...
உண்மையை உரைத்தால் உத்தமனாக்கிவிடு...
உண்மை... அது கண்ணில் மறைந்தால் - நல்லது நீ குருடாகிவிடு!

இடிக்குப் பயந்து செவிட்டை நாடாதே...
பெண் மடியைப் பார்த்து ஆண்மை தவறாதே...
இளைய தலைமுறையே!!!
உன்னை உணவோடு வேண்டாம்...
உலகின் உணர்வோடு இணைத்துக்கொள்...
நண்பா!! கரங்களைக் கோர்த்துக்கொள்... சமத்துவத்தைப் பேண...
நம் நாடு, ஜனநாயக நாடாம்? தரம் 10 - பாடப்புத்தகத்தில்...

சிந்திய சிரங்கள் சிதறட்டும்... சிந்தித்துப்பார்...
சிறகொடிந்த உன் உலகை... சிறகடிக்கும் உன் கனவை...

கடிவாளம் வேண்டாம் கட்டிளம் காளைக்கு...
கட்டி முடித்துக்காட்டுவோம்... கலங்கரை விளக்கை...

நாளைய நாடு நமது நடப்பில் நம்பிக்கை வை...
நாளைய்ய நமதாக்குவோம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# மக்களின் நாடித்துடிப்பை அறிந்து செயற்படுங்கள்!

## இலங்கை இராணுவத்திற்கு ஆயர் கரல்ட் அன்ரனி அறிவுரை



முப்பது வருடப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நாடித்துடிப்பை அறியும் ஆற்றல் இலங்கை இராணுவத்திற்கு உண்டு. அவர்களுடைய தேவைகளுக்கும் உணர்வுகளுக்கும் ஏற்ப சந்தேகமின்றி பதிலளிக்க வேண்டும். இந்த நாட்டின் ஏனைய மக்களைப்போலவே போரினால் பாதிக்கப்பட்ட மக்களையும் சமனாக நடத்த வேண்டும். அப்படிச் செய்யும்போது எந்த சக்தியாலும் நமது அன்புக்குரிய நாட்டின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்க முடியாது என குருணாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு கறல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை தெரிவித்தார். இலங்கை இராணுவத்தின் 62வது ஆண்டு நிறைவையொட்டி கொழும்பு சகல புனிதர்கள் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இறைவாக்கினர் எசாயா இஸ்ராயேல் மக்களின் எதிர்காலத்தை முன்னறிவிக்கும்போது சமாதானமான ஒரு அரசை முன்கூட்டியே கனவு காணுகின்றார். அந்த அரசில் நீதியும், மாண்பும் நிலைபெறுவதைப் பார்க்கின்றார்.

"அந்நாளில் ஓநாய் செம்மறி ஆட்டுக்குட்டியோடு தங்கியிருக்கும்; கன்றும் சிங்கக்குட்டியும், கொழுத்த காளையும் கூடிவாழும்; பச்சிளம் குழந்தை அவற்றை நடத்திச்செல்லும். பசுவும் கரடியும் ஒன்றாய் மேயும்; அவற்றின் குட்டிகள் சேர்ந்து படுத்துக்கிடக்கும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்....." (எசாயா 11:6,7) என்ற இறைவார்த்தையை ஆயர் அவர்கள் எடுத்தாண்டு உரையாற்றினார்.

ஆயர் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், இறைவாக்கினர் எசாயா எமக்கு நம்பிக்கையைத் தருகின்றார். அந்த நம்பிக்கை சிறப்பான எதிர்காலத்திற்கான நம்பிக்கையாகும். முப்பது வருடப் போரின்பின்னர் இந்த நம்பிக்கையை நனவாக்குவதற்கு இலங்கை இராணுவம் மிகப்பெரும் பங்கை ஆற்றவேண்டும். சமாதானம் என்பது போர் இல்லாத நிலமை அல்ல. மனித உயிருக்கான மதிப்பு, மனித மாண்பை மதித்தல் என்பன இங்கே முக்கியமானவை. ஆயுதப்படையினரின் சுடுகலன்கள் மௌனமாக்கப்பட்டுள்ளமை குறித்து நாம் மகிழ்ச்சியடைந்தாலும் காயப்படுத்தப்பட்ட இதயங்களை அணுகுவதும், ஒப்புரவைக் கொண்டுவரவதும் நீண்ட பயணமாகும் என்றார்.

## குருநகர் ஆலயம் 150 ஆண்டு நிறைவு



யாழ் மறைமாவட்டத்தின் குருநகர் புனித இயாகப்பர் ஆலயம் இவ்வாண்டு 150 ஆண்டுகள் நிறைவு யூபிலியைக் கண்டுள்ளது. இதற்காக பங்கு மக்கள் பல மாதங்கள் ஆயத்தம் செய்யப்பட்டனர். அமதி குருக்களினால் மகாஞானவொடுக்க நிகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

# கர்தினால் கூரேயை முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தும் ஆரம்ப முயற்சிகள் தீவிரம்

இறையடி சேர்ந்த அதிமேதகு கர்தினால் தோமஸ் கூரே ஆண்டகையை முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தும் ஆரம்ப முயற்சிகளை கொழும்புத் திருச்சபை மேற்கொண்டுள்ளது. கர்தினாலின் முத்திப்பேறு அலுவல்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அருட்திரு. லியோபோல்ட் ரட்னசேகர (அமதி) அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கர்தினால் கூரேயின் பரிந்துரையினாலும் செபத்தினாலும் குணம் பெற்றவர்கள், அருளுதவிகள் பெற்றவர்களிடமிருந்து பல கடிதங்கள் கொழும்பு பேராயர் இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்திப்பேறு நிலை செயலகத்திற்கு (Secretariat for Beatification) வருகின்றன. இது இந்த இறை ஊழியரின் மட்டிலான பக்திமுயற்சி (Devotion) பரவலாக்கப்படுவதற்கான நல்ல அறிகுறி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கர்தினால் தோமஸ் கூரே

தேவத்தை பசிலிக்காவுக்குள் இருக்கின்ற கர்தினால் கூரேயின் கல்லறைக்கு செபிக்க வரும் பக்தர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. கர்தினாலிடமிருந்து உதவிகளைப் பெற்றவர்கள் தமது விபரங்களை பதிவுசெய்வதற்கு வசதியாக அவருடைய கல்லறைக்கு அருகே ஒரு பதிவேடு வைக்கப்பட்டுள்ளது.

தேவத்தையில் உள்ள இலங்கை மாதா பசிலிக்காவில் கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் இளைப்பாறிய பேராயர்கள், ஆயர்கள், குருக்கள் இறைமக்கள் ஒன்றுசேர்ந்து கர்தினால் கூரே அவர்களின் விண்ணகப் பிறப்பின் 23வது ஆண்டை ஒக்ரோபர் 23ஆம் திகதி ஆடம்பரத் திருப்பலி ஒப்புக்கொடுத்து கொண்டாடினார்கள்.

தேவத்தை இலங்கை மாதா பசிலிக்காவில் உள்ள கர்தினால் கூரேயின் கல்லறை



## யாழ் மறைமாவட்டத்தில் தீவகம் புதிய மறைக்கோட்டமாகின்றது

### முதல்வராக அருட்பணி. ஸ்ரான் பிலிப்ஸ் நியமனம்

யாழ். மறைமாவட்டத்தில் இதுவரை யாழ் மறைக்கோட்டம், இளவாலை மறைக்கோட்டம், பருத்தித்துறை மறைக்கோட்டம், கிளி / முல்லை மறைக்கோட்டம் என நான்கு மறைக்கோட்டங்கள் இயங்கிவந்தன. தற்போது பங்குகளின் வளர்ச்சி கருதி யாழ் மறைக்கோட்டத்தின்கீழ் இயங்கிவந்த தீவகப் பங்குகள் அனைத்தும் தனியாகப் பிரிக்கப்பட்டு புதிய தீவக மறைக்கோட்டமாக யாழ். ஆயரினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய மறைக்கோட்டத்தின் முதல்வராக சாட்டி திருத்தல பரிபாலகர் அருட்பணி. ஸ்ரனிஸ்லஸ் பிலிப்ஸ் அ.ம.தி அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். பிலிப் அடிகளார் முன்னர் மடுத் திருத்தல பரிபாலகராக இருந்து கடினமான காலத்தில் சிறப்பாகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்புதிய மறைக்கோட்டத்தின்கீழ் மண்டைதீவு, நாரந்தனை, கரம்பன், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய பங்குகளும் சாட்டித் திருத்தலமும் உள்ளடங்குகின்றன. இம்மறைக்கோட்டத்தில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, கரம்பன் புனித சிறிய புஸ்பம் - திருக்குடும்ப வித்தியாலயம் ஆகிய இரு பெரும் கத்தோலிக்க கல்வி நிறுவனங்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இப்புதிய மறைக்கோட்ட உதயத்துடன் யாழ் மறைமாவட்டத்தில் மறைக்கோட்டங்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது. (நன்றி - பாதுகாவலன்)

## ஆயர் தியோகுப்பிள்ளை அறக்கொடை பேருரை

யாழ் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தினால் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படும் ஆயர் வ. தியோகுப்பிள்ளை அறக்கொடை பேருரை கடந்த ஒக்ரோபர் மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வாண்டுக்கான கருத்துரையை யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமியத் துறைத் தலைவர் பேராசிரியர் அருட்திரு. ஞா. விக்ரர் பிலேந்திரன் அடிகள் நிகழ்த்தினார். "அருளாளர் யோசவ்வாஸ் : எதிர்கொண்ட சவால்களும் முன்வைக்கும் சவால்களும்" எனும் தலைப்பில் இப்பேருரை இடம்பெற்றது. அருளாளர் யோசவ்வாஸ் அவர்களின் விண்ணகப்பிறப்பின் 300வது ஆண்டை இவ்வாண்டில் நினைவுகூர்கையில் அருளாளர் யோசவ்வாஸ் அவர்களின் வாழ்வைச் சிந்திப்பது பொருத்தமாக அமைந்தது. கடந்த ஆண்டு இப்பேருரையை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் "அச்சுவேலி எஸ். தம்பி முத்துப்பிள்ளை - வாழ்வும் பணியும்" எனும் தலைப்பில் நிகழ்த்தினார்.



இப்பேருரையில் குருக்கள், துறவிகள் பொதுநிலையினர், ஆர்வலர்கள் பங்குபற்றி பயன்பெறும்படி யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்பணி. இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் அழைப்புவிடுத்தார். (நன்றி - பாதுகாவலன்)

## மலையக மக்களே நம்பிக்கை இழக்காதீர்கள்!

### புதிய காலி ஆயர் உற்சாகமூட்டுகின்றார்

மலையக மக்களாகிய நீங்கள் கடந்த 200 வருடங்களாக இந்த நாட்டில் பலவித துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றீர்கள். பல்வேறு அடிமைத்தனங்களுக்கு ஆளாகியுள்ளீர்கள். இருந்தாலும் நீங்கள் நம்பிக்கை இழக்கக்கூடாது. என காலி மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை தெரிவித்தார்.



கடந்த ஒக்ரோபர் மாதம் 2ந் திகதி காலி மறைமாவட்டத்தில் உள்ள தெனியாய புனித சூசையப்பர் பங்கில் இடம்பெற்ற ஆண்டு விழாவில் கலந்து திருப்பலியில் மறையுரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஆயர் அவர்கள் தொடர்ந்து கூறியதாவது, உங்களின் இறைநம்பிக்கையும், தன்னம்பிக்கையும்தான் உங்களை உயர்த்தும். உங்கள் பிள்ளைகளின் கல்விக்கு முதலிடம் கொடுங்கள். தீமையை உங்கள் வாழ்வில் இருந்து அகற்றுங்கள். நான் உங்களாடு இருந்து உங்களின் ஆன்மீக வாழ்வு மலர பாடுபடுவேன் என உறுதியளிக்கிறேன். திருச்சபை எப்போதும் ஏழை, எளிய மக்களோடு ஒன்றித்திருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

# குடும்பம்தான் சமூகத்திற்கும் திருச்சபைக்கும் உயிர்நாடி

### அருட்பணி. அன்ரனி லியோ அடிகளார்

சமூகத்திற்கும் திருச்சபைக்கும் குடும்பம்தான் உயிர்நாடி, அச்சாணி, ஆணிவேர், எல்லாமே! அதனால்தான் இரண்டாம் வத்திக்கான் சங்கம் இல்லத்திருச்சபை என குடும்பத்தை அறிக்கையிட்டுள்ளது என திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டக் குரு அருட்பணியாளர் அன்ரனி லியோ அடிகளார் குறிப்பிட்டார்.

திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்தின் குடும்ப ஆண்டை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். வெட்டாப்பு பத்திரிகைக்கு அவர் வழங்கியுள்ள செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, குடும்ப வாழ்வை சீரும் சிறப்புமாக, வலிவும் பொலிவுமாக ஆக்குவதற்கு தேவையான மறைக்கல்வியை ஊட்டும் பணி இந்த இல்லத் திருச்சபையையே சார்ந்திருக்கிறது. குடும்ப வாழ்வு சிதைந்து போவதற்கும், பொது ஒழுக்கம் சீர்கெடுவதற்கும் இன்றைய நாகரீக உலகில் பல சாதனங்கள் உள்ளன. திரைப்படங்கள், தொடர்பாடல் சாதனங்கள் என கொட்டிக்கிடக்கின்றன. இவற்றின் மத்தியில் பாலில் இருந்து நீரைப் பிரித்து பாலை மாத்திரம் அருந்தும் அன்னம்போல நல்லதை தெரிந்து பின்பற்றி வாழ திருச்சபையின் குடும்பங்களுக்கு அவர்களிடையே பணியாற்றும் குடும்ப வாழ்வுப் பணிக்குழுக்கள் உதவவேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் வார்த்தையில் இலக்கிய நயம்

## ஓர் இலக்கிய ஆய்வு

- வாகரைவாணன்

உலக வரலாற்றின் மையமாக விளங்குபவர் கிறிஸ்து இயேசு. இதனை கி. மு, கி. பி என்னும் கால வரையறை எடுத்துக் காட்டும். இவ்வரையறை ஒன்றே உலக வரலாற்றில் அவரின் முக்கியத்துவத்தை உணர்த்தப் போதுமானது.

உரோமைப் பேரரசன் அகஸ்து சீசரின் ஆட்சிக்குள் பலஸ்தீனம் உட்பட்டிருந்த காலத்தில் பெத்தலேகம் என்னும் சிற்றூரில் பிறந்த யேசுவை கத்தோலிக்க கிறிஸ்தவ உலகம் இறைவனின் அவதாரம் எனக் கையெடுத்துக் கும்பிடும். ஆனால், ஏனையோர் அவரை ஒரு மகாத்மாவாக, ஞானியாக மதித்து மரியாதை செய்வர்.

இயேசுக்கிறிஸ்து அடிப்படையில் தெய்வத்தன்மை (DIVINITY) வாய்ந்தவர். இதனை அவரது வரலாற்று நிகழ்வுகளும், அவர் செய்ததாகச் சொல்லப்படும் புதுமைகளும் (MIRACLES) வெளிப்படுத்தும்.

யேசுவின் போதனைகள் அறநெறி (MORALE) நிறைந்தவை. மனிதாபிமானத்தை வெளிப்படுத்துபவை. இதன் காரணமாகவே அவ்வரிய வார்த்தைகள் இன்றும் அழியாது மக்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கின்றன. நான்கு நற்செய்தியாளர்களால் பிற்காலத்தில் தொகுக்கப்பட்ட அறிவுரைகளையே கத்தோலிக்க கிறிஸ்தவ உலகம் நற்செய்தி (Good News) என்று கூறிப் பெருமைப்படுகிறது.

அறமே யேசுவின் போதனைகளில் அடித்தளமாய் இருப்பினும், அதில் சிறந்த பல அம்சங்களும் அடங்கியுள்ளன. அவற்றில் கவித்துவமும் ஒன்று. அக்கவித்துவத்தை அணி செய்யும் சில அணிகள் பற்றியதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

கவிதையின் சிறப்புக்குக் காரணமாக இருக்கும் அணிகள் பற்றி 'தண்டியலங்காரம்' எனும் வடமொழி சார்ந்த நூல் எடுத்துக் கூறும். அத்தகு அணிகளில் உவமை அணி என்பதும் ஒன்று உவமை என்பது, ஒன்றை இன்னுமொரு உயர்ந்த பொருளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதாகும். இதனை தொல்காப்பியர், "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" (உவமையியல்) என்று கூறுவார்.

உவமை அணிக்கு உதாரணமாக 'மதிமுகம்' என்னும் தொகையை இங்கு எடுத்துக் காட்டலாம். இதனோடு 'போன்ற' என்ற உவமை உருபு இணையும்போது, அது 'மதி போன்ற முகம்' என்று விரிவடைவதோடு, தெளிவான பொருளையும் தரும்.

உருவகம் என்னும் அணி உவமை அணியில் இருந்தே தோன்றுகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக முகமதி என்னும் இரு சொற்களை காட்டலாம். இவ்வணியில் உவமானம் (மதி) பின்னும், உவமேயம் (முகம்) முன்னும் வரும் இதனையே உருவகம் என்பர், இவ்வணியில் முகம் மதியாகவே உருவகிக்கப்படுகிறது. இவ்விரு அணிகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் அன்மொழித் தொகைக்கும், ஆகு பெயருக்குமிடையே உள்ள வேறுபாட்டைப் போன்றது எனலாம்,

இனி யேசுவின் வார்த்தைகளுக்குள் நுழைந்து, அவற்றில் ஆங்காங்கு சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அணிகள் சிலவற்றைக் கண்டு இன்புறலாம்.

மத்தேயுவினால் எழுதப்பட்ட நற்செய்தியில் (6:22) யேசு, "கண்தான் உடலுக்கு விளக்கு" என்று சொல்வதைக் காண்கின்றோம். இதில் "விளக்குப் போன்றது கண்" என்று கூறாமல் கண் விளக்கு என்று யேசு குறிப்பிட்டு கண்ணை விளக்காகவே உருவகிக்கின்றார். அதனால் இது உருவக அணி ஆகின்றது. மத்தேயுவின் அதே நற்செய்தியில் யேசு மக்களைப் பார்த்து "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கின்றீர்கள்" (மத் 5:13) என்று சொல்லும்போது, அவர் அம் மக்களை உப்புக்கு உவமிப்பது தெரிகின்றது. எனவே, இது உவமை அணி என்பது தெளிவு. ஆயினும் மக்களை இயேசு உப்பாகவே உருவகப்படுத்துவதாகவும் கொண்டு இதனை உருவக அணியாகவும் ஏற்கலாம். இதுபோன்றே "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள்" (மத் 5:14) என்னும் வாசகத்தையும் நோக்க வேண்டும்.

லூக்காவின் நற்செய்தியில் (லூக் 13:6) யேசு காய்க்காத அத்திமரம் பற்றிப் பேசுவதை வாசிக்கின்றோம். இவ் அத்திமரம் சமூகத்தில் பயனற்ற மனிதர்களை காய்க்காத அத்திமரமாக யேசு உருவகிப்பதாகவும் இதனை எடுத்துக்கொள்ளலாம். இது காரணமாக இதனை உருவக அணி என்றும் கருதலாம்.

இயேசு தம்மை நல்லாயன் என்றும் (யோ 10:7) உலகின் ஒளி நானே (யோ 8:12) என்றும் கூறுவதைக் கவனிக்கையில் அவர் தம்மை நல்லாயனாகவும், ஒளியாகவும் உருவகம் செய்வது தெரிகின்றது. இதனால், இது உருவக அணி என்பது வெளிப்படை.

இதுபோன்றே யேசு தம்மை திராட்சை செடியாகவும், மக்களைக் கொடியாகவும் (யோ 15:1) உருவகம் செய்வதைக் காண்கின்றோம்.

இறையரசு அல்லது விண்ணரசு என்பது இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்டதல்ல எனும் உண்மையை யேசு (லூக் 17:20) மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார். ஆயினும், அவ்வரசு இது தான் என்று அவர் திட்டவட்டமாகச் சுட்டாது, பல உவமைகள் மூலம் அதனை வெளிப்படுத்துகின்றார். அவ்வுவமைகளில் முத்து, புதையல், விதை, கடுகு, வலை, புளிப்புமாவு என்பன சிலவாகும். இவை அனைத்தும் உவமைக்குரியவை ஆகும்.

மேலே தரப்பட்ட அணிகள் அனைத்தையும் உவமை அணியாகவோ அல்லது உருவக அணியாகவோ நாம் கொள்ள முடியும். ஏனெனில், இவ்விரண்டு அணிகளுக்குமிடையில் அதிக வேறுபாடில்லை என்பதனை தொல்காப்பியரின், "பொருளே உவமம் செய்தனர். மொழியினும் மருளறு சிறப்பின்.'.துவமாகும்" (உவமையியல்) எனும் நூற்பா காட்டும்.

யேசு தனது போதனைகள்பற்றித் தம் சீடர்களிடம் "நான் உங்களிடம் உருவகமாகவே பேசி வந்துள்ளேன்" (யோ 16 :25) என்று குறிப்பிடுவதில் இருந்து அவர் தம் உரையாடலில் உருவக அணியைப் பயன்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகின்றது. இதுபோன்று அவர் உவமை அணியைப் பயன்படுத்தியுள்ளமையை மத்தேயு 13ம் அதிகாரம் 35ம் வசனம் காட்டும்.

உவமை உருவகம் ஆகிய இரு அணிகளைத் தவிர யேசுவின் வார்த்தைளில் காணப்படும் ***உயர்வு நவிற்சி*** அணியையும் இங்கே சுட்டிக்காட்டுதல் தகும். இவ்வணியை மிகைபடக் கூறுதல் எனலாம். கவிச்சக்கரவர்த்தி கம்பன் இதனைத் தனது காவியத்தில் பெரிதும் பயன்படுத்தியுள்ளமைக்கு அக்காவியமே சான்றாகும்.

யேசுவின் வார்த்தைகளில் இவ்வணி ஒளிர்வதை "கதிரவனிலும், நிலாவிலும், விண்மீன்களிலும் அடையாளங்கள் தென்படும். மண்ணுலகில் மக்களினங்கள் கடலின் கொந்தளிப்பின் முழக்கத்தினால் கலங்கி என்ன செய்வதென்று தெரியாது குழப்பம் அடைவார்கள். உலகிற்கு என்ன நேரிடுமோ என எண்ணி மனிதர் அச்சத்தால் மயக்கமுறுவர். ஏனெனில், வான்வெளிக்கோள்கள் அதிரும்" (லூக் 21:25 – 26) என்று அவர் தம் மீள்வருகை பற்றி விதந்துரைப்பதில் காணலாம்.

உலகின் மிக முக்கிய வரலாற்று நாயகரான இயேசுக் கிறிஸ்துவை எவர், எப்படி மதிப்பிட்டாலும். அவர் கவித்துவம் மிக்க ஓர் இலக்கியப் புலவர் என்பதனை அவர் வார்த்தைகளில் ஒளிர்விடும் அணிகளே எடுத்துக்காட்டுவதை யார்தான் மறுத்துரைக்க முடியும்? திருவிவிலியத்தை பல்வேறு கண்ணோட்டங்களில் ஆராயும் நாம் அதன் இலக்கிய வளத்தையும் அறிந்து மகிழ்வோம்.

# அமரர் பிரான்சிஸ் குலாஸ் அடிகளாருக்கு கண்ணீர் அஞ்சலி

- திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மன்னார் கல்வி வலயம்



வங்காலைப் பங்கு தோற்றம் பெற்று உருவாகிய காலத்திலிருந்து இறைவன் வங்காலையை ஒரு குழுமமாக (Community), தேர்ந்தெடுக்கப்பட்ட குலமாக உருவாக்கியுள்ளார். ஒரு குழுமமாக உருவாகிய வங்காலை மக்கள் கடவுளை நம்பி விசுவசித்து வாழ்ந்து வந்தனர். அவர்களின் விசுவாச வழிநடத்தலில் உருவாகியவர்தான் பிரான்சிஸ் குலாஸ் அடிகளார்.

அவர் ஒரு விசுவாச விளக்கு, திரு விளக்கு, அகல் விளக்கு! அவர் விசுவாசத்தின் விளைநிலம்! வங்காலைப் பங்கின் சொத்து, மூத்த சொத்து! அவர் வங்காலையின் முகவரியாக வாழ்ந்திருக்கின்றார். வங்காலையின் முதற் குருவாகிய குலாஸ் அடிகளாரின் முன்மாதிரிகையான வாழ்வினால் வங்காலையில் பலர் இறை அழைத்தலைப் பெற்றுக்கொள்ளத் தூண்டுதலைப் பெற்றனர் எனலாம். வங்காலைப் பங்கு இதுவரை 26 குருக்களையும் எண்ணற்ற அருட்சகோதரிகளையும் இறைவனின் கொடையாகப் பெற்றுள்ளது.

குலாஸ் அடிகளாரின் பெருவாழ்வை இன்றைய இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லவேண்டியது நமது முக்கிய கடமையாகும்.

நமது கத்தோலிக்க திருச்சபையில் குருக்கள் இன்றியமையாதவர்களாக உள்ளனர். திருவருட்சாதனங்கள் இல்லாமல் திருச்சபை உயிருடன் இருக்க முடியாது. அதாவது குருக்கள் இல்லாமல் திருவருட்சாதனங்களை வழங்க முடியாது. அந்தவகையில் அக்கால வங்காலைச் சமுதாயத்திற்கு குருக்கள் வழிகாட்ட வேண்டிய வேளையில் இதனை முதலில் நிலை நிறுத்தியவர் வங்காலையின் மூத்தமகன் பிரான்சிஸ் குலாஸ் அடிகளார்தான்.

"அன்பே கடவுள், கடவுளே அன்பு" என்ற கோட்பாட்டை அவர் அடிக்கடி வலியுறுத்துவார். குலாஸ் அடிகளார் அன்புள்ளவர். சினம் கொள்ளாதவர். அவரது பெருவாழ்வே இதற்குச் சாட்சி.

இவர் ஞாயிறு மறையுரைகள் மூலமும், திருவருட்சாதனங்கள் மூலமும் கடவுளை உலகிற்கு வெளிப்படுத்தினார். "வீட்டுக்கு ஒரு விவிலியம் வேண்டும்" என வலியுறுத்தினார். "வீட்டுக்கு ஒரு குருவை, வீட்டுக்கொரு கன்னியரை திருச்சபைக்கு கொடுங்கள்" என மக்களை உற்சாகப்படுத்தினார். இவ்வாறு அவர் அடிக்கடி மறையுரைகளில் கூறுவது வங்காலைப் பங்கு மக்களின் நெஞ்சங்களில் 'பசுமரத்தாணியாகப்' பதிந்துவிட்டது.

குலாஸ் அடிகளின் பெற்றோரான திரு. கயித்தான் அந்தோனி குலாஸ், திருமதி. மரிய கத்தறீன் பீரிஸ் ஆகியோரை நாம் மறந்துவிடலாகாது. பெற்றோரின் முன்மாதிரிகையான விசுவாச வாழ்வும், தியானமும், கண்ணியமுமே அடிகளை சிறந்ததொரு குருவாக உயர்த்தியது எனலாம்.

அடிகளார் மாதாவின் பக்தர், செபமாலை ஓதுவதில் செபவீரர், அவருடைய முன்மாதிரிகையான வாழ்வினால் அவருடைய சொந்தச் சகோதரங்களே துறவறத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். அவருடைய குடும்பத்தில் அருட்சகோதரி யூலியானா, அருட்சகோதரி மரியற்றா ஆகியோர் இறைபணியில் இணைவதற்கு குலாஸ் அடிகளாரின் பற்றுறுதி மிக்க துறவற வாழ்வு தூண்டுதலை அளித்திருக்கும் என நாம் நிச்சயமாக நம்பலாம்.

அடிகளாரின் பணிவாழ்வை நோக்கினால் அவர் யாழ்ப்பாண மறைமாவட்டத்திலேயே கூடுதலான காலம் பணியாற்றியுள்ளார். நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, பண்டியன்தாழ்வு, கொய்யாத்தோட்டம், பாஷையூர், தாழையடி, இளவாலை, சில்லாலை, மானிப்பாய், மாதகல், நாவாந்துறை, நீர்வேலி, கோப்பாய், அரியாலை, சுன்னாகம், முல்லையூர் போன்ற இடங்களில் பங்குத்தந்தையாகச் சிறப்பாகப் பணியாற்றினார். தனது இறுதிக் காலத்திலே மன்னார் மறைமாவட்டத்தில் கீரி, பட்டித்தோட்டம், ஞானோதயம், தாழ்வுபாடு, மன்னார் பேராலயம், வங்காலை, மடுத்திருத்தலம் போன்ற இடங்களில் தேவை ஏற்படும்போதெல்லாம் உதவிக்கரம் கொடுத்து பணியாற்றியுள்ளார்.

1951 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17 ஆம் திகதி இவர் அன்றைய யாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையினால் வங்காலை ஆனாள் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இதே ஆலயத்திலே 2001 ஆம் ஆண்டு 50வது பொன் விழாவைக் கொண்டாடினார். இறுதியாக குருத்துவத் திருநிலைப்படுத்தலில் 60வது வைரவிழாவை யாழ் நகரில் கொண்டாடினார்.

தனது உயிர் பிரியும் வேளையில் - தனது இறுதிப் பயணத்தின்போதும் கையிலேந்திய செபமாலையைக் கைவிடாது இறையடி சேர்ந்தார். அவர் இவ்வுலக வாழ்வை முடித்தாலும் அவர் நினைவுகளால் என்றும் எம்மோடு வாழ்வார். அவரின் ஆன்மா ஆனந்த பேரின்பத்தில் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

# தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வத்திக்கான் வெளியிட்ட செய்தி

## கிறிஸ்தவர்களும், இந்துக்களும் இணைந்து சமய சுதந்திரத்தை மேம்படுத்தல்

அன்புக்குரிய இந்து தோழர்களே!

இவ்வருடம் அக்டோபர் மாதம் 26ம் தேதி, தீபாவளி என்னும் ஒளி விழாவைக் கொண்டாடும் உங்களுக்கு திருத்தந்தையின் ஆலோசனை மன்றமாக இயங்கும் பல்சமய உரையாடல் மன்றம் தனது அன்பின் வாழ்த்துக்களை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றது.

காலச் சூழலுக்கேற்ப சிறப்புச் சிந்தனைகளை வழங்கும் பாரம்பரியத்தை தொடர்ந்து கடைப்பிடிக்கும் வண்ணம், இம்மன்றமானது, இவ்வருடம் 'சமய சுதந்திரம்' என்னும் மையப்பொருளை முன்வைக்கின்றது. இம்மையப்பொருள், சமயம் சார்ந்த நிலையில் உருவாக்கப்படும் வேறுபாடுகள், கொடுமைகள், முன்சார்பு எண்ணங்கள், ஒருதலைப்பட்சமான செயல்பாடுகள் ஆகியவற்றிற்கு உட்படுத்தப்பட்டிருக்கின்ற மனித இனத்தை காப்பாற்ற வேண்டுமென நம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த நிலையில், பல்வேறு இடங்களில் முதன்மைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

சமய சுதந்திரமானது உலகின் பல்வேறு பகுதிகளில் சமய வழியில் முனைப்புப்பெற்றுள்ள, முரண்பாடுகள், சண்டைகள், குழப்பங்கள் போன்றவற்றிற்கு சிறந்த பதிலாகவும் அமைகின்றது. இந்த முரண்பாடுகளின் வழியில் உருவாக்கப்படும் கொடுமைகளின் மத்தியில், பலர், நம்பிக்கை இழந்த நிலையில், அமைதியான கூட்டுச் செயல்பாடுகளுக்கும், ஒருமித்த மனித மேம்பாட்டிற்காகவும் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சமய சுதந்திரமானது, மனித மாண்பின் வழியில் வேரூன்றப்பட்ட அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றாக எண்ணப்பட்டிருக்கிறது. எத்தருணங்களில் எல்லாம் சமய உரிமைகள் நிராகரிக்கப்படுகின்றதோ அல்லது சிதைக்கப்படுகின்றதோ, அத்தருணங்களில் எல்லாம் அனைத்து மனித உரிமைகளும் சிதைக்கப்படுகின்றன. சமய சுதந்திரமானது, தனி மனித, குழும, நிறுவன, சமூக நிலையில் உருவாக்கப்படும் நிர்ப்பந்தங்களால், பாதிக்கப்படாத தன்மையைக் கொண்டுள்ளது. இச்சமய சுதந்திரம், ஒருவர் தன்னுடைய சமயத்தை, அதன் கொள்கைகளை, தனி மனித நிலையிலோ, பொதுவாகவோ, குழும நிலையிலோ, அறிக்கையிடுவதிலும், கடைப்பிடிப்பதிலும் பரவலாக்கம் செய்வதிலும், முழுச் சுதந்தரத்தை உள்ளடக்கிய உரிமையை செயல்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளது. ஆயினும் குடிமை, சமூக அதிகாரங்கள், தனிமனிதர்கள், குழுமங்கள், பிறரின் சுதந்திரத்தை மதிக்கும் சீரிய கடமையுணர்வையும் சுட்டிக்காட்டுகிறது.

மேலும், இச்சமய சுதந்திரம், ஒருவர் தன்னுடைய சமயத்தை மாற்றிக்கொள்ளும் சுதந்திரத்தையும் உள்ளடக்கியுள்ளது. இச்சமய சுதந்திரம் மதிக்கப்படும்போதும், மேம்படுத்தப்படும்போதும், சமய நம்பிக்கை உடையவர்கள், சமதர்ம மனித சமுதாய நியமங்களை கட்டி எழுப்புவதில், மற்ற குடிமக்களோடு இணைந்து செயல்படுகின்ற ஆற்றலையும் வலுப்படுத்தப்படுகிறது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

## தன் தாய்த்திருநாட்டில் திருத்தந்தை

# யேர்மனியர்களே! மதநெறிகளைப் புறக்கணிக்காதீர்கள்!

# வெற்றியைத் தேடுவதைவிட நீதியைத் தேடுங்கள்!

### யேர்மன் பாராளுமன்றத்தில் திருத்தந்தை அறைகூவல்



"யேர்மனியர்களே! மதநெறிகளைப் புறக்கணிக்காதீர்கள்; வெற்றியைத் தேடுவதைவிட நீதியைத் தேடுங்கள்" என்று தன் தாய்நாடான யேர்மன் நாட்டின் பாராளுமன்றத்தில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அறைகூவல் விடுத்தார். யேர்மன் பாராளுமன்றம், 622 உறுப்பினர்களைக் கொண்டது. யேர்மன் பாராளுமன்றம் கட்டடக்கலையிலும் வரலாற்றுச் சிறப்பிலும் புகழ் பெற்றதாகும். அங்கே அவருக்கு கொடுக்கப்பட்ட வரவேற்பில், பலமான நீண்ட கையொலியின் மத்தியில் "செவிசாய்க்கும் இதயம்; சட்டத்தின் அடித்தளங்கள் பற்றிய சிந்தனை" என்ற தலைப்பில் 20 நிமிடங்கள் திருத்தந்தை உரைாற்றினார்.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் 22.09.2011 அன்று தன் தாய்த்திருநாட்டில் அதிகாரபூர்வமான பயணத்தை மேற்கொண்டார். 2005இல் பதவி ஏற்றபின், இதுவரை இரண்டு தடவை யேர்மனியில் கால்பதித்திருந்தாலும் இதுவே அவருடைய முதல் அதிகாரபூர்வமான பயணமாகும். அத்தோடு அவரது 21ஆவது வெளிநாட்டுப் பயணமும் இதுவாகும்.

அன்று காலை 11.45 மணியளவில் பேர்லின் தலைநகரில் செங்கம்பள விரிப்பில் யேர்மன் அரச தலைவர்களான திரு. கிறிஸ்ரியான் வூல்வ் தன் துணையாளருடன் இணைந்தும் திருமதி அங்கேலா மேக்கல் தன் கணவருடன் இணைந்தும் வரவேற்க, 21 தடவை வேட்டொலிகள் முழங்க அங்கு சென்று இறங்கினார். அவர் விமானத்தைவிட்டு இறங்கியதும் நடைபாதையில் சிறார்கள் மஞ்சள் வெள்ளை நிறங்களைக்கொண்ட வத்திக்கான் கொடிகளை ஏந்தி நிற்க திருத்தந்தை தானும் அவர்கள் மகிழ்வில் கலந்து கொண்டவராக அவர்கள் வரவேற்பை ஏற்று நடந்துசென்றார். அதன்பின் அரச தலைவர்களைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடியபின் மாலை யேர்மன் பாராளுமன்றத்தில் உரையாற்றினார். யேர்மன் பாராளுமன்றம், 622 உறுப்பினர்களைக் கொண்ட கட்டடக்கலையிலும் வரலாற்றுச் சிறப்பிலும் புகழ் பெற்றதாகும். அங்கே அவருக்கு கொடுக்கப்பட்ட வரவேற்பில் பலமான நீண்ட கையொலியின் மத்தியில் 20 நிமிடங்கள், செவி சாய்க்கும் இதயம்; சட்டத்தின் அடித்தளங்கள் பற்றிய சிந்தனை என்ற தலைப்பில் உரையாற்றிய திருத்தந்தை, யேர்மனியர்களே! மதநெறிகளைப் புறக்கணிக்காதீர்கள்; வெற்றியைத் தேடுவதைவிட நீதியைத் தேடுங்கள்" என்ற கருத்தை முன்வைத்தார். (தொடர்ச்சி 15ம் பக்கம்)

## 200 நாட்கள் தொடர் செபமாலை

செபங்கள் இல்லாமல் உலக அமைதியை பெறுவது மிகவும் கடினம் என்று பிலிப்பைன்ஸ் பேராயர் சோக்ரட்ரெஸ் விலேகாஸ் கூறினார். பிலிப்பைன்ஸ் நாட்டின் குடும்ப செபமாலை அணி என்ற கத்தோலிக்க அமைப்பு எதிர் வரும் ஒக்டோபர் தொடக்கம் 200 நாட்களுக்கு 10 இலட்சம் செபமாலை செபிக்கும் ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது. இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி செபமாலை அன்னையின் திருநாள் ஆரம்பமாகும். இந்த முயற்சி அடுத்த 200 நாட்கள் வரை தொடர்ந்து இடம்பெற்று 2012 மே மாதம் 31ஆம் திகதி அனைத்து நாடுகளின் அன்னையான கன்னி மரியாளின் தினத்தில் நிறைவுபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## புனித இயாகப்பரின் திருவுடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள சந்தியாகோ கொம்போஸ்தெலாவில் எழுத்து வடிவம் தலைமறைவு

இஸ்பானியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள புனித இயாகப்பரின் திருவுடல் அடக்கம் செய்யப்பட்டதாக நம்பப்படும் சந்தியாகோ கொம்போஸ்தெலா திருத்தலத்தில் பல நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த விலைமதிக்க முடியாத 225 பக்கங்களைக் கொண்ட எழுத்து வடிவம் தலைமறைவாகியுள்ளது. இதுவே இயாகப்பர் பாதை எனப்படும் திருத்தலப் பாதயாத்திரைக்கான முதல் வழிகாட்டியாகும்.

12ம் நூற்றாண்டின் பெறுமதிவாய்ந்த இவ்வெழுத்து வடிவம் சந்தியாகோ கொம்போஸ்தெலாவில் மிகவும் பாதுகாப்பாக இரும்புப் பெட்டகத்தினுள் பூட்டி வைக்கப்பட்டிருப்பதுடன் மிக முக்கியமான வேளைகளில் உதாரணமாக திருத்தந்தையின் தரிசிப்புக்களின்போது வெளியே எடுக்கப்படும். இது வைக்கப்பட்டிருந்த பெட்டகத்தைத் திறப்பதற்கான அனுமதி 6 நபர்களுக்கே இருந்துள்ளது.

ஸ்பானிய பொலிசார் இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் வெளிநாட்டு நிபுணர்களையும் இவ்விசாரணையில் உதவுமாறு கோரியுள்ளனர்.

இந்த எழுத்து வடிவம் 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருத்தந்தை 2ம் கலிஸ்ரர் அவர்களுக்கு சொந்தமானது என்பதுடன் இது இஸ்பானிய கலாச்சார அமைச்சின் பாதுகாப்புக்கு உட்பட்ட சொத்துக்களில் ஒன்றாகும். இதில் திருத்தூதர் யாகப்பரின் கல்லறை அமைந்துள்ள சந்தியாகோ கொம்போஸ்தெலாக்கு யாத்திரை ஆரம்பித்த நாட்கள் குறித்து தகவல்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ. நாவில் பலஸ்தீனம் உறுப்பு நாடாக திருபீடம் ஆதரவு

புனித பூமியில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு அனைத்துலக சமுதாயம் தனது அர்ப்பணத்தை அதிகரித்து அதற்கான தனது முன்னெடுப்புகளை முடுக்கிவிடுமாறு திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் ஐ.நா.வைக் கேட்டுக்கொண்டார்.

நியூயோர்க்கில் ஐ. நா. தலைமையகத்தில் நடைபெற்ற 66வது பொது அவையில் உரையாற்றிய திருப்பீடத்தின் நாடுகளுக்கிடையேயான உறவுகளின் செயலர் பேராயர் டொமினிக் மம்பர்த்தி, புனித பூமியில் இஸ்ராயேல் மற்றும் பலஸ்தீனியர்களின் உரிமைகள் மதிக்கப்படுவது முக்கியம் என்பதை வலியுறுத்தினார்.

பலஸ்தீனம் ஐ.நாவில் உறுப்பு நாடாக அங்கம் வகிப்பது குறித்து பலஸ்தீனத் தலைவர் முகமட் அப்பாஸ் செப்டம்பர் 23ம் திகதி ஐ.நா பொது அவையில் முன்வைத்துள்ள கோரிக்கையை குறிப்பிட்டுப் பேசிய பேராயர் மம்பர்த்தி, இந்தக் கோரிக்கைக்கு, அனைத்துலக சமுதாயத்தின் ஆதரவுடன் தீர்வு வழங்கப்படுமாறு கேட்டுக்கொண்டார். மேலும் தற்சமயம் நாடுகளின் குடும்பம் எதிர்நோக்கும் முக்கிய சவால்களாக கிழக்கு ஆபிரிக்க நாடுகள் எதிர்கொள்ளும் மனிதாபிமான நெருக்கடிகள், உலகில் சமய சுதந்திரம் மதிக்கப்படுவதின் தேவை, உலகம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி, நிதி நெருக்கடி ஆகியவற்றை சுட்டிக்காட்டி அவர் உரையாற்றினார்.

2012 சனவரி முதல் நாள் தனது இரண்டாவது பதவிக் காலத்தைத் தொடங்கும் ஐ. நா.பொதுச் செயலர் பான் கி மூனுக்கு தனது வாழ்த்துக்களையும் பேராயர் மம்பர்த்தி தெரிவித்தார்.

## வடகொரியாவுக்கு கரித்றாஸ் உதவி

அடக்குமுறைகளைக் கையாண்டுவரும் வடகொரிய அரசுக்கு எவ்வித உதவிகளையும் வழங்குதல்கூடாது என்பது சரியான கொள்கையாக இருந்தாலும், பசியால் வாடும் அந்நாட்டு மக்களை புறக்கணிக்க முடியாது என்ற கரித்றாஸ் அமைப்பு, தங்கள் உதவிகள் யாவும் மக்களை நேரடியாகச் சென்றடைவதாக இருக்கும் என்றுரைத்து, 100 டன் மாவுப் பொருட்களை வழங்கியுள்ளது.

## புலம்பெயர்ந்து வாழும் நம் மக்கள் ஐரோப்பிய நாடுகளில் கொண்டாடிய மரியன்னை திருவிழாக்கள்

ஐரோப்பிய நாடுகளில் வாழும் நமது மக்கள் அன்னை மரியாளிடம் ஆழமான பக்தியும் அவரது பரிந்துரையிலும், மன்றாட்டிலும் மிக உறுதியான நம்பிக்கையும் வைத்துள்ளார்கள் என்பது முற்றிலும் உண்மை. எமது மக்கள் பக்தி ததும்ப மாதா திருவிழாக்களை தகுந்த ஆயத்தங்களோடும், மிகுந்த அர்ப்பணிப்போடும் பல மைல்கள் தூரம் பயணித்து நேரத்தையும், காலநிலையையும் பொருட்படுத்தாமல் வேண்டுதல்கள் செய்வது இந்நாட்டில் அவர்களின் விசுவாசத்திற்கு தக்க சான்றாக விளங்குகின்றது. பிரான்ஸ் கிளிசி சுவா பகுதியில் சம்மனசுகளின் இராக்கினி திருவிழா மிகவும் சிறப்பாக அனைத்துப் பணித்தளங்களும் இணைந்து கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி நாட்டில் கேவிலாரில் 12.08.2011 நடைபெற்ற அன்னை மரியாளின் 24வது வருடாந்த திருவிழாவில் பிரான்ஸ் நாட்டிலிருந்தும், ஏராளமான இறைமக்கள் வருகைதந்து பக்திபூர்வமாக பங்கேற்றனர். கேவலார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் தலைமையில் வருடாந்த யாத்திரை திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்விழாவில் மரியன்னைமீது பக்திகொண்ட ஆயிரக்கணக்கான இந்துமத சகோதரர்கள் நம்பிக்கையோடு பங்கேற்று தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு அன்னைக்கு நன்றி தெரிவித்தார்கள்.

டென்மார்க் நாட்டின் மருதமடு அன்னையின் வருடாந்த திருவிழா 27.08.2011 அன்று உயிம் என்ற காடுகள் அடர்ந்த பகுதியில் உள்ள மரியன்னை திருத்தலத்தில் நடைபெற்றது. இவ்விழா டென்மார்க் ஆயர் செஷ்லாகோ தலைமையில் வெகுவிமரிசையாகவும், பக்திபூர்வமாகவும் கொண்டாடப்பட்டது. இவ்விழாவின்போது பிரான்ஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனர் லீனஸ் சொய்சா அடிகளார் அங்கு திரண்டிருந்த இறைமக்களை ஆன்மீக ரீதியில் அன்னை மரியாளைப்போன்று இறை சித்தம் நம் ஒவ்வொருவரிலும் நிறைவேற ஒத்துழைக்குமாறு அழைப்புவிடுத்து திருவழிபாட்டினைச் சிறப்பித்தார்.

## திருநற்கருணைக்குமுன் தாழ்மையோடு மண்டியிடும் எவரும் அடுத்தவரின் தேவைகளைக் கவனியாது இருக்க முடியாது

### இத்தாலியின் தேசிய நற்கருணை மாநாட்டில் திருத்தந்தை உரை

திருநற்கருணைக்குமுன் தாழ்மையோடு மண்டியிடும் எவரும் அடுத்தவரின் தேவைகளைக் கவனியாது இருக்க முடியாது என்றும், அடுத்தவரின் பசி, தாகம், ஆடையின்மை, உடல் நலக்குறைவு ஆகிய பல்வேறு தேவைகளைத் தீர்க்காமல் போக மாட்டார்கள் என்றும் தன் மறையுரையில் வலியுறுத்திக் கூறினார். இத்தாலியில் அன்கொனா நகரில் கடந்த செப்ரம்பர் மாதம் ஒரு வாரமாக கொண்டாடப்பட்ட 25வது தேசிய திருநற்கருணை மாநாட்டின் நிறைவுத் திருப்பலியை 18.09.2011 ஞாயிறன்று நிகழ்த்தி மறையுரை வழங்கியபோதே திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

இன்றைய உலகில் பெருமளவு வளர்ந்துவரும் சுயநலம், தற்பெருமை ஆகிய குறைகளுக்கு ஒரு மாற்று மருந்தாக திருநற்கருணையைச் சார்ந்துள்ள ஆன்மீகம் விளங்குகின்றது என்றும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார். திருச்சபை என்ற குடும்பத்தின் இதயத்துடிப்பாக விளங்கும் திருநற்கருணை ஆன்மீகம், பிளவுகளையெல்லாம் மேற்கொள்ளும் ஒரு சிறந்த வழி என்றும் கூறிய திருத்தந்தை, சமுதாயத்தில் மிகவும் நலிந்தோரை மீண்டும் மனித குலத்தின் மையத்திற்குக் கொண்டுவரும் வலிமைபெற்றது இந்த ஆன்மீகம் என்று கூறினார்.



## 55 ஆண்டு காலத் தயாரிப்பில் யப்பான் மொழியில் விவிலியம்

விவிலியம் முழுவதையும் யப்பானின் பேச்சு வழக்கிலுள்ள மொழியில் மொழிபெயர்க்கும் பணி 55 ஆண்டு கால அயரா உழைப்பிற்குப்பின் தற்போது நிறைவுக்கு வந்துள்ளது.

1956இல் டோக்கியோவில் நிறுவப்பட்ட பிரான்சிஸ்கு துறவற சபையால் மொழிபெயர்த்து முடிக்கப்பட்ட யப்பான் வட்டார வழக்கு மொழியிலான விவிலியத்தை, அச்சபையினரும் சலேசியர்களும் பவுல் சபையினரும் இணைந்து வத்திக்கான் நூலகத் தலைவரிடம் ஒப்படைத்தனர். ஏற்கனவே 1950 ஆம் ஆண்டு காலத்திலேயே இலத்தீன் மூலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட யப்பான் விவிலியம் பயன்பாட்டில் இருந்தாலும் தற்போதுதான் மூலப் படிவத்திலிருந்து நேரடி மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர்

தொடர் 01.

"என்னடி, அரசியல்வாதியைக் காதலிப்பதாகச் சொன்னா. அப்ப, எப்ப திருமணம்?" எனக் கேட்ட நண்பிக்கு அவள், 'நம்மட திருமணத்திற்கு உங்கட வீட்டில எல்லாருமே பெரும் எதிர்ப்புக் காட்றதால, நீ அவங்க சொல்லிற மாதிரியே அவங்க விரும்பிற இடத்தில திருமணத்தச் செய்! நான் வெளியில இருந்து ஆதரவு தாறன்' என்கிறாண்டி அந்தப்பாவிப் பயல்!" எனப் பதில் நிறுத்தினாள்.

நம் நாட்டின் இத்தனை சோகங்களுக்கும், சொல்லொணாத் துன்பங்களுக்கும், அழிவுகளுக்கும், பிரிவினைகளுக்கும் பிரதான காரணமானவர்கள் அரசியல்வாதிகள்தான். நாட்டு நலனையும், மக்களின் நல்வாழ்வினையும் முன்வைத்து செயற்பட வேண்டியவர்கள் தங்களில் வருவாயையும், செல்வாக்கையும் வளர்த்துக்கொள்வதில்த்தான் கருத்தாய் இருக்கிறார்கள்.

இவ்விடயத்தைக் குறிப்பிடும்போது,"அரசியலில் 'நா'ணயத்தை இழந்தால்தான் குடும்பத்திற்கு 'நாணய'த்தைச் சேர்க்கலாம். ஒரே வார்த்தையில் இரு பொருள் வைத்தது எவ்வளவு சுகமாக இருக்கிறது பார்த்தீர்களா!" என்ற கவியரசு கண்ணதாசனின் கூற்று நினைவுக்கு வருகிறது.

தேர்தல் காலங்களில்தான் பிச்சைக்காரர்கள் அதிகமாய் இருக்கிறார்கள். பொருளாதாரப் பிச்சைக்காரர்களோடு அரசியல் பிச்சைக்காரர்களும் வாக்குப்பிச்சை கேட்டு வருவதுதான் அதற்குக் காரணம். தேர்தல் காலங்களில்தான், 'நாங்கள் உங்கள் நண்பர்கள்', 'நாங்கள் உங்கள் தோழர்கள்', 'நாங்கள் உங்கள் உறவினர்கள்', 'நீங்கள் எங்களை நம்பலாம்' என்றெல்லாம் உள்ளத்தையும், உணர்வுகளையும் தொட்டு சொந்தம் கொண்டாடுகிறார்கள். இந்நடிகர்களுக்குப் பிற்பாட்டுக்காரர்களும் நிறையவே இருக்கிறார்கள்.

தேர்தல் காலங்களில் வீடுவீடாக வருகிறார்கள், வீதி வீதியாகச் செல்கிறார்கள், உதவி ஒத்தாசை புரிகிறார்கள், பிரச்சினைகளைக் கேட்கிறார்கள், துப்பரவு சிரமதானப் பணிகளைச் செய்கிறார்கள், தங்களைச் சார்ந்த ஒருசிலருக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறார்கள், எதிர்காலத் திட்டங்கள் போடுகிறார்கள், வாக்குறுதிகளைக் கொடுக்கிறார்கள். தேர்தல் முடிந்ததும் இவர்களின் அறிக்கைகள், நேர்காணல்கள் மட்டும் அவ்வப்போது ஊடகங்களில் வெளியாகின்றன. இவற்றோடு தமக்கு வாக்குச் சேர்த்த ஒருசில இடங்களில் அபிவிருத்தித் திட்டங்கள். அத்துடன், வெளிநாட்டு தூதரகங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் செய்யும் வேலைத் திட்டங்களின் முடிவில் தாங்களும் வந்துநின்று தங்களுடைய தயவில்தான் எல்லாம் நடக்கிறது என்பதுபோல ஒரு 'குறும்படம்' காட்டிவிட்டு சென்றுவிடுகிறார்கள்.

இதனைக் குறிப்பிடுகின்றபோது,"வந்தாக போனாக வாசலுல நின்னாக, வாக்குறுதி மந்திரத்தை வாய்கிழியச் சொன்னாக, வாய்கிழியச் சொல்லிவிட்டு வாக்குகளக் கேட்டாக, வாக்குகள் வாங்கிப்புட்டு வந்தவழி போனாக, போனவுகளக் காணலியே போன இடம் தெரியலியே!" என்கிறார் சு. பாண்டியன்.

"தனக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் எல்லாம் தெரிந்தவர்போல் நடிப்பவன்தான் அரசியல்வாதி. வாக்காளர்கள் முட்டாள்களாக இருந்தால் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சட்டசபைக்குச் செல்பவர்கள் அயோக்கியர்களாகத்தான் இருப்பார்கள். அரசியல் என்பது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்" என அரசியல்வாதிகளைக் காரசாரமாக விமர்சிக்கிறார் அறிஞர் பேர்ணாட்ஷா. இவ் அறிஞரின் வரைவிலக்கணத்திற்கு உட்பட்டவர்கள் மேற்கூறப்பட்ட இருதரத்தாரிலும் இன்னும் நிறையவே இருக்கத்தான் செய்கிறார்கள்.

இன்று, மாறி மாறிச் சொற்போர் புரிவதிலும், குற்றம் சுமத்துவதிலும் நம் அரசியல்வாதிகளின் காலங்கள் போய்விடுகின்றன. இவ் அரசியல்வாதிகள் தங்களின் சுயநல நோக்குகளை அடைய இப்போது சமயத் தலைவர்களைப் பயன்படுத்தி ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்களாக வலம் வருகின்றார்கள். அன்று, அரசர்கள் நல்லாட்சி செய்யப் புலவர்கள் முக்கிய பங்காற்றி இருக்கிறார்கள் என்பது வரலாறு. அரசர்களின் அவையில் அரச பிரமுகர்கள், சேனாதிபதிகள், மந்திரிமார், சேவகர்கள் போன்றவர்களுடன் புலவர்கள் முக்கிய இடம் வகித்தார்கள். அயல் நாட்டு அரசர்களுடன் சமாதானமாய் வாழ்வது, சமாதானத் தூது செல்வது, மக்களை நீதி நெறியில் வழிநடத்துவதுபற்றி அரசர்களுக்கு ஆக்கபூமான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் சொல்லிக்கொடுத்தார்கள்.

இதனைத் தமிழ் மரபிலும், விவிலிய மரபிலும் அவதானிக்கலாம். கடவுள் நம்பிக்கைகொண்ட அரசர்கள், ஏன் இறை நம்பிக்கை இல்லாத அரசர்கள்கூட இறைவாக்கினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு அவற்றை மதித்து, ஏற்று செயற்படுத்தினார்கள். அதேவேளை, அரசர்களுக்கு இவர்கள் சவாலாகவும் விளங்கினார்கள். பல சந்தர்பங்களில் நீதியை நிலைநாட்ட, அரசர்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கும் ஆளானார்கள்.

எனினும் தங்களின் கடமையில் - பொறுப்பில் - அழைப்பில் இருந்து சற்றும் விலகாமல் இப்புலவர்களும், இறைவாக்கினர்களும் தம் அறிவுறுத்தல் பணியை - இறைவாக்குப் பணியை பல சவால்களுக்கு முகம் கொடுத்து, ஆற்றி வந்திருக்கிறார்கள் என்பதை வரலாற்றுப் பதிவுகள் கூறும்.

ஆனால், இன்று நிலமை வேறு விதமாக உள்ளது. சமயத்தலைவர்கள், அரசியல்வாதிகளின் பிடிக்குள் அல்லது அவர்களின் ஆளுகைக்குள் அல்லது அவர்களின் முற்றுகைக்குள் அகப்பட்டுக்கொண்டார்கள் போலத்தான் தோன்றுகிறது!

தாமாக, பாரபட்சமின்றி, சுத்திரமாக, துணிவாகத் தம் கருத்துக்களைக் கூறமுடியாத ஊமைகளாக கைகட்டி, வாய்பொத்தி நிற்கிறார்கள் (ஒருசிலரைத் தவிர –அவர்களுக்குத் தலை வணங்குகிறோம்). இதனால் உண்மைகளை உரத்து, உரைக்க முடியாமல் மதில்மேல் பூனைபோல தங்களின் நிலைப்பாடுகளையும், சந்திப்புக்களையும், நேர்காணல்களையும் வைத்துக்கொள்கிறார்கள். அல்லது 'நித்திய மௌனம்' காக்கிறார்கள்.

ஏன் இந்த மௌனம் என விளங்க முடியாதிருக்கிறது? இதுவரை காத்த மௌனத்தினால் எத்தனை தீமைகள் தடுத்து நிறுத்தப்படாமல் இதுவரை காலமும் அரங்கேறி இருக்கின்றன?

இந்நாட்களில் உலக நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் குறிப்பாக, சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்றன இலங்கையில் 2009 ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட போரினைப் பற்றிய பாரபட்சமற்ற, பக்கச்சார்பற்ற நீதி விசாரணை வேண்டும் என மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தவண்ணமுள்ளன.

இத்தருணத்திலாவது, வன்னிப் பிரதேசத்தின் சனத்தொகையில் இவ்வளவு வீதமானவர்கள் அல்லது இவ்வளவு எண்ணிக்கையான கத்தோலிக்கர்கள் 2008ஆம் ஆண்டில் அங்கு வாழ்ந்திருக்கிறார்கள். 2008ஆம் ஆண்டில் நடந்த போரில் ஆகக்குறைந்தது இவ்வளவு தொகையான கத்தோலிக்க சகோதரங்களையும், 'காணாமல் போன குரு'வையும் நாம் இழந்திருக்கிறோம் என ஏன், வெளி உலகிற்கு உரத்து உரைக்க முடியாது?

நம்மிடம்தானே பதிவுகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. நமது திருச்சபைதானே 'கையும் கணக்கு'மாய் இருக்கும் திருச்சபை, அதாவது பிறப்பு, திருமுழுக்கு, முதல்நன்மை, உறுதிப்புசுதல், திருமணம் எனப் பதிவுகளோடு இருக்கும் திருச்சபை. அனேகமாக பதிவுப் புத்தகங்கள் அழிந்திருக்கலாம். அதனால் என்ன? புத்தகப் பதிவுகள்தானே அழிந்தன, 'நினைவுப் பதிவுகள்' எம்மோடுதானே இருக்கின்றன! பொறுப்புவாய்ந்த சமயத் தலைவர்கள் மௌனம் கலைத்து தங்கள் மனச்சான்றுக்காவது செவிகொடுப்பார்களா?

மண்ணோடு மண்ணாய் மடிந்துபோன ஆயிரமாயிரம் உறவுகளுக்கும், இருக்க இல்லிடம் இல்லாமல் இன்றும் ஏதிலிகளாய், நடைபிணங்களாய் திரியும் சகோதரர்களுக்கும் நீதி கிடைக்க இவர்கள் இறைவாக்கினர் ஆவார்களா? நம் நாட்டுத் தலைவர்கள் போர்க் காலங்களில் போர்க் குணத்தோடும், போர் முகத்தோடும் செயல்ப்பட்டவர்கள் இப்போது அதே போர் முகத்தோடும், போர்க் குணத்தோடும் வெளியே வரமுடியாத காரணத்தினால் போர்த்திக்கொண்டு வெவ்வேறு வடிவங்களில், வித்தியாசமான உருவங்களில் வருகிறார்கள். இதுதான், 'மர்ம மனிதன்' விவகாரம் என விளங்கிக் கொள்ளத் தோன்றுகிறது.

மக்களைக் கதிகலங்கச் செய்கின்ற இதுபோன்ற பிரச்சனைகள் பற்றியே குரல் எழுப்புவதற்கும்கூட திராணி இல்லாத நம் தலைவர்கள் இருக்கிறார்கள் (மீண்டும் ஒருசிலருக்குக் தலைவணங்குகிறோம்) என்பதை நினைக்கிறபோது எம்மையே நாம் பார்த்துப் பரிதாபப்படவேண்டி இருக்கிறது.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

## நாடு திரும்பியுள்ள அன்பு அடிகளாருக்கு புதிய பணிப்பொறுப்பு



அருட்பணியாளர் அன்புராசா அடிகளார் கடந்த நான்கு வருடங்களாக (2007 செப்ரம்பர் - 2011 மே வரை) பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்துபதியில் ஆன்மீகக் குருவாகப் பணிபுரிந்தபின்னர் இவ்வாண்டு யூலை மாதம் நாடு திரும்பினார். அன்னை மரியாள் பெர்ணடெற் அம்மாளுக்கு காட்சிகொடுத்த 150வது ஆண்டு யூபிலி ஆண்டை முன்னிட்டு லூர்துபதிக்கு செல்லக்கூடிய தமிழ் யாத்திரிகர்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவுசெய்வற்காகவே இவர் அங்கு அனுப்பப்பட்டிருந்தார்.

கடந்த யூலை மாதம் முதல் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் அமைந்துள்ள அமதிகளின் சிறிய குருமடத்தின் (Oblate Juniorate) அதிபராக புதிய பணிப்பொறுப்பை ஏற்று சிறப்பாக தன் கடமைகளைச் செய்துவருகின்றார்.

கடந்த சில வருடங்களாக மன்னாவில் 'கதை, கருத்து, களம்" என்ற தலைப்பில் தொடர் கட்டுரையை எழுதிய இவர் தற்போது 'அதிர்வுகள்' என்ற பெயரில் புதிய தொடரை எழுத ஆரம்பித்துள்ளார். அடிகளாருக்கு எமது நன்றியையும் புதிய பணிப்பொறுப்பை சிறப்பாக மேற்கொள்ள இறையாசியையும் வேண்டி நிற்கின்றோம்.

# புனிதர்களின் பாதையில்

## புனித பிரான்சிஸ் அசிசியார்

### மடாதிபர் – (கி.பி. 1181 – 1226)



மாதமொரு புனிதரை அறிந்து கொள்வோம்

ஒக்ரோபர்

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு, நாடுகளைக் கைப்பற்று, அடிமைச் சந்தையில் செல்வத்தைப் பெருக்கு" என்ற தீமைகள் மலிந்து கிடந்தபொழுது, செல்வாக்கான குடும்பத்தில் தோன்றியவர்தான் இளைஞர் பிரான்சிஸ். தந்தை ஈட்டிய சொத்தையெல்லாம், "அப்பா, நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு, வீட்டை விட்டு வெளியேறி எளிமைத் தனத்தை தன் மனைவியாகத் தெரிந்துகொண்டார். இயல்பாகவே இயற்கையில் இறைவனைக் கண்டார். பறவைகளில் விலங்குகளில் இறைவனைக் கண்டார். கதிரவனோடும், நிலவுடனும் உறவுகொண்டு வாழ்ந்தார்.

இவைகளோடு ஒன்றித்து, இவர்கள் பெயராலும் இறைவனைப் புகழ்ந்து பாடுவதிலேயே தெய்வீக இன்பம் கண்டார். எனவே, கிறிஸ்தவனுக்கு உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை அல்லேலூயாதான். பேய்கள் -தான் வாடிய முகத்துடன் இருக்க வேண்டுமென்பார்.

இன்று சுற்றுப்புறச் சூழலின் தூய்மையைக் காக்க வேண்டுமெனக் கொடிபிடிப்பவர்கள் சுற்றுப்புறச் சூழலுடன், பறவைகள், ஆறுகள், கதிரவன், நிலவு முதலியவற்றுடன் இடைவிடாமல் உறவுகொண்டு அவர்கள் பெயரால் இறைவனைப் புகழ்ந்திட வேண்டும். அதற்கு இப்புனிதரை தலைசிறந்த வழிகாட்டியாக தெரிந்து கொள்வதே அறம்.

இவர் துறவு பூண்ட பத்தே ஆண்டுகளில் பல ஆயிரம் இளைஞர்கள் இவரைத் தங்கள் தலைவராக ஏற்று இவரது சபையில் [illegible]. புனித கிளாரம்மாளும் இவர் காட்டிய வழியைப் பின்பற்றி, ஒரு சபையை நிறுவினார். அதிலும் ஆயிரக்கணக்கில் இளம்பெண்கள் சேர்ந்து இயேசுவின் தாழ்ச்சி, எளிமைத்தனத்திற்குத் தங்களைக் கையளித்தனர்.

பொதுநிலையினருக்கு அவர் தோற்றுவித்த 3ஆம் சபையிலும் இன்று மக்கள் இலட்சக்கணக்கில் சேர்ந்து, செபம் தபம் முதலியவற்றில் தங்களை ஈடுபடுத்தி புனிதர்களாக வாழ்கின்றனர். புனித பிரான்சிஸ் எல்லாத் துறவிகளுக்கும், இவரைப் பின்பற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் கொடுக்கும் ஒழுங்குகளின் சாரத்தை, இவ்வாறு கூறலாம். "கிறிஸ்துவின் சிலுவை அவரது சாவுப் பாடுகள் இவைகள்தான் நமக்கு ஆற்றலும் ஏவுதலுமாக அமைய வேண்டும்."

இவர் இளைஞராக வாழ்ந்த நாட்களில், இளமைத்துடிப்பு இவரைச் சில விரும்பத்தகாத விளைவுகளுக்கு கொண்டுபோய் விட்டன. ஆனால் இவரது நீண்ட செபங்களும், கண்விழிப்பும் கிறிஸ்துவுக்காக எல்லா மாயைகளையும் உதறிவிடச் செய்தன. இதன் உச்சக்கட்டமாகவும், உறுதிப்படுத்தும் முறையிலும், "மனம் திரும்பிவிட்டேன்" என்று குறிப்பிடும் விதத்திலும் வழியில் கண்ட ஒரு தொழுநோயாளியை இயேசுவின் அன்பின் பொருட்டுத் தழுவிக் கொண்டார்!

"பிரான்சிஸ், இந்நாள் வரை நீ உன் உடலில் அனுபவித்த இன்பங்களை, இப்போது நீ வெறுத்து ஒதுக்கினால்தான், எனது திருவுளத்தை நீ உணரமுடியும், அப்படி ஒதுக்கினால், நீ இதுவரை விரும்பிய சுகபோகங்கள் உனக்குக் கசப்பாக மாறும். உனக்கு எவை கசப்பாக இருந்தனவோ, அவை சுவையாக மாறும்" என்ற இறைவனின் சொற்களை இவர் தம் செப நேரத்தில் கேட்க முடிந்தது.

இவர் சாகும்போது, இவருக்கு வயது 44. பாதிப் பார்வை இழந்த நிலை. கடுமையான நோயினால் தாக்கப்பட்டு இருந்தார். சாவதற்கு ஈராண்டுகளுக்கு முன்னர் ஆண்டவர் இவருக்கு 5 காயங்களைப் பதித்தார். அவைகளிலிருந்தும் அவருக்குப் பொறுக்கமுடியாத வேதனை. சாவுப்படுக்கையில், "ஓ ஆண்டவரே, நீர் அனுப்பும் சாவு என்னும் சகோதரிக்காக உம்மைப் போற்றுகின்றேன்" என்று மன்றாடினார்.

இவர் தியாக்கோன் பட்டத்திற்குப் பிறகு குருப்பட்டம் பெறத் தாம் தகுதியற்றவர் என்று உணர்ந்தார். எனவே இவர் குருப்பட்டம் பெறவில்லை. அந்த அளவுக்குத் நற்கருணைமீது அவருக்கு ஆழமான விசுவாசமும், மதிப்பும் வளர்ந்துவந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘தாகமாய் இருக்கிறது’

(யோவான் 19/28)



## கடந்த மாதங்களில் நாட்டையே உலுக்கிய ‘மர்ம மனிதன் விவகாரம்’ தொடர்பான ஓர் பார்வை

அருட்பணியாளர் ஆர். அகஸ்ரின் புஸ்பராஜா
முருங்கன் மறைக்கோட்ட முதல்வர்.

### முன்னுரை

“தாகமாய் இருக்கிறது!” இது இயேசு சிலுவையில் தொங்கிய வண்ணம் மொழிந்த வார்த்தைகளில் ஒன்று. இயேசுவிற்கு எப்போதும் மக்களின் முழுமனித விடுதலையில்தான் ‘தாகம்’ இருந்தது. நிறைவாக, மகிழ்வாக, மாண்பாக, சுதந்தரமாக, சகோதரமாக அனைவரும் வாழவேண்டும். பாவம் நீங்கி விண்ணரசில் சேரவேண்டும் என்பதே அவரின் தணியாத தாகம்.

எம் மரபுவழிக் கதைகளில் பூதங்களுக்கு நரபலி கொடுத்து குளங்களைக் கட்டியதையும், புதையல்களை எடுத்ததையும் கேள்விப்பட்டிருக்கின்றோம். குழந்தைகளுக்கு உணவூட்ட “பூதம்பிடிக்கும்” எனப் பயமுறுத்தும் நிகழ்வுகளும் எம்மிடையே உண்டு. ஆனால் இன்று இக்கதைகள் எல்லாம் மாறி நவகாலப் பூதங்களும் அவற்றின் புதிய தாக்கமும் எம் வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் மற்றும் மலையகப் பிரதேசங்களில் ஏற்பட்டது. இது யாருடைய தாகம்?

தமிழரின் இரத்ததானம் முடிவடைந்தது என்ற சிலரின் எண்ணங்களுக்கிடையே - இல்லை உங்கள் இரத்தம் எமக்கு இன்னும் தேவை என்ற கொடூர வாஞ்சையோடு தமிழ், முஸ்லிம் பெண்களின் இரத்தத்தை இழிவாக உறுஞ்சுகின்ற துர்ப்பாக்கிய தாகம் ஒன்று அண்மைய நாட்களில் ஏற்பட்டதை யாவரும் அறிவர்.

இதில் நடந்தது என்ன? ஏன் நடந்தது? யார் நடத்தியது? போன்ற கேள்விகளும், பல ஐயங்களும் மக்கள் மத்தியில் எழுந்திருந்த நிலையில் இதனை இரைமீட்டுப்பார்க்க அழைக்கின்றேன்.

### 02) யார் இவர்கள்?

கிறீஸ் பூதங்கள், கிறீஸ் பேய்கள், கிறீஸ் யக்கா, மர்ம மனிதர்கள் என இவர்கள் பல பெயர்களினால் அழைக்கப்பட்டனர். வழுக்குகின்ற தன்மையுள்ள கிறீஸ் என்னும் பதார்த்தத்தை உடலில் பூசி, உடல் கவசம் அணிந்து, முகத்தை கறுப்புத்துணியால் மறைத்து பயங்கரத் தோற்றத்துடன் இவர்கள் காட்சியளித்துள்ளனர். கத்தி, கைத்துப்பாக்கி போன்ற ஆயுதங்களும், மக்களை மயங்கவைக்கும் இரசாயன மருந்துகளும் இவர்களோடு இருந்ததை பலரும் கண்டுள்ளனர்.

இரத்ததாகம் கொண்ட இம்மர்ம மனிதர்கள் யார்? என்ற மக்களின் பீதிக்கும், கேள்விக்கும் பொறுப்பான அரசின் பதில் இப்படியிருந்தது. “இது வேலையற்றவர்களின் வேலை, உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களின் அட்டகாசம், வதந்தி, கற்பனைக் கதை, காதலர்களின் சேட்டை, முன்னாள் புலிகளின் அல்லது அவர்களின் ஆதரவாளர்களின் வேலை, சமாதானத்தை விரும்பாத அரசியல்வாதிகளின் சதிமுயற்சி, அவசரகால சட்டத்தினை நீடிப்பதற்கான எதிர்க்கட்சியினரின் வன்முறை, மக்களைக் குழப்புவதற்கென வெளிநாட்டு சக்திகளின் முயற்சி” எனக் கூறி இம்மர்ம மனிதருக்கும், தமக்குமிடையே எவ்வித தொடர்பும் இல்லை என்பதையே அரசு உறுதிப்படுத்த முனைந்தது.

ஆனால் “மர்ம மனிதரின் மர்மம் அரசாங்கம் அறியும். அதனால் கட்டுப்படுத்தும் தேவை ஏற்படவில்லை” என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்ததும், “அரசுதான் மர்ம மனிதன். புலிகளை அழித்த படையினருக்கு பூதத்தைப் பிடிக்க முடியவில்லையா?” என தமிழரையே பிடிக்காத ஜே.வி.பி. குழுவின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில்ஹெந்து நெட்டி அரசை ஏளனம் செய்ய, இது யாருடைய செயல் என்பதை மக்கள் பலர் கண்டுகொண்டனர்.

### 03. மர்மத்தின் மர்மச் செயல்கள்

பெண்கள் வீடுகளில் இருக்கும்போதும், வேலை செய்யும் போதும், கிணற்றடியில் குளிக்கும்போதும், தனிமையாகப் போகும்போதும், தனிமையாக இருக்கும்போதும் அநாகரிகர் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். மரத்தில், வீட்டுப் பிளேற்றில், மறைவிடங்களில் ஒழிந்திருந்து பயமுறுத்தியும் உலோகத்தாலான மேலுறைகளை அணிந்தபடி அச்சமூட்டியும் பெண்களின் மார்புப்பகுதியை குறிப்பிட்டுத் தாக்கி இரத்தம் உறுஞ்சியும், காயப்படுத்தியும், கதவைத் தட்டியும், யன்னல்களால் பார்த்தும் பல வழிகளில் தாக்கியும், இரத்த ருசிப்பை செய்துள்ளனர். ஆண்க்ள் துரத்தும் சந்தர்ப்பங்களில் ஓடிய அவர்களின் வேகம் நூறுமீற்றர் ஓட்ட வீரன் உசைன் போல்டை விஞ்சுவதுபோல் இருந்ததாக கண்டவர்கள் கூறியுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் படையினர் இல்லாத இடங்களே இல்லை. ஆயினும் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் மக்கள் விழிப்புக் குழுக்கள் அமைத்து இரவில் காவல் செய்தும், அயலட்டங்கள் சூழ்ந்து தம்மைப் பாதுகாக்கும் சூழ்நிலையில் இருந்தனர். இப்படியிருக்க மர்மமனிதர்களால் உள்ளே நுழையவும், மக்கள் கண்டதும் ஊடறுத்து ஓடித் தப்பியதும் மக்களால் விளங்கமுடியாத ஒன்றாக இருந்தது.

இராணுவ முகாம், கடைற்படை முகாம், பொலிஸ் நிலையங்கள், தடைமுகாம்கள் என அவர்கள் ஓடி ஒளிந்ததை மக்கள் கண்டுள்ளனர். இவர்கள் தப்பி உள்நுழைவது கடினமாக மாறினால் எங்கிருந்தோ அரசபடை அவ்விடத்திற்கு விரைந்து அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்து அவர்களை பத்திரமாக மீட்டுச்சென்றது மக்களின் கண்முன் நிகழ்ந்தவையே. இதுபோன்ற சம்பவங்களினால் சமூக சமநிலையும் அமைதி நிலையும், குலைந்தது. இயல்புநிலை சீரழிந்தது.

### 04. மர்மத்தின் நோக்கம்

புகைபோகாத இடமெல்லாம் சென்று புலி பற்றிய செய்திகளைத் திரட்டியவர்களுக்கு இப்பூதத்தைக் கண்டுபிடிக்க முடியாமல்போனது ஏன்? வேலியே பயிரை மேயும் ஒரு வேதனைச் செயல் எனப் பலரும் நொந்து போயினர். இப்படிச் செய்ய வேண்டிய நோக்கம் என்ன? பலரும் தமது புலமைக்கு ஏற்ப அனுமானங்களையும், ஊகங்களையும் வெளிப்படுத்தத் தவறவில்லை.

அவைகளில் சில :-

- முக்கிய அரசியல்வாதி ஒருவரின் காலம் சரியில்லை. சோதிடரின் ஆலோசனையில் யாகம் செய்ய,
- புதையல் தோண்டி பொக்கிசமும், மன்னரின் கிரீடம் எடுக்க,
- தடுப்பிலிருந்த பல முன்னாள் போராளிகள் வீட்டில் உள்ளனர். இந்நிகழ்வுகளால் அவர்கள் ஒன்றுசேர்கின்றனரா? வீரம் காட்டுகின்றனரா என்னும் பலப் பரீட்சை,
- கிறீஸ் மனிதனைப் பிடிக்க ஆயுதம் எடுக்கப்படுகின்றதா என்ற ஆயுதக் கணக்கெடுப்பு,

ஆயினும் தமிழர்கள் இவற்றை நம்புவதைவிட இது ஒரு இனத்திற்கு எதிரான சதித்திட்ட செயல் என்பதை நன்றாக நம்புகின்றனர். இதனைத் திட்டமிட்டுச் செய்வோர் வெளிப்படையாக எதையும் கூறாவிட்டாலும் மறைமுகமாக செய்தி ஒன்றை கூற விளைகின்றனர் என்றே பலரும் ஊகிக்கின்றனர்.

அவசரகாலச் சட்டத்தை நீக்கமுன்பும், நீக்கிய பின்பும் இது தொடர்ந்தன. அவசரகாலச் சட்டத்தை நீக்கினாலும் போர் நிறுத்தப்பட்டாலும் சரி தமிழ்பேசும் மக்கள் வாழ்வது என்பது எமது தீர்மானத்தில்தான் உள்ளது எனக் கூறுவதும் ஓர் நோக்கமாக உள்ளது என பலர் கருதுகின்றனர்.



### 05. பாதிப்பும் பின்விளைவும்

எம்மவர்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இயல்பாகவே மென் சுபாவம் உள்ள பெண்கள் பயம், திகில், விரக்திக்கு உள்ளாயினர். நகர்ப்புறங்களில் வாகனச் சத்தம் கேட்டால் பயம். கிராமப்புறங்களில் தென்னை மரங்களில் இருந்து தேங்காய் விழுந்தால் - பனையில் இருந்து பனங்காய் விழுந்தால் பயம். சிறுபிள்ளைகளின் கலகலப்பான மாலைப் பொழுதுகள் பயங்கர இருளாக மாறின. ஒரு மாலைப் பொழுதில் எனது இடத்தில் தன் ஐந்து வயது மகனை ஊஞ்சல் ஆடும்படி தந்தை கூற அப்பிள்ளை “மாட்டேன் பயம், கிறிஸ்மென் பிடிக்கும்” எனக் கூறியது அங்கே நின்றவர்களை கவலையில் ஆழ்த்தியதைக் கண்டேன்.

ஆண்கள் வெளியே தம் மனைவி, பிள்ளைகளை காவல் காக்க, பெண்கள் வீட்டுக்குள்ளே அச்சத்துடன் இருக்க, இரவுகள் நித்திரையின்றிக் கழிந்தன. “போரின் அகோரத்துக்குள் வாழ்ந்தோம். இப்படிப் பயப்படவில்லை, நித்திரையின்றி இருக்கவில்லை, இப்போது நித்திரையே வருவதில்லை” என ஒரு தாய் கண்ணீர்மல்கக் கூறியது ஞாபகம் வருகிறது.

இவ்வாறு வடகிழக்கு, ஏனைய சில தமிழ் பகுதிகள் பயப்பீதியில் மூழ்க தென்பகுதி மக்கள் சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்டு எமது பிரதேசங்களுக்கு வந்து பயமின்றி இரவுகளைக் கழித்து திரும்பிய போது தாங்கள் என்ன இரண்டாம் தரப்பிரஜைகளா என்ற கோபக்கனல் பலரிடம் தென்பட்டது.

இன்னும், நடைபெற்று முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சை, 5ம் ஆண்டு புலமைப் பரீட்சைக் காலங்களில் மாணவர்களின் கற்றலிலும், பரீட்சையிலும் கிறீஸ் பூதம் செல்வாக்கு செலுத்தியதை காணமுடிந்தது.

முஸ்லிம்களின் றம்ழான் மாதத்தில் அவர்கள் தங்கள் சமயக்கடமைகளை செய்யமுடியாத பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அது திருமண காலமாக இருந்ததால் சம்பந்தப்பட்டவர்களும் பல பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளனர். எனவே, இச்செயலில் ஈடுபட்டோர் [illegible] அல்லது குழுவாகவோ நாடுபூராகவும் சமூக விரோதச் செயல்களை தூண்டிவிடலாம் எனும் பயமும், சமாதானத்தை விரும்புகிறவர்களுக்கும், நாட்டை நேசிப்பவர்களுக்கும் ஒரு பேரச்சத்தை தோற்றுவித்துள்ளது.

### ஏன் மக்கள் கொதித்தெழுந்தனர்?

மர்ம மனிதர்களின் அட்டகாசம் பெரும் பிரச்சினையாக மாறியது. தீர்வையும், பாதுகாப்பையும் மக்கள் அரசிடம் கோரினர். அது முதலில் மௌனம் காத்தது. பின்னர் இப்படி ஒன்றும் இல்லை என மறுத்தது. இதேவேளை இது யாரின் திட்டமிட்ட செயல், யார் பாதுகாப்பு அழிக்கின்றனர் என மக்கள் மெது மெதுவாக அறிந்தனர். “மர்ம மனிதனுடன் மனிதபிமானமாக நடந்துகொள்ளுங்கள். அவர்கள் பிடிபட்டால் அடித்து துன்புறுத்தாதீர்கள்” எனப் பரிந்து பேசி மர்ம மனிதருக்குப் பாதுகாப்புத் தேடியவர்கள் மக்களுடன் மனிதாபிமானமாக நடந்துகொள்ளவில்லை. ஒருபுறம் மக்கள் மர்ம மனிதரால் தாக்கப்பட, இதனைத் தட்டிக் கேட்டவர்கள் அதிக காட்டுமிராண்டித்தனமான முறையில் படையினரால் தாக்கப்படத்தொடங்கினர்.

இன்னும் ஊரூராகப் படையினர் சென்று, “மர்ம மனிதன் இல்லை. பயப்பட வேண்டாம். பிடிபட்டால் எம்மிடம் தாருங்கள்” எனக் கூறியவை மக்களுக்கு இன்னும் எரிச்சலூட்டின. “பொலிசார் உரியவிதத்தில் நடவடிக்கை எடுக்காததனாலேயே மர்ம மனிதர் விவகாரம் அனைத்து பகுதிகளுக்கும் பரவியது” என பெண்கள் அமைப்பு குற்றம் சாட்டியது.

“கே.பி.ஐ பிடிக்க முடியுமானால் மர்ம மனிதர்களைப் பிடிக்க முடியாதா?” என ஜே.வி.பி தலைவர் சோமவன்ச கேள்வி எழுப்புவதற்கு முன்னரே, “தாமே அனுப்பிய மர்ம மனிதரை தாமே பிடிப்பது எப்படி” என மக்கள் கேள்வி கேட்டனர்.

“மர்ம மனிதர்கள் இராணுவத்தினர் என்றால் அவர்களின் பெயர்களை வெளியிடுங்கள்” என்ற அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் பொறுப்பற்ற கதைகள் மக்களின் மனதை மேலும் புண்படுத்தியது. ஒரு இராணுவ முகாமில் இருக்கும் அனைத்து சிப்பாய்களின் பெயர்களையே அனேகமாக பொறுப்பதிகாரிக்குத் தெரியாமல் இருக்கும்போது, தம் அடையாளத்தை மறைத்துவரும் மர்ம மனிதனைப் பெயர் சொல்லி அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கிறோம் எனக்கூறுவது மக்கள் மனதில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியது.

பிடிபட்ட மர்ம மனிதர்கள் படையினரிடம் கொடுக்கப்பட்டபோது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமையும், மர்மமனிதன் அகப்படும் சந்தர்ப்பத்தில் படையினர் அவர்களைக் காப்பாற்றிய விதமும், மர்மமனிதர்கள் முகாம்களுக்குள் ஓடி ஒளிந்து தம்மைப் பாதுகாத்துக்கொண்டபோதும் தமக்கு நீதி கிடைக்கவில்லை, பாதுகாப்புக் கிடைக்கவில்லை என மக்கள் கொதித்தெழுந்தனர்.

ஏமாற்றப்படுகிறோம், பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறோம் என்பதை அறிந்த மக்கள் படையினருக்கு நெருக்கடி கொடுத்தனர். இச்சந்தர்ப்பத்தில் ஏனைய இடங்களில் இருந்து வருவிக்கப்பட்ட படையினர் காட்டுமிராண்டித்தனமான செயல்களில் இறங்கினர். மிருகங்களைக்கூட அடிக்க பாவிக்கமுடியாத ஆயுதங்களால் மக்களைத் தாக்கினர். சில இடங்களில் போருக்கு பாவிக்கும் ஆயுதங்கள் சகிதம் வருகை தந்து மக்களைப் பயமுறுத்தினார்கள்.

நாவாந்துறையில் நடுஇரவில் எதிலுமே சம்பந்தப்படாத பொது மக்களையும், நித்திரையில் இருந்த பொது மக்களையும் ஆண், பெண், சிறுவர், முதியவர்கள் என பாரபட்சமின்றி ஆயுதப்படையினர் வீடுபுகுந்து கதறக் கதறத் தாக்கினர்.

மன்னார் பேசாலையில் சம்பவமே தெரியாது வீதியில் சென்றவர்களையும்கூட அதே பாணியில் தாக்கினர். வவுனியா கோமரசன்குளப் பகுதியிலும் இதேவிதமான தாக்குதல்கள் இடம் பெற்றன.

இதேவேளை “மர்ம மனிதர்கள்மீது தாக்குதல் நடத்தினால் நாவாந்துறை மக்களுக்கு நடந்ததுபோன்றே உங்களுக்கும் நடக்கும்” என தம்மை படையினர் அச்சுறுத்தியதாக திருநெல்வேலி, பாரதிபுர மக்கள் தெரிவித்தமை இங்கு கவனிக்கத்தக்கதாகும். “படையினரின் பொறுமையை சோதிக்கும் வகையில் மக்கள் நடந்தால் விளைவுகள் மோசமாக அமையும்” என முஸ்லிம் அதிகாரிகளுடனான சந்திப்பில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரின் செயலர் கூறியிருந்தார். “மர்ம மனித செயல்களில் ஈடுபடுவதற்கு இராணுவத்தினருக்கு நேரமில்லை. படையினர் தாக்குதலுக்கு உள்ளாகும்போது நான் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது” என கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி கூறியிருந்தார்.

தம் நாட்டுப் பிரஜைகளாகக் கணித்து தமிழ் பேசும் மக்களை நடத்தாது, மிக மோசமாகவும், கேவலமாகவும் நடத்திய அனுபவம் வரலாற்றில் மறைந்துபோக இடமில்லை. போரின் பின்னர் அதிகாரிகளும் படையினரும் “நாங்கள் தமிழ் பேசும் மக்களின் நண்பர்கள்” எனக் கூறிவந்த நிலையில் இவர்களின் இச்செயல்கள் அது வெறும் வாய்ச்சாலம் மட்டுமே என்பதை உறுதிசெய்துள்ளது.

### முடிவுரை

ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து கொண்ட தாகத்தையும் அதிகாரத்தில் உள்ள சிலரின் தாகத்தையும் இங்கு காணக் கூடியதாக உள்ளது. போர் இல்லை ஆனால் “தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான இன அழிப்பு” காலத்துக்கு காலம் புதுவடிவம் பெறுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. சமகால நிகழ்வில் யார் மர்ம மனிதரை அனுப்பியது? யார் பாதுகாப்பு அளித்தது? என்பதை மக்கள் அறிவார்கள். மக்கள் கிளர்ந்தெழுந்தபோது அவர்களுக்கெதிராகத் தாக்குதல் நடத்தி அவர்களை அடக்கிப் பயமுறுத்தியதையும் மக்கள் நன்கு அறிவார்கள்.

இதேவேளையில் சிறுபான்மையின மக்களைக் குறிப்பிட்டு தாக்கிய மர்ம மனிதரின் செயல்களை பெரும்பான்மை இனத்தின் ஒருசிலரைத் தவிர ஏனைய அனைவரும் வெளிப்படையாக கண்டிக்கத் தவறியமை வருத்தத்திற்குரியது.

முப்பது வருடகாலம் ஆயுதப் போரில் மௌனமாக இருந்த மக்கள் படையினரை தாக்கியிருப்பதிலிருந்து அவர்களின் ‘நீதியின் தாகமும் விடுதலைத் தாகமும்’ தெரிகின்றது. இந்தத் தாகம் நியாயமானதாகவும் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### கனி மரத்தின் கதறல்

காதலனுக்கென்றே
கட்டிக் காத்துவந்த
அவளின்
கற்பும் களவாடப்பட்டது.
யுத்த அரக்கனின்
வானளாவிய
கூக்குரலின் முன்னே
அவளின் அலறல்
அகிலத்திற்குக்
கேட்கவில்லை.
எழில் கொஞ்சும் அந்த
கனிமரத்துக் கனிகளை
பலர் சேர்ந்து
பலாத்காரமாகவே
பறித்து உண்டார்கள்.

அவள்
கசக்கப்பட்ட பூ என்பதால்
எந்த மாலையிலும்
இணையும் தகுதி
இழந்தாள்.
சுழலும் இந்தப் புவியில்
சிங்கங்கள் மட்டுமே
கற்பினைக்
காத்துக்கொள்கின்றன.
மான்கள் மட்டும் பாவம்
அவை
சுழற்சிமுறையில்
சுவைக்கப்படுகின்றன.

*- யோ. புரட்சி -*

### துளிப்பாக்கள்

**சுவரொட்டி**
விளம்பரம் செய்யாதீர்!
என்றோர் விளம்பரம் சுவரில்!

**நாகரிகம்**
இந்தப் போர்வை
இருப்பதனால்தான்
அம்மணியர் ஆடையைக்
குறைத்து
இதனை அணிகின்றனர்.

**பேனா**
என் எண்ணத்தைப் பதித்தேன்
உன் உதிரம் எனக்காய்
கரைகிறது.

**கண் இமைகள்**
இரண்டு ஒற்றைச் சிறகுகள்
பறக்க நினைக்கிறது,
ஆனால் சிறகடிப்பது
இரண்டு துருவங்களில்.

**மழை**
பூமியின் நிலைகண்டு
வானம் சிந்தும் கண்ணீர்.

**நிழல்**
மனிதன் உறங்கும்
வேளைகளில்
அவனுடன் வாழவிரும்பாத
மாமனிதன்.

*பிலிப்பு யாகப்பு நிவேதா,*
*5ம் வட்டாரம், விடத்தல்தீவு.*

### ஒளி தேடும் விழிகள்

வாழ்விழந்த எம் வாழ்வில்
வசந்தங்கள் வீசவேண்டாம்.
நாளாந்த விடியல்களே
எமக்குப் போதும்.

ஆண்டுகள் கடந்தாலும்
நீண்டு தொடரும் எங்கள்
நிர்க்கதியான வாழ்வில்
நிறைவுகள் எப்போது?

நிலமிருந்தது!
நிலவை ரசித்திருந்தோம்.
வரப்புயர வாழ்வில்
வல்லமை கொண்டிருந்தோம்.

திரைமறைவில் சதி - எம்
தரைமூடியது விதி.
நேசக்கரங்களாய் அல்ல
மோசக்கரங்களே எங்களை
நோக்கி நீண்டன.

கண்ணிழந்தோம்,
கையிழந்தோம்,
காலிழந்தோம், கருவிழந்தோம்,
வலுவிழந்து போனோம்
விதவைகளானோம்.

யுகம் யுகமாய் வாழவல்ல
நூறாண்டு வாழ்வுமல்ல
மனம் நிறைந்த வாழ்வை
மண்ணுலகில் தேடுகிறோம்.

*- ஆதவன் - வயவை.*

### போராட்டம்

இந்த இளமைப் பருவத்தில்
உன் பலவீனங்களைக்கண்டு
பயம் கொள்ளாதே!
எதிர்த்துப் போராடு...
வாழ்நாள் முழுவதும்
நடத்தப்பட வேண்டிய
போராட்டம்
பலவீனங்களை முறியடிக்கும்
போராட்டம்!

*யே. ஆன் சிந்துஜா,*
*பொன்தீவுகண்டல்.*

# சிறுவர் பொழிவு

## பொறுமைக்கு கிடைத்த வெற்றி

*சா. மேரி குயின்சிலி மொறாய்ஸ், அரிப்பு, முருங்கன்.*

ஒரு கிராமத்தில் ஒரு இறை பக்தி உள்ள பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அன்பு உள்ளவராகவும், ஒழுக்கம் உள்ளவராகவும் திகழ்ந்தார். தன்னைப்போல் மற்றவர்களும் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். ஒருநாள் இவர் "ஊரில் உள்ள ஏழைகளுக்கு உணவுப் பொட்டலம் வழங்கப்படும்" என்று தனது ஊழியர்கள் மூலமாக அறிவித்தார். பின்பு அடுத்த நாட்காலை இவ்வுணவு வழங்கப்பட்டது. எல்லாச் சிறுவர்களும், பெரியார்களும் வந்து பெற்றுக் கொண்டார்கள். கூட்டம் அதிகமாக இருந்தபடியால் நெருசல்பட்டு மக்கள் உணவுப் பொட்டலத்தை பெற்றுக்கொண்டிருப்பதைக் கண்டு அந்தப் பெரியவர் ஒலிபெருக்கி மூலமாக "எல்லோருக்கும் உணவுப் பொட்டலம் வழங்கப்படும்" என்று அறிவித்தார்.

இந்த உணவுப் பொட்டலத்தை பெற்றுக்கொள்வதற்காக அவ்வூரில் இருந்த ஒரு ஏழைத்தாய் தனது 8 வயது சிறுமியை அனுப்பியிருந்தாள். அச்சிறுமி அங்கு சென்றபோது மக்கள் கூட்டம் அதிகமாய் இருப்பதைக் கண்டாள். "எல்லோருக்கும் உணவுப் பொட்டலம் கிடைக்கும்தானே. இறுதியாக எடுப்போம்" என்று பின்னே நின்றாள். எல்லோரும் பெற்றுச் சென்றுவிட்டார்கள். கடைசியாக இந்த சிறுமிக்கும் உணவுப் பொட்டலம் கிடைத்தது. ஆனால் அது சிறிய பொட்டலமாக இருந்தது. "பரவாயில்லை இது கிடைத்ததே போதும்" என்று கூறிக்கொண்டு அச்சிறுமி தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். மகளைக் கண்ட தாய், "உணவுப் பொட்டலம் கிடைத்ததா?" என்று கேட்டாள். "ஆம் அம்மா, ஆனால் சிறிய பொட்டலம்தான் அம்மா கிடைத்தது" என்று அதைத் தனது தாயிடம் கொடுத்தாள். "ஏன் பொட்டலம் சிறிதாக உள்ளது?" என்று தாய் கேட்டாள். மகள் நடந்த விவரத்தைக் கூறினாள். பின்பு இருவரும் சேர்ந்து உண்பதற்காக அந்த உணவுப் பொட்டலத்தை பிரித்தார்கள். பிரிக்கும்போது அதனுள் ஒரு தங்க நாணயம் இருந்தது. உடனே அந்தத் தாய் தன் மகளிடம் "இதை அப்பெரியாரிடம் ஒப்படைத்து விடு" என்று கூறினாள்.

சிறுமியும் அதைக் கொண்டுபோய் அந்தப் பெரியவரிடம் கொடுத்து, "இந்த உணவுப் பொட்டலத்தை பிரித்தபோது அதனுள் இந்தத் தங்க நாணயம் இருந்தது. இது உங்களுடையது" என்று கூறிக் கொடுத்தாள். உடனே அந்தப் பெரியவர், "யார் பொறுமை உள்ளவர்கள் என்று சோதிப்பதற்காகவே இப்படி நாங்கள் செய்தோம். எனவே உன்னுடைய நேர்மையான குணத்தையும் பொறுமையையும் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தத் தங்க நாணயம் உன் பொறுமைக்கு கிடைத்த் பரிசு அது உனக்கே உரியது. பெற்றுக்கொள்" என்றுகூறி மகிழ்ச்சியுடன் அச்சிறுமியை வழியனுப்பினார்.

# காலடிகள்..... காலடிகள்.....


## இறைபராமரிப்பை உணர்த்தும் சிந்தனைக் கதை

ஓர் இரவு மனிதன் ஒருவன் கனவு ஒன்று கண்டான். அக்கனவில் அம்மனிதன் கடலோரமாக இறைவனோடு நடந்துகொண்டிருந்தான். அவ்வேளையில் வானத்தில் இருந்து அவனது வாழ்க்கை நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் ஒளிக்கீற்றுக்கள் ஒளிர்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். ஒவ்வொரு தடவை ஒளிரும்போதும் இரண்டு சோடிக் காலடிகள் மணலில் பதிந்திருப்பதைக் கண்டான். ஒரு சோடிக் காலடிகள் அவனுக்குரியன. அடுத்தது இறைவனுக்குரியது.

அவனுடைய வாழ்க்கையில் இறுதிக் காலத்திற்கான நிகழ்வுகளின் காட்சி அவன்முன் தெரிந்தபோது, அவன் பின்பக்கம் திரும்பி மணலில் தெரியக்கூடிய காலடிகளைப் பார்த்தான். அதிக தடவைகள் இப்பாதைகளில் ஒரே ஒரு சோடிக் காலடிகள் மட்டுமே பதிந்திருப்பதைக் கண்டான். இப்படிப்பட்ட வேளைகளெல்லாம் மிகுந்த துன்பங்கள், துயரங்கள், வேதனைகளினூடாக அவன் வாழ்ந்த காலமாயிருந்தது. இக்காட்சி அவனை மிகவும் குழப்பத்தில் ஆழ்த்தியது. இதனால் அவன் இறைவனிடத்தில் ஒரு கேள்வி கேட்டான். "இறைவா! உம்மை நான் பின்தொடர வேண்டும் என்று தீர்மானம் எடுத்தபோது, எப்போதும் நான் உன்னுடன் நடந்துவருவேன், கலங்காதே, தயங்காதே என்று கூறினீரே. ஆனால் மிகுந்த துன்ப, துயரங்களோடும் வேதனைகளோடும் நான் வாழ்ந்த நாட்களில் என் காலடிகளோடுகூட உமது காலடிகளைக் காணமுடியவில்லையே? ஒரே ஒரு சோடிக் காலடிகள் மட்டுமே தென்படுகின்றனவே. உமது உதவி மிக அதிகமாகத் தேவைப்பட்ட வேளைகளில் ஏன் என்னைத் தனியே தவிக்க விட்டுவிட்டு அகன்று போனீர்?" என்று கேட்டான்.

அதற்கு இறைவன், "எனது மிகவும் விலைமதிப்பற்ற மகனே! நான் உன்னை வெகுவாக நேசிக்கின்றேன். நான் உன்னைவிட்டு ஒருபோதும் விலகவில்லை. விலகவும் மாட்டேன். உனது துன்ப துயர, சோதனை வேதனைகளில் நீ சோர்ந்துபோகக்கூடாது என்பதற்காக நான் உன்னைத் தூக்கிச் சுமந்து சென்றதால் தெரிகின்ற ஒரு சோடிக் காலடிகள் என்னுடையவையே" என்று கூறினார். *(தழுவல் - Foot Prints)*

# கொஞ்சம் சிரிங்கள்



**வசந்தன்** : வாணி நீ என் இதயத்துள் வாவனடி!
**வாணி** : என்ன செருப்ப கழட்டவா?
**வசந்தன்** : அடி பைத்தியம் என் இதயம் என்ன கோயிலா, கழட்டாம அப்படியே வா...

..............................

**ஆசிரியர்** : பொலிஸ்சுக்கும் பொறுக்கிக்கும் என்ன வித்தியாசம்?
**மாணவன்** : தடி அடி கொடுத்தா பொலிஸ். அடி தடி செய்தா பொறுக்கி. இதுகூட தெரியாததால் நான் இப்ப ஆசிரியன், நீங்க .....ம...க்கு...மாணவன்!

*'சிறகுடைந்த இளஞ்சிட்டு', தோட்டவெளி.*

பைத்தியக்கார மருத்துவமனையில் இருந்த மனநோயாளி ஒருவன், "கடவுளே எனக்கு பத்து ரூபாய் பணம் உடனே வேண்டும்" என்று கேட்டான். அதைக் கவனித்துக்கொண்டிருந்த டாக்டர் அவனிடம் ஐந்து ரூபாயைக் கொடுத்து, "இதைக் கடவுள் உன்னிடம் கொடுக்கச் சொன்னார்" என்றார். பைத்தியக்காரன் அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டான். மறுநாள் டாக்டர் அவ்வழியால் வந்தபோது அந்த மனநோயாளி பின்வருமாறு வேண்டிக்கொண்டிருப்பதைக் கண்டார், "கடவுளே! நீங்கள் இனிமேல் நேரடியாக என்னிடம் பணத்தைக் கொடுங்கள். டாக்டர் மூலம் கொடுத்து அனுப்பினால் அவர் ஐந்து ரூபாயை எடுத்துக்கொள்கிறார்!" *- எஸ். லூமன், பொன்தீவுகண்டல்.*

..............................

**மெலா** : கண் தெரியாத வெளவாலுக்கு நன்கு பறக்கத்தெரிவதில் ஆச்சரியமில்லை. அது தனது தலைப்பகுதியிலிருந்து வெளியாகும் 'அல்ட்ராகானிக்' அதிர்வலைகளைக்கொண்டு எதிர்ப்படும் பொருட்களை அறிந்து ஒதுங்கிக்கொள்கிறதாம்.
**நிலா** : பாராட்டத்தான் வேணும்! கண் இருக்கிறவனே இடிச்சிட்டுப்போறானே!
*- ம. காமலின் சௌமியா குரூஸ், அரிப்பு / சிலாபத்துறை.*

..............................

**மகன்** : அப்பா என்ர பல்லு ரொம்ப நாளா ஆடிக்கிட்டே இருக்கு.
**அப்பா** : மகன், எப்ப அரங்கேற்றம் செய்யலாம்?
*- ஜெயசீலன் ஜெயசுதன், அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை, மன்னார்.*

# மன்னா விளம்பரப் பலகை

உறுதிபெற்ற நெஞ்சங்களே முன்னேறுங்கள்!
சாதித்துச் சாவதே வாழ்வாகும்!
*ஆ. டயாளினி, மாதரிக்கிராமம், வங்காலை*

எழுந்து நடந்தால் எரிமலையும் நமக்கு வழிகொடுக்கும்....!
உறங்கிக்கிடந்தால் சிலந்தி வலையும் நம்மைச் சிறைப் பிடிக்கும்....!

துன்பத்தை அனுபவித்த காயத்தை நீ மறந்துவிடு. ஆனால் அது உனக்கு விட்டுச்சென்ற பாடத்தை மறந்துவிடாதே.
*எவ். அஜித்ரா,*
*சின்னக்கடை, மன்னார்.*

நமக்கு ஆயிரம் தோல்விகள் வரலாம். ஆனால் தோற்று விடுவோம் என்ற தோல்வி மனப்பாங்கு வந்துவிடவே கூடாது!

வெற்றியும் சந்தோசமும் ஒன்றாகவே இணைந்திருக்கும்.
நீங்கள் விரும்புவதை அடைவது வெற்றியாகும்.
நீங்கள் அடைவதை விரும்புவது சந்தோசமாகும்.
*யே. நிலோஜினி,*
*பொன்தீவுகண்டல்,*
*அளவக்கை.*

கால் தடுக்கி விழுந்தால் கையின் உதவியால் எழும்பலாம்.
நா தடுக்கி விழுந்தால் எழும்பவே முடியாது!
*- ஏ. அருண் யேசுராஜன், காத்தான்குளம்.*

- கேள்வி கேட்பவன் ஒரு நிமிடத்திற்கு முட்டாளாக இருக்கிறான். கேள்வி கேட்காதவன் வாழ்நாள் முழுவதும் முட்டாளாக இருக்கிறான்.
- உங்கள் விரோதியின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். உங்களுடைய பிழைகளைக் கண்டுபிடிப்பவர்கள் அவர்கள்தான்.
- அழகான முகத்தைவிட அன்பான இதயமே மேல்.
- தோல்வி என்பது வெற்றி கொடுத்தனுப்பும் விசிட்டிங் காட், கசக்கி எறியாமல் கவனித்துப் பார்த்தால் வெற்றியின் இரகசிய விலாசம் தெரியும்.

*- ஜெ. மெற்றில், நொச்சிக்குளம், உயிலங்குளம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

அத்தியாயம் – 08

– ஆங்கில மூலம் –
அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குருஸ் FSC
*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P*
*வங்காலை.*

## யங்கொன் நதிப்படுக்கையின் நாடோடிகள்

மிக அண்மையில் நான் மியன்மார் (பர்மா)வின் தலை நகரான யங்கொன் (ரங்கூன்) பட்டினத்துக்குச் சென்றிருந்தேன். பலகாலத்து கலைமாணியும் திறமையான கதைகள் சொல்பவரும் யங்கோனில் உள்ள விடுதிகளுக்கு பொறுப்பாக இருப்பவருமான சகோதரர் அன்ரனி கீழ்வரும் கதையைச் சொன்னார்:

"சில உருண்டைக் கற்களைப் பொறுக்குங்கள்" என்று வானத்தில் இருந்து ஒரு குரல் கேட்டது "சில உருண்டைக்கற்கள் பொறுக்குங்கள், இது உங்களுக்குக் கடைசி சந்தர்ப்பமாக இருக்கப்போகிறது. கூடியவிரைவில் யங்கொன் நதிப்படுக்கை நீரினால் நிறையப்போகிறது. ஆகவே விரையுங்கள்! சில உறுண்டைக் கற்களைப் பொறுக்கிக்கொள்ளுங்கள்". யங்கொன் நதிப்படுக்கையில் அலைந்து திரியும் நாடோடிகள் அந்த வானத்து குரலொலியைத் தெளிவாகக் கேட்டார்கள். அவர்களில் அனேகர் அந்தக் குரலுக்குச் செவிமடுத்து பணிவுடன் கீழே குனிந்து அவர்கள் மனம் திருப்திகொள்ளும் அளவுக்கு கற்களைப் பொறுக்கினார்கள். மற்றவர்கள் சொற்பமாகப் பொறுக்கிக் கொண்டனர். இன்னும் சிலர் ஒருசில கற்களை மட்டும் பொறுக்கினர். எப்படியென்றாலும், பழங்கால எண்ணங்களில் நம்பிக்கை இல்லாத சில நாடோடிகள் ஒன்றையேனும் பொறுக்கவில்லை. அதேவேளை சில நாடோடிகள் மற்றவர்களைச் சபித்துக்கொண்டும் ஏசிக்கொண்டும் "நாங்கள் ஏற்கெனவே இதுபோன்ற அநேக வானத்துக் குரலொலிகளைக் கேட்டுள்ளோம். எங்களுக்கு எந்த வழியும் காட்டாத இதற்கு ஏன் செவிமடுக்கவேண்டும் என்று எங்களுக்கு விளங்கவில்லை" என்றனர். "ஆம், நானும் அதே கொள்கையில்தான் உள்ளேன்." என்று திருப்தியற்ற இன்னுமொரு நாடோடி கூறினான். "ஏன் இந்த நாடோடிகள் இப்படி இழிவுபடுத்துகின்றார்கள்? நாங்கள் ஏற்கெனவே ஏழைகள், ஓரங்கட்டப்பட்டவர்கள். இந்த உருண்டைக்கற்களினால் என்ன பயன்? வாருங்கள் இந்த இடத்தைவிட்டு வெளியேறுவோம்" என்றான் இன்னுமொருவன்.

நாடோடிகள் அநேக மைல்கள் காடுகளிலும், பச்சைப்பசேல் என்ற வயல்வெளிகளிலும் அலைந்து கடைசியாக குளிக்கக்கூடிய நீர் நிறைந்த ஒரு குளத்தருகே வந்து முகாம் அமைத்தனர்.

அவர்கள் தங்களைச் சுத்தம் செய்துகொண்டு தங்களுடன் கொண்டுவந்த உணவைச் சாப்பிட்டுவிட்டு தூங்குவதற்கு ஆயத்தமாகும்பொழுது திரும்பவும் அந்த வானத்துக் குரலொலி கேட்டது. "உங்களுடைய பைகளைத் திறந்து நீங்கள் பொறுக்கிய உருண்டைக்கற்களை எண்ணுங்கள்" முகாமிலே ஒரே சலசலப்பு! என்ன அதிசயம்! உருண்டைக்கற்களைக் கொண்டுவந்தவர்களுடைய கற்களெல்லாம் சுத்த தங்கமாக மாறியிருந்ததைக் கண்டு அவர்கள் சந்தோஷமும் ஆரவாரமும்



அடைந்தார்கள். கற்களைப் பொறுக்கிக்கொண்டுவராதவர்கள் மிகுந்த கவலைப்பட்டு ஒருவரை ஒருவர் பார்த்து ஒரு வார்த்தைகூட பேசமுடியாமல் இருந்தனர்.

மையன்மாரின் அறிவு மிகுந்த ஞானி இந்தக் கதையைச் சொல்லி முடித்ததும், இந்தக்கதையை மிகுந்த ஆவலுடனும், ஆர்வத்துடனும் அவதானித்துக்கொண்டிருந்த இளைஞர்கள் "உங்களுடைய கதைக்குரிய அர்த்தத்தை எங்களுக்கு விளக்குங்கள்" என்று கேட்டனர். "நன்று! என் அருமை நண்பர்களே, இந்தக் கதை உங்கள் அறிவைச் சேகரித்து கற்றுக் கொள்வதைப் பற்றியது. நாம் எல்லோரும் இந்த நாடோடிகளைப் போன்று இந்தப் பூமியிலே அலைந்து திரிபவர்கள். எங்களுக்கு நிரந்தரமான வீடு கிடையாது. நாங்கள் எல்லா வேளைகளிலும் அறிவையும் விளக்கங்களையும் ஆராய்ச்சி செய்பவர்கள். எவ்வளவு அதிகமாக கற்றுக்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கு அது நம் எல்லோருக்கும் நன்று, ஏனென்றால் அறிவு என்பது கடலைப் போன்றது. விசாலமானது. வெளியைப் போன்று மிகப்பிரமாண்டமானது. நாங்கள் தற்பொழுது கற்றுக் கொள்கின்றவை எமக்கு பிற்காலத்துக்கு மிகுந்த பிரயோசனமாக இருக்கும். எவ்வளவுக்கு அதிகமாக கற்றுக்கொள்கின்றோமோ அவ்வளவுக்கு பெறுமதிவாய்ந்த பரிசாக அது இருக்கும். எந்த அளவால் எடுக்கிறோமோ அந்த அளவுப்படியே பெறுவோம். ஆகவே வானத்துக் குரலொலிக்கு, காரணத்தின் குரலுக்கு, பெற்றோரின் குரலுக்கு ஆசிரியரின் குரலுக்கு, ஆன்மீகத் தலைவர்களின் குரலுக்கு செவிமடுப்போம் அவைகள் எல்லாம் நம் நன்மையை மட்டுமே நோக்கியிருக்கும்".

# உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 98

திருவெளிப்பாடு என்னும் நூல் மாறுபட்ட இலக்கிய வகையைச் சேர்ந்தது. ஒவ்வொரு எழுத்தாளனும் அவன் வாழும் காலத்தின் தேவைக்கும் மனித உணர்வுகளுக்கும் ஏற்றவாறு இலக்கியங்களைப் படைக்கின்றான்.

உரோமானியரின் ஆட்சியில் அரச வழிபாடு மேலோங்கிநின்ற 2ம் நூற்றாண்டிலே கிறிஸ்தவ வழிமுறைகளையும் தத்துவங்களையும் குறியீடுகள் மூலமாக முன்னிலைப்படுத்தி வெளிக்கொணர்ந்து மக்களை நம்பிக்கையுள்ளும் விசுவாசத்தினுள்ளும் உறுதிப்படுத்தவேண்டிய தேவை இருந்ததால் இந்நூல் இவ்வாறாகப் படைக்கப்பட்டுள்ளது.

அதற்காகத் திருவெளிப்பாட்டு நூலை ஒரு வெறும் இலக்கியமாக மட்டும் நாம் கொள்ள முடியாது. அரியணையில் வீற்றிருக்கும் இறைவன் தனது விலைமதிக்க முடியாத இரத்தத்தினால் உலகை மீட்டுக்கொண்ட திருமகன் - (ஆட்டுக்குட்டி என்று குறிப்பிடப்படுகின்றது). உலகில் நன்மைக்கும் தீன்மைக்கும் எதிராக ஏற்படுகின்ற போராட்டங்ககள், இறுதியில் கடவுளின் அரசு ஸ்தாபிக்கப்படும் என்னும் உண்மைகள், இப்போது துன்பப்பட்டாலும் கிறிஸ்தவ விசுவாசம் நமக்கு இரட்சிப்பைத் தரும் என்பதெல்லாம் நமது நம்பிக்கைகளே. மாற்றவோ மறுக்கவோ முடியாதவை. ஆனால் இவற்றைச் சொல்கின்ற பாணி திருவெளிப்பாட்டு நூல்களில் கொஞ்சம் வித்தியாசமாகும்.

**இம்முறை வினாக்கள் 8ம் அதிகாரம் முதல் 12ம் அதிகாரம் வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.**

1. இரத்தத்தோடு கலந்த கல்மழை நிலத்தின்மீது எப்போது விழுந்தது? எப்போது நிலத்தின் மூன்றிலொரு பகுதி எரிந்து போனது?
2. தீ பற்றியெரிந்த பெரிய மலைபோன்ற ஒன்று கடலுக்குள் எறியப்பட்டபோது என்ன நிகழ்ந்தது?
3. "மற்ற மூன்று வானதூதர்களும் எக்காளங்களை இதோ முழங்கவிருக்கின்றார்கள். அந்தோ உலகில் வாழ்வோருக்குக் கேடுவரும் ஐயகோ" என்று கத்தியது எது?
4. நிலத்தின் புல்பூண்டுகளுக்கோ மரங்களுக்கோ தீங்கிழைக்காமல் தங்கள் நெற்றியில் கடவுளின் முத்திரை இல்லாதவர்களுக்கு மட்டும் தீங்கு செய்யுமாறு அவற்றுக்குக் கட்டளையிடப்பட்டது. எவற்றிற்கு?
5. ஆறாம் வானதூதர் எக்காளம் முழங்கியவுடனே கடவுள் திருமுன் இருந்த பொன் பலிப்பீடத்திலே இருந்த கொம்புகளிலே இருந்து எழுந்த குரல் கூறியது என்ன?
6. ஏழாவது வானதூதர் எக்காளம் முழங்கிய உடனே விண்ணகத்திலிருந்து எழுந்த குரல் கூறியது என்ன?
7. "வானில் ஓர் பெரிய அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். அவர் பன்னிரு விண்மீன்களை தலைமீது சூடியிருந்தார்." யார் அவர்?
8. சிறையில் இடப்பட வேண்டியவர்கள் சிறையில் இடப்படுவர். வாளால் வெட்டப்பட வேண்டியவர்கள் வாளால் மடிவர்." இவ்விதமான சந்தர்ப்பத்தில் இறைமக்களுக்கு என்ன தேவை?
9. சீயோன் மலைமீது ஆட்டுக்குட்டி நிற்பது என்பது எதைக் குறித்துக் காட்டுகிறது?
10. முதலாவது வானதூதர் வைத்திருந்த எக்காளத்துக்கு உரிய நற்செய்தி யாது?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 96இற்கான கேள்விகளுக்கு 15 பேர் விடையளித்திருந்தனர்.

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

*ச. ஜெயந்திமாலா, கல்நாட்டி, முருங்கன்.*

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. வேஜினியா, இல 10, மகாதேவத்த வீதி, மாத்தளை.
2. ப. சுஜாந்தி, நல்லாயன் இல்லம், கணேசபுரம், வவுனியா.
3. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
4. யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்.
5. எஸ். கிறிஸ்ரின் ஏங்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
6. விஜயதாஸ் நிதர்சிக்கா, செம்மண்தீவு, முருங்கன்.
7. தி. வேந்தக்கோன் ஆன்டிலோஜினி, தி.கு.க.மடம், நானாட்டான்.
8. ச. பிரவீன், இல 6/7 தாஸ்கோட்டம், நெளுக்குளம், வவுனியா.
9. றி. றிணோலா குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.
10. வி. விவித்தா ரூபா, நடுக்குடா, பேசாலை.

### போட்டி 96 இற்கான சரியான விடைகள்

1. இறைவாக்குகளைப் படிப்போர், இறைவாக்குகளைக் கேட்போர் இறைவாக்குகளைக் கடைப்பிடிப்போர் (திவெ 1:3)
2. துருக்கி நாட்டின் ஒரு பகுதி (திவெ 1:4)
3. "முதலும் முடிவும் நானே" என்பதே (திவெ 1:8)
4. பாத்மு தீவில், ஞாயிற்றுக் கிழமை அருளப்பெற்றது (திவெ 1: 9-10)
5. "எபேசு, சிமிர்னா, பெர்காம், தியத்திரா, சர்தை, பிலதெல்பியா, இலவோதிக்கா ஆகிய இடங்களிலுள்ள திருச்சபைகளுக்கு.
6. I. ஏழு விண்மீன்கள் ஏழு திருச்சபையின் வானதூதர்கள். II. ஏழு விளக்குத் தண்டுகள் ஏழு திருச்சபைகள். (திவெ 1:20)
7. அவர்களிடம் முன்பு இருந்த அன்பு என்னும் பண்பு குறைந்து விட்டது என்கிறார் (திவெ 2:3)
8. "துன்பத்தைப்பற்றி அஞ்சாதே இறுதியில் வெற்றி வாழ்வு முடியாகச் சூட்டப்படும் (திவெ 2:10)
9. தப்பறையான போதகங்களிலும் பரத்தமையிலும் மயங்கிக் கிடப்போர் மனம் மாறாவிட்டால் தண்டிக்கப்படுவர். (2:15-16)
10. I. இசபெல் II. அவளுடைய பரத்தமைக்காக (2: 21 - 22)

# உலக மறைபரப்புதினச் செய்தி

## எங்கும் எப்போதும் மறைபரப்பாளர்களாவோம்

*அருட்பணி. ரெஜினோல்ட் சபரமாது,*
*தேசிய இயக்குனர், பாப்பிறை மறைப்பரப்பு சபைகள்.*

இயேசு தன் சீடர்களிடம் "தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோவான் 20:21) என்று கூறினார். இவ்வார்த்தைகளின் மூலமே இயேசு தனது மறைத்தூதுப்பணித் திருச்சபையை ஸ்தாபித்தார். தனது விண்ணேற்பிற்கு முன்பு இயேசு தன் சீடர்களுக்கு இட்ட கட்டளை மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டது. இயேசு அவர்களுக்கு கூறியதாவது: "எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்... நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத்தேயு 28:19, 20).

இக்கட்டளையானது அவருடைய பன்னிரு அப்போஸ்தலர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டதல்ல. மாறாக இயேசுவை ஏற்றுக்கொண்டு அவர் பெயரை தாங்கியுள்ள அனைவரையும் இக்கட்டளையானது உள்ளடக்குகின்றது. "முழுத் திருச்சபையும் மறைத்தூதுவனாவதால், நற்செய்தி அறிவிப்புப் பணியே இறைமக்களின் தலையாய கடமையாகும்" - (திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப் பணி - அதிகாரம் 6, IIம் வத்திக்கான் சங்கம்). பாப்பரசர் 6ஆம் சின்னப்பரின் கூற்றுப்படி "திருச்சபையானது மறைப்பரப்புப் பணியை மேற்கொள்வதற்காக அதாவது நற்செய்தியை அறிவிக்கவும் அதை கற்பிக்கவும் இறைவனின் அருட்கொடையின் வழியாகவும் இருக்கின்றது" (நற்செய்தி அறிவிப்புப் பணி - அதிகாரம் 14). புனித சின்னப்பரின் கூற்றுப்படி திருச்சபையின் அங்கத்தவர்கள் என்ற முறையில் மறைபரப்புதல் என்பது எமது கடமை என்பதை நினைவில் கொள்வோம். புனித பவுல்; "நான் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்யவேண்டிய கட்டாயம் எனக்குள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" (1 கொரி 9:16) என்கிறார். இவை அனைத்தும் இறுதியில் எதைக்காட்டுகிறது எனில், நாம் எங்கிருந்தாலும் என்ன செய்துகொண்டிருந்தாலும் மறைத்தூதர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையே.

முத்திப்பேறுபெற்ற பாப்பரசர் 2ம் அருளப்பர் சின்னப்பர் 2000 ஆம் ஜூபிலி ஆண்டுக்கு சற்று முன்னர் தயாரித்தளித்த தனது சுற்றுமடலான 'மீட்பின் பணி' (Redemptoris Missio) இல் கூறும் விடயத்திற்கு எம் மனங்களைத் திருப்புவோம். அவர் தனது முன்னுரையில் கூறுவதாவது: "திருச்சபையின் கையில் ஒப்படைக்கப்பட்ட மீட்பராம் கிறிஸ்துவின் பணியானது, பூர்த்திநிலையை அடைவதிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. இயேசுவின் வருகையின் பின்பான 2000ஆம் ஆண்டு நிறைவடைந்துகொண்டிருக்கும் இத்தருவாயில் மனித இனத்தின்மீதான மொத்த பார்வையின்படி இந்த மறைபரப்புப் பணியானது இன்னும் தனது ஆரம்ப நிலையிலேயே உள்ளது, ஆதலால் நாம் அனைவரும் முழு இதயத்துடன் இப்பணிக்காக எம்மை அர்ப்பணிக்க வேண்டும்". 2000 வருடங்களுக்கு பின்பு கிறிஸ்து எம்மிடம் ஒப்படைத்த பணி இன்னும் தனது குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. எனவே, நாம் மேலும் என்ன செய்யவேண்டும்? இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப் பணி சங்க ஏட்டில் விபரித்துள்ளவாறு, திருச்சபையின் வெவ்வேறு வர்க்கத்தினருக்கு நியமிக்கப்பட்டுள்ள தூதுப்பணி செயற்பாடுகளை நாம் விளங்கிக்கொள்ள முயற்சிப்பதுடன், அவற்றை தகுந்த முறையில் செய்துமுடிக்கவும் முயற்சி செய்வோம்.

அனைத்து ஆயர்களும் தத்தமது மறைமாவட்டத்திற்காக மட்டுமேயன்றி முழு உலகினதும் மீட்பிற்காக அபிஷேகம் செய்யப்பட்டவர்கள்; குருக்களும் தாங்கள் மறைதூதுப் பணிக்காக தம் உயிரை அபிஷேகம் செய்துகொண்டார்கள் என்பதை முழுமையாக புரிந்துகொள்ள வேண்டும்; அனைத்துத் துறவிகளும் உலகின் மறைத்தூதுப் பணிக்கு பாரிய பங்கை அளித்துள்ளனர். இன்னும் அளித்துக்கொண்டும் இருக்கின்றனர். மேலும் அவர்கள் களைப்பின்றி தூதுப் பணிகளில் ஈடுபடுவதற்கு இது உற்சாகம் அளிக்கின்றது.

*(தொடர்ச்சி 13ம் பக்கம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.111

## யோவன் 1–21 முடிய

உங்கள் விடைகளை பத்திரிகை உங்கள் கைக்கு கிடைத்து ஒரு வாரத்திற்குள் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | 15 | 02 | | | | | 03 |
| ★ | | | 04 | ★ | 33 | | | ★ | |
| 05 | | | | 06 | | | 12 | | 09 |
| | 07 | | 10 | 32 | | 11 | | 16 | |
| 13 | | | | ★ | 08 | | | | |
| | 14 | | 17 | | | | | | 25 |
| | ★ | | | 30 | 31 | 27 | | 26 | ★ |
| 18 | | | 28 | 21 | | | 22 | | |
| | | 29 | | | ★ | ★ | | | 24 |
| 20 | | | | | 19 | | | | 23 |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. ............. யான அவர் உலகில் இருந்தார்.
2. கடவுளை ............... என்றுமே கண்டதில்லை.
5. தம் ஒரே மகன்மீது___ கடவுள் உலகின்மேல் ................ கூர்ந்தார்
6. ............... பொங்கி எழுந்தது.
7. பின்னர் தம் சீடரிடம், "இவரே உம் ..............." என்றார்.
8. மறைநூல் கூறுவதுபோல் ___ ஆறாய்ப் பெருக்கெடுத்து ............... என்றார்.
18. "மறுபடியும் பிறந்தாலன்றி ___ இறையாட்சியைக் ................ இயலாது.
19. இதோ என் கைகள். இங்கே உன் விரலை ..............
20. அவர்கள் அவரிடம், "ஆண்டவரே, ................. பாரும்" என்றார்கள்.
21. அன்றே இயேசுவின் சீடருள் பலர் அவரை ................ விலகினர்.
22. இயேசு அவரிடம், "நீ என்னைக் கண்டதால் ..............னாய்.

### வலமிருந்து இடம்

3. தொடக்கத்தில் ................ இருந்தது.
4. ................ மெசியாவின் மாட்சியைக் ___ இவ்வாறு கூறினார்.
9. ............. என்பவர் அவர்களுள் ஒருவர்.
11. நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன்___ உனக்குச் ..............கிறேன்" என்றார்.
15. பேதுருவால் .................. வெட்டப்பட்டவருக்கு இவர் உறவினர்.
19. ........... முழுவதும் அழிந்துபோவதைவிட ஒரு___ உணரவில்லை" என்று சொன்னார்.
23. என் தந்தையின் இல்லத்தைச் ............... ஆக்காதீர்கள்".
24. மரியா திரும்பிப் பார்த்து, "................" என்றார்.
25. நான் கொடுக்கும் தண்ணீர் ___ பொங்கி ................ ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்" என்றார்.
26. என்னை நம்புவோர் ................ வாழ்வைக் கொண்டுள்ளனர்.
29. அவர் "............" என்று மறுதலித்தார்.

### மேலிருந்து கீழ்

3. அவரிடம் வந்து, "யூதரின் அரசே ................!" என்று சொல்லி அவருடைய கன்னத்தில் அறைந்தார்கள்.
4. என்னை வெறுப்போர் .............. தந்தையையும் வெறுக்கின்றனர்.
5. ....................யை உங்களுக்கு விட்டுச்செல்கிறேன்.
12. .................. பற்றிய அவர்கள் கருத்து தவறானது.
13. பன்னிருவருள் ஒருவரான ....................... என்னும் தோமா.
16. இனி '...............' எனப்படுவாய் என்றார்.
10. "விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த உணவு ................" என்று இயேசு கூறியதால் ___ முணுமுணுத்தனர்.
17. என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் ................ உள்ளன.
21. யூதருடைய பாஸ்கா ............... அண்மையில் நிகழவிருந்தது.
28. ................ அவரைக் குறித்துச் சான்று பகர்ந்தீரே!
30. பாவிகளுக்குக் கடவுள் ................. சாய்ப்பதில்லை.

### கீழிருந்து மேல்

10. .............கொடுக்கும் போதனை என்னுடையது அல்ல : அது என்னை அனுப்பியவருடையது.
11. "ஐயா, நீா அவரைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் .............. .
12. எங்கள் முன்னோர் ........... நிலத்தில் மன்னாவை உண்டனரே!
14. அந்த இடத்திற்கு எபிரேய மொழியில் '............' என்பது பெயர்.
24. அதற்கிடையில் சீடர். "..........., உண்ணும்" என்று வேண்டினர்.
25. குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவருக்கு ............. கொண்டுபோய்,
27. மானிட மகனுடைய சதையை .............. அவருடைய இரத்தத்தைக் ___ வாழ்வு அடையமாட்டீர்கள்.
20. ................. நிறைய பெரிய மீன்கள் இருந்தன.
29. ................ ஒருமித்து ஓடினர்.
30. நானே திராட்சைச் ................,
31. ................. யாரும் செய்திராத செயல்களை___ப் பாவம் இராது.
32. மேலும் "வானம் திறந்திருப்பதையும் கடவுளின்___ காண்பீர்கள் என .................... உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்". 33. ............. நான் யோவானின் சீடர் சிலருக்கும்___ விவாதம் எழுந்தது.

## தவறுக்கு வருந்துகிறோம்

குறுக்கெழுத்துப்போட்டி இல.109 தவறுதலாக வடிவமைக்கப்பட்டபடியால் அப்போட்டியில் யாரும் பங்கேற்கவில்லை. தவறுக்கு மனம் வருந்துகிறோம்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 110றக்கான முடிவுகளை 2011ம் ஆண்டு நவம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.


;ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் விரும்புகின்றீர்?"

**நற்செய்தியின் வழியில் வாழ்க்கையை அர்ப்பணித்து புனித பிரான்சிஸ் அசிசியார் அடிச்சுவடுகளை பின்பற்ற விருப்பமா?**

*உங்கள் வாழ்க்கையை தேர்வுசெய்ய இது ஒரு அரிய சந்தர்ப்பம்!*

*வந்து பாருங்கள்!*



விபரங்களை எழுதவேண்டிய முகவரி:
Our Lady of Angels Friary,
284, Pahalawela Road,
Thalangama South,
Battaramulla,
Tel. 0112785988 / 0758377351


## இரண்டாம் வத்திக்கான் ....3ஆம் பக்கத்தொடர்

கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வியில் கொடுக்கப்பட்டுள்ள விசுவாசத்தின் அடிப்படைக் கூறுகளை அறிவிக்கவேண்டிய பணியை இந்த விசுவாச ஆண்டு கொண்டுள்ளது என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார். "Porta fidei" என்ற தலைப்பில் Motu proprio அமைப்பில் அப்போஸ்தலிக்க கடிதத்தின் மூலம் இந்த விசுவாச ஆண்டு பற்றி விளக்கியுள்ள திருத்தந்தை, கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி ஏடு வெளியிடப்பட்டதன் 20ம் ஆண்டு அக்டோபரில் நிறைவடைவதால் இந்த விசுவாச ஆண்டு அக்டோபரில் தொடங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

தான் பாப்பிறை பணியைத் தொடங்கியது முதற்கொண்டு விசுவாசப்பயணத்தை மீண்டும் கண்டுணர வேண்டியதன் அவசியம்பற்றி வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, இவ்வாண்டை மதிப்பும் பயனும் நிறைந்த விதமாகக் கொண்டாட வேண்டுமென்று சகோதர ஆயர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாகவும் கூறியுள்ளார்.

## திருவுளச் சபையின் .....1ம் பக்கத் தொடர்

இச்சபையின் 5வது உயர் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள டண்ஸ்ரன் அடிகளார் கனடாவுக்கு வெளியே தெரிவுசெய்யப்பட்ட முதல் உயர் தலைவர் என்ற சிறப்பையும் பெறுகின்றார்.

உள்ளூரில் ஆரம்பிக்கப்பட்ட செபமாலைத்தாசர் சபையைத் தவிர வெளிநாட்டைத் தளமாகக்கொண்ட ஒரு துறவற சபையின் அதிஉயர் பொறுப்பாகிய உலகளாவிய தலைமைத்துவத்திற்கு தெரிவுசெய்யப்பட்டிருக்கக்கூடிய தமிழ்க் குரு ஏன் இலங்கைக் குரு இவராகத்தான் இருக்கமுடியும்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

### புதிய கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை 4,500/=
கலர் 7,500/=



## குருத்துவ வழ்வில் பொன்விழா ......
## 1ம் பக்கத் தொடர்ச்சி

மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து 25 வருடங்கள் (1981. - 2006 வரை) இவர் குருமுதல்வராக சிறப்பாக பணியாற்றினார். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை ஆகியோருடன் இணைந்து மன்னார் மறைமாவட்டத்தை கட்டியெழுப்புவதில் அரும்பணி ஆற்றியுள்ளார். சிறப்பாக இளம் குருக்களை வழிநடத்தும் காத்திரமான பணிகளை மேற்கொண்டுவந்துள்ளார்.

காலத்தின் தேவையறிந்து 1985ஆம் ஆண்டு இவருடைய முன்முயற்சியில் ஆரம்பிக்கப்பட்ட மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் தலைவராக 26 ஆண்டுகளாகத் (1985 - 201) தொடர்ந்து அயராது பணியாற்றி வருகின்றார். சிறிய குருமட மாணவர்களை உருவாக்கும் பணியில் சிறந்த அனுபவம் பெற்றவராகிய இவர், யாழ் மறைமாவட்டத்திலும் மன்னார் மறைமாவட்டத்திலும் பல குருக்களின் ஆரம்ப குருத்துவ உருவாக்குனராக இருந்துள்ளார். ஏறக்குறைய 17 வருடங்கள் இவர் சிறிய குருமட அதிபராக இருந்துள்ளார். இன்றும் இருக்கின்றார்.

இவர் பொறுமையும், நிதானமும், அமைதியும் நிறைந்தவர், ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள், பிறசமயத்தவர்கள் என அனைவராலும் மதிக்கப்படுவராகவும் அன்பு செய்யப்படுபவராகவும் இவர் விளங்குகின்றார்.

## அதிர்வுகள் ..... 10ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழர் வரலாற்றில், மாரிபோல் வாரி வழங்கிய பாரி மன்னனின் வளர்ச்சிகண்டு சகிக்கமுடியாத சேர சோழ பாண்டிய மன்னர்கள் அறநெறி தவறி பாரியுடன் போரிட்டனர். அவர்களின் நெறி பிறழ்ந்த, வஞ்சகச் செயலை புலவர் பெருமான் கபிலர் சுட்டிக்காட்டி அவர்களின் மனச்சாட்சியைச் சுட்டெரித்தார். இந்த வீரம்மிக்க நல்லறிவு புகட்டும் மரபில் "நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே" என்றார் நக்கீரர்.

இறைவாக்கினன் நாத்தான்,"நீயே அம்மனிதன்" (2 சாமுவேல் 2:5) என தாவீது அரசனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றினார். "விரியன் பாம்புக் குட்டிகளே" என யூத மத, சமூகத் தலைவர்களான பரிசேயரையும், சதுசேயரையும் எச்சரிக்கிறார் திருமுழுக்கு யோவான் (மத். 3:7). "அந்தக் குள்ளநரியிடம் போய்ச் சொல்லுங்கள்" என ஏரோதுவுக்கு (லூக்கா13:32) அழைப்பாணை அனுப்புகிறார் இயேசு. இத்தகைய 'இறைவாக்கினன் மனம்' நம் சமய சமூக அரசியல் தலைவர்களுக்கு உண்டாகுமா?

## உண்மையின் எண்ணங்கள்
## 2ம் பக்கத் தொடர்ச்சி

பல கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் பல கலைஞர்களையும் உருவாக்கி நிற்கின்றது.

மன்னார் மண்ணின் கலை இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து உழைத்துவரும் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாரின் பணி உண்மையில் பாராட்டுகுரியதாகும். ஒவ்வொரு வருடமும் மன்னார் மாவட்டத்தின் பல்வேறு இடங்களைச் சேர்ந்த கலைஞர்களை, எழுத்தாளர்களை இனங்கண்டு, விருதுவழங்கி கௌரவித்து ஊக்குவிக்கின்ற அவரது பணி காலத்தின் கட்டாயத்தேவையாகும்.

கடந்த 10 வருடங்களாக அவர் மன்னா பத்திரிகையை மிகுந்த அர்ப்பணத்தோடும், ஆர்வத்தோடும், ஈடுபாட்டோடும் வளர்த்துவருகின்றார். உள்ளூரிலும் சரி வெளிநாடுகளிலும்சரி எல்லா மக்களும் கருத்து நிறைந்த - கவர்ச்சியான மன்னா பத்திரிகையை ஆர்வத்தோடு வாங்கிப் படிக்கின்றனர். மாதா மாதம் மிகுந்த சந்தோசத்துடன் நாம் மன்னாவைப் படித்து வருகின்றோம். வெளிநாட்டில் வாழும் என் போன்றவர்கள் மன்னார் செய்திகளையும் ஏனைய திருச்சபைச் செய்திகளையும் அறிந்துகொள்ள மன்னா சிறப்பானதொரு ஊடகமாக உள்ளது. அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்ட மக்கள் சார்பாகவும், வெளிநாட்டில் வாழும் கத்தோலிக்க மக்கள் சார்பாகவும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

கடந்த 20 ஆண்டு காலமாக இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் மது விற்பனையில் முதல் இடத்தை வகித்துவந்த மன்னார் மாவட்டம் கடந்த 2005ற்குப் பிறகு நான்காகவது இடத்திற்கு வீழ்ச்சிகண்டு உள்ளது. இதற்கு ஒரு காரணம், பேசாலைப் பங்கின் முன்னாள் பங்குத்தந்தை வின்சென்ற் பற்றிக் அடிகளாரும் அவரது குழுவினரும் மதுவுக்கு அடிமையானவர்களுக்கு வழங்கிய புதுவாழ்வாகும். தாழ்வுபாட்டிலும் ஏனைய இடங்களிலும் அவர் எடுத்த அதீக முயற்சியின் பயனாக மதுவுக்கு அடிமையானவர்கள் பலரின் வாழ்வில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இது மகிழ்ச்சியோடு பாராட்டி வரவேற்கவேண்டிய விடயமாகும்.

பல பங்குத்தந்தையர்களின் முயற்சியினால் மன்னார் மறைமாவட்டத்தின் சில பங்குகளில் கொண்டாட்டங்களின்போது மதுப்பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த முயற்ச்சியினால் மன்னார் மாவட்டத்தின் மிகப்பெரிய பங்குகளில் ஒன்றான வங்காலையிலும் தற்போது கொண்டாட்டங்களின்போது வீடுகளில் மது தடைசெய்யப்பட்டுள்ளது. வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி. ஜெயபாலன் குரூஸ் அடிகளாரும் பங்கு மக்களும் எடுத்த முடிவு உண்மையில் பாராட்டுக்குரியதாகும். இப்படியாக பலவித வழிகளில் மன்னார் மறைமாவட்டம் முன்னேற்றத்தின் பாதையில் நடைபயில்வது எமக்கெல்லாம் மனமகிழ்ச்சியைத் தருகின்றது. இறைவனுக்கே புகழ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 05 1958 — உதிர்வு 28 10 2006



### திரு. ஞானப்பிரகாசம் அமிர்தநாதன்

**(இல.114 மில் வீதி, வவுனியா)**

*"நான் உமது பேரன்பில் நம்பிக்கை வைத்திருக்கின்றேன். நீர் அளிக்கும் விடுதலையால் என் இதயம் களிகூரும்" (சங் 13:5)*

ஆண்டுகள் ஐந்து உருண்டோடினாலும், காலங்கள் நிலைமாறிப் போனாலும் மாறவில்லை, மறையவில்லை - உங்கள் நினைவலைகள்! மதிமயங்கும் உலகில் - அப்பா உங்கள் நினைவலைகள் எம்மை நெருடுகின்றன.

நிஜத்தை காண்பது எங்கு? கண்ணீரை வாழ்வாக்கிவிட்டு, கல்லறைக்குள் உறங்கும் உங்களுக்கு கண்ணீர்ப் பூக்களை சமர்ப்பிக்கின்றோம் - எனினும் அன்பர் இயேசுவின் பாதமதில் அமைதியுடன் இளைப்பாற கண்ணீருடன் வேண்டி நிற்க்கின்றோம்.

*என்றும் உங்கள் நினைவுடன் : குடும்பத்தார்.*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 05 1975 — உதிர்வு 17 10 2010



### திரு. தி. நிவ்தன் பீரிஸ்

பேசாலை – (ஆங்கில ஆசிரியர்)

மனிதத்தால் மகத்துவமானவனே
காலத்தால் கதறுகிறோம்
பண்புநிறை கோமகனே
உன் நினைவில் வாழ்கின்றோம்.

கண்ணுக்குள் நிற்கின்றாயே
பார்த்த முகம் மறக்குதில்லையே
பாவம் என்ன செய்தோம்
ஆண்டவனே ஆறுதல் தாரும்!

*என்றும் உன் நினைவுகளுடன்:*
*அன்பு மனைவி, பிள்ளைகள்*
*அன்பு அம்மா, அப்பா, சகோதரங்கள்,*
*உற்றார் உறவினர்.*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 01 1953 — உதிர்வு 24 10 2010



### திரு. மேரியஸ் அந்தோனிப்பிள்ளை

(முன்னாள் கிராம அலுவலர். பெற்றா. மன்னார்.)

ஈன்றெம்மை இன்றுவரை வளர்த்து இனிய நற்கல்வியை
நளிதாகவூட்டி ஞாலமதில் நல்வாழ்வு நாம்காண
ஊன்றியுழைத்து உத்தமராய் இறுதிவரை வாழ்ந்து
தனிமரியாதைதனைத் தரணியில் நிலைநாட்டிய தந்தையே!
உங்கள் சான்றென திகழ்வோம் சத்தியம் தவறோம்.
பனித்த கண்களுடன் உம் பதிவிரதை அம்மாவும் நாமும்
ஞான்றும் ஞாலத்தில் உம் நினைவுகளுடன் வாழ்வோம்.
இனிய இறையகத்தில் என்றும் இன்புற்றிருக்க
இருகையெடுத்து ஆற்றல்மிகு ஆண்டவனிடம்
வேண்டுகிறோம் அப்பா உமக்காய்
சனிப்பு பலவெடுத்தாலும் நீரே எம் தந்தையாகுக!

*நினைவுடன் :*
*மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.*

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 04 1928 — உதிர்வு 06 11 2007



### திருமதி. அற்புதம் சவிரிமுத்து

(ஓய்வுபெற்ற அதிபர்)

**புத்திரர்கண்டான். முருங்கன்.**

*"சீவியத்தில் நேசித்தோம் அம்மா! மரணத்திலும் உங்களை மறவோம்."*

அம்மா, உங்களைப் பிரிந்து நான்கு ஆண்டுகள்
நீங்கள் எங்களுக்குச் செய்த
எல்லா நன்மைகளுக்கும் நன்றி சொல்லி
உங்கள் ஆத்ம சாந்திக்காக
மன்றாடி நிற்கின்றோம்.

*உங்கள் நினைவுகளோடு : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை ஆர்த்தி.*

தகவல் : மகள் செ. நவறோஸ் (குஞ்சு)
'றோஸ் வாசா', புத்திரர்கண்டான், முருங்கன்

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 07 1922 — உதிர்வு 18 10 2005



### மரிசால் கபிரியேல் மொத்தம்

**பெரிய நாவற்குளம்**

*"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோமர் 14:8).*

பாசத்தோடு எமை வளர்த்து,
பாரினிலே நாம் வாழ வழிகாட்டி,
பார்போற்றும் உத்தமராய்,
பாங்குடனே வாழ்ந்தீரே!
பரமனிடம் பரிந்துபேசச்
சென்றிருக்கும் எம் ஐயாவே!

*என்றும் உங்கள் இனிய நினைவுகளுடன் :*
*மனைவி அன்னபூவதி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.*

தகவல் :
மகள் திருமதி மிக்கேல் பிலிப் பெர்ணடேற் (சுசிலா)

## தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு....

8ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால், எங்கெல்லாம், எப்பொழுதெல்லாம் சமய சுதந்திரம் மறுக்கப்படுகின்றதோ, சிதைக்கப்படுகின்றதோ, மீறப்படுகின்றதோ, அங்கெல்லாம் மனித குலத்தின், உண்மையான, நிலையான அமைதியின் வளர்ச்சி முடக்கப்படுவது மட்டுமல்லாமல், முறியடிக்கப்படுகின்றது. (உலக அமைதிக்கான செய்தி 2011 - திருத்தந்தை 16ம் பெனடிக்ட்).

எனவே, வாழ்க்கைப் பாதுகாப்பு, குடும்ப மாண்பு, சிறுவர்களுக்கான சிறப்புக் கல்வி, அன்றாட வாழ்வில் நேர்மை, இயற்கை வளங்கள் பாதுகாப்பு மற்றும் பல தளங்கள் வழியாக, பொதுநலன் மேம்பட, சமுதாயத்தில் நமது சிறப்புப் பங்கேற்பை வெளிக்காட்டலாம். இந்நிலையில், நம் நாட்டுத் தலைவர்கள், தனிமனித சமயநெறிகளை ஒதுக்கிவிடாமலிருக்கும் வண்ணமும், சமய சுதந்திரத்தை பகிர்நிலை பொறுப்பாக மேம்படுத்தும் வண்ணமும், இணைந்த கரங்களாக செயல்பட முனைதல் அவசியம்.

25 ஆண்டுகளுக்குமுன் சமயங்கள் ஒன்றிப்பின், அமைதியின் வாய்க்கால்களாக மாற மறைந்த அருளாளர் திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்களின் தலைமையின்கீழ், மேற்கொள்ளப்பட்ட உறுதிமொழியை புதுப்பிக்கும் வண்ணம், இவ்வருடம் தீபாவளிக் கொண்டாட்டத்தின் மறுநாள், இன்றைய திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், உலகின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த சமயத் தலைவர்களோடு, இணைந்து, அசிசி நகருக்கு புனித பயணம் மேற்கொள்வார்.

நல்லெண்ணமுடையோரும், இறைபற்றுடையோரும் உலகம் முழுவதிலும் ஆசீர்வாதமாக இருப்பார்கள் என்ற உறுதியோடு, நாமும் அவர்களோடு ஆன்மீக நிலையில் இணைந்திருப்போம்.

மகிழ்ச்சியான தீபாவளி கொண்டாட்டத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

*கர்தினால் ஜான் லூயி தோரான், தலைவர்.*
*பேராயர் பியர் லூயி செலட்டா, செயலர்.*

## பிரான்ஸில் சொகுசு பேரூந்து பஸ்வண்டியில் திருத்தல திருப்பயணம் – 2012

பிரான்சில் (Paris) இருந்து லூர்து திருத்தலம், அன்டோரா, ஸ்பெயின், சுவிஸ்லன்ட், இத்தாலி, றோம், லெனிஸ், போர்த்துக்கல், பத்திமா திருத்தலம் போன்ற யாத்திரைத் திருத்தலங்களுக்கு சென்றுவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. தங்குமிடம், உணவு, பிறசெலவு யாவும் எமது பொறுப்பு.

பரீஸ் - லூர்து திருத்தலம் - அன்டோரா 21.10.2011 - 24.10.2011
பெரியவர் - 149 யூரோ சிறியவர் - 125 யூரோ

பரீஸ் - சுவிஸ்லண்ட் 25.05.2012 - 27.05.2012
பெரியவர் - 230 யூரோ சிறியவர் - 200 யூரோ

பரீஸ் - இத்தாலி (Rome, Venise, Padou) 20.07.2012 - 27.07.2012
பெரியவர் - 695 யூரோ சிறியவர் 630 யூரோ

பரீஸ் - போர்த்தக்கல், லூர்து, லிஸ்போன் - 09.08.2012 - 16.08.2012 பெரியவர் 465 யூரோ சிறியவர் 400 யூரோ
பரீஸ் - ஜெருசலேம் 16.04.2012 - 24.04.2012 பெரியவர்- 1445 யூரோ

**மேலதிக தொடர்பு :** George Andrew 0142077848 / 0622470020 / 0634535713/ Email : gandrew@hotmail . com.

## யேர்மனியர்களே மதநெறிகளை ....

9ம் பக்கத் தொடர்ச்சி

அதேவேளையில் பாராளுமனறத்துக்கு வெளியே, திருஅவை கடைப்பிடிக்கும் வழுவா நெறிப்போதனைகள், ஓரினச் சேர்க்கைத் திருமணத்துக்கு எதிரான நிலைப்பாடு போன்ற காரணங்களாலும் சில குருக்களால் ஏற்பட்ட முறைகேட்டுச் குற்றச்சாட்டுகளாலும் எண்ணாயிரத்துக்கும் மேற்பட்டோர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடாத்தினர். ஆனால், அவை எதிர்பார்த்ததைவிடக் குறைவாக இருந்ததாகவே பத்திரிகை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பின் யூத மதத் தலைவர்களை திருத்தந்தை சந்தித்தார்.

அதன்பின் பேர்லின் ஒலிம்பிக் விளையாட்டு மைதானத்தில் பொது மக்களைச் சந்தித்தபின் திருப்பலி நிறைவேற்ற ஏற்பாடாகி இருந்தது. கடல்போல் கூடிஇருந்த 70,000 மக்கள், திறந்த வாகனத்தில் வந்த திருத்தந்தையைக் கண்டதும் கொட்டொலி எழுப்பி ஆரவாரம் செய்தனர். அங்கு சென்ற திருத்தந்தை குழந்தைகளை ஆசீர்வதித்து முடித்தபின் திருப்பலியை நிறைவேற்றினார். அங்கே, **நானே திராட்சைச் செடி, நீங்கள் அதன் கொடிகள** என்ற இறைமகன் இயேசுவின் திருச்சொற்களை மையப்பொருளாக வைத்து மறையுரை ஆற்றினார். விசுவாசிகள் அனைவரும் அத்திருப்பலியைப் பெரும்பாக்கியமாகக் கருதி பக்தியோடு கலந்து சிறப்பித்தனர்.

## உலக மறைபரப்புத்தினச் செய்தி

13ம் பக்கத் தொடர்ச்சி

பொதுநிலையினர், திருச்சபையின் பணியான மறைபரப்புதலில் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். மறைவாழ்விற்கு சாட்சிகளாகவும் அதேவேளை உயிருள்ள கருவிகள் என்ற முறையிலும் அவர்கள் மீட்புப் பணியில் பங்குகொள்கிறார்கள். இளைஞர்கள் தற்கால நவநாகரீக சமுதாயத்தில் மிகுந்த செல்வாக்குடன் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். சமுதாயத்தில் அவர்களுக்குள்ள சுட்டிக்காட்டப்படக்கூடிய செல்வாக்கானது அவர்கள் திருச்சபையில் கூடியளவு உற்சாகமான பணிகளை செய்வதற்கு கேட்கப்படுகின்றார்கள். சிறுவர்களுக்கும் அவர்களுக்கே உரிய பணிகள் காணப்படுகின்றன. அவர்களும் தம் பாணியில் தம் நண்பர்கள் மத்தியில் கிறிஸ்துவுக்கு உண்மையான சாட்சிகளாக வாழ முடியும்.

இவ்விதமாக நாம் அனைவரும் திருச்சபையின் மறைத்தூதுப் பணியில் ஈடுபடுவதற்கு எம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பாத்திரங்கள் உண்டு. நாம் எங்கிருந்தபோதும், எந்த வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதும் திருச்சபையால் எமக்கு நியமிக்கப்பட்ட பணிகளை பூர்த்திசெய்வோமேயானால் கிறிஸ்துவின் திருச்சபையானது இயல்பாகவே வளர்ச்சியை நோக்கிச் செல்லும்.

**எங்கும் எப்போதும் மறைபரப்பாளர்களாவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னா

## ஹச்சுப் பெருநாள் வாழ்த்துக்கள்

ஹச்சுப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து இஸ்லாமிய சகோதரங்களுக்கும் மன்னா மகிழ்ச்சி நிறைந்த நல்வாழ்த்தை அன்போடு தெரிவித்து நிற்கின்றது.



## தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வத்திக்கான் வெளியிட்ட செய்தி

ஒக்ரோபர் 26ஆம் திகதி இந்து மக்களால் சிறப்பிக்கப்பட்ட தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வத்திக்கான் வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளது. திருப்பீடத்தின் பல்சமய உரையாடல் அவையின் தலைவர் கர்தினால் தவ்ரான் அவர்கள்



அனுப்பியுள்ள இந்தச் செய்தியின் முழு வடிவத்தை 8ஆம் பக்கத்தில் காணலாம்.

## ஜே. ஆர். மயூரனின்...
## “நிழலில்லா தடயங்கள்”
## கவிதை நூல் வெளியீட்டு விழா



மன்னார் சாவற்கட்டு கிராமத்தை சேர்ந்த ஜே. ஆர். மயூரனின் 'நிழலில்லாத் தடயங்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஓகஸ்ட் மாதம் 12ம் திகதி காலை 9.30 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கினார். முதன்மை விருந்தினராக மன்னார் நகரபிதா திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்துகொண்டார். நூல் வெளியீட்டுரையை துறையூரான் எம். சிவானந்தன் அவர்களும், நூல் நயப்புரையை ஆசிரியர் எஸ். றமேஸ் அவர்களும் நிகழ்த்தினார்கள். மன்னார் நகரசபை உறுப்பினர்களும். வைத்திய கலாநிதி எஸ். லோகநாதன் அவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். மன்னார் எழுத்தாளர் பேரவையின் வெளியீடாக வந்துள்ள இந்நூலின் வெளியீட்டு விழாவிற்கு மன்னார் NLH கல்வி நிலையம் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களின்
## “வரலாற்றில் தடம் பதித்த வங்கக் கலைஞர்கள்”
## நூல் வெளியீட்டு விழா நிகழ்வுகள்

திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களின் 'வரலாற்றில் தடம் பதித்த வங்கக் கலைஞர்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழா கடந்த 05.08.2011 அன்று மாலை 3.30 மணியளவில் வங்காலை புனித ஆனாள் ம.ம.வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நூல் அமரத்துவம் அடைந்த கலாபூசணம் சவேரியான் லெம்பேட் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வங்காலை மன்/ ஆனாள் ம.ம.வி அதிபர் அருட்சகோதரர் எஸ். விஜயதாசன் அவர்களும் முன்னாள் மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. எஸ். சூசைதாசன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்விற்கு வங்காலை பங்குத் தந்தை அருட்பணியாளர் எஸ். ஜெயபாலன் குரூஸ் அவர்கள் தலைமை தாங்கினார். சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனரும், மன்னா ஆசிரியரும், மன்னார் தமிழ்ச் சங்க தலைவருமான அருட்பணியாளர். தமிழ் நேசன் அடிகளார் சிறப்புரை ஆற்றினார்.

இந்நூலிற்கான நயப்புரையை மன்/ புனித ஆனாள் ம.ம.வி ஆசிரியர் திரு. பரா ரதீஸ் அவர்கள் வழங்கினார். ஏற்புரையை நூலாசிரியை திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்கள் நிகழ்த்தினார்.










## நிகழ்வுகளின் நிழல்கள்







## 30ம் நாள் நினைவு

மலர்வு 09 † 08 † 1915



உதிர்வு 30 † 09 † 2011

**திரு. சாமுவேல் பெஞ்சமின்**
(பிரபல ஒப்பனைக் கலைஞர்)
96, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம்.

படைகளின் ஆண்டவரே! உமது உறைவிடம் எத்துணை அருமையானது! என் ஆன்மா ஆண்டவரின் கோவில் முற்றங்களுக்காக ஏங்கித்தவிக்கின்றது: (திபா:84:1-2)

நிலைவாழ்வின் ஆண்டவரே! உம்மிடம் நீர் அழைத்துக் கொண்ட சாமுவேல் பெஞ்சமின் என்பவரை இரக்கத்துடன் கண்ணோக்கி இவரின் பாவங்களை மன்னித்து நிலைவாழ்வையும் புனிதர்களின் தோழமையுள்ள உறவையும் கொடுத்தருளவேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம். (இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 29.10.2011 அன்று இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது). இறுதிச்சடங்கின்போது மன்னார் மாவட்டத்திலிருந்து கலந்துகொண்ட அன்பர்கள் குறிப்பாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபை மன்னார் மாவட்ட பணியாளர்கள் மற்றும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

பிரிவால் துயருறும் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 5ம் ஆண்டு நினைவு

மலர்வு 08 † 12 † 1929



உதிர்வு 07 † 11 † 2006

**திரு. வ. யேசுரத்தினம்**
யா / வடலியடைப்பு, மன்னார்.


அன்போடு அறிவூட்டி எமை வளர்த்தீர்
அவனியிலே நாம் உயர நீர் உழைத்தீர்
இன்றோ நீர் நம்பரன் பாதம் அமர்ந்துள்ளீர்
என்றுமே எமக்காக வேண்டிடுவீர்.

நீங்கா நினைவுகளுடன் :
அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

தகவல் : Dr. (திருமதி). S. R. யூட்

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 12 † 09 † 1924



உதிர்வு 22 † 09 † 2011

குருத்துவ அருட்பொழிவு 17-08-1951

**அமரர் அ. பிரான்சிஸ் குலாஸ் அடிகள் (அ.ம.தி)**

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்விற்கான வெற்றி வாகையே! (2 தீமொ. 4: 7, 8)

மன்னார், வங்காலைப்பங்கின் முதற்குரவர் அமரர் அருட்பணி அ. பிரான்சிஸ் குலாஸ் (அ.ம.தி) அடிகளாரின் அமரத்துவ செய்தி அறிந்து, அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இரங்கல் திருப்பலியினை நிறைவேற்றியும், இறுதி நல்லடக்க ஆராதனையினை நடாத்தியும், அவருக்காக செபித்த மன்னார், யாழ்ப்பாண, அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், குருமட மாணவர்கள், வழிபாடுகளை நடாத்தியும், அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டும், மலர் வளையங்களை வைத்தும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும் எமக்கு ஆறுதலாயிருந்ததோடு இறுதி நிகழ்வில் கலந்து எமது துயரில் பங்குகொண்ட மன்னார், யாழ்ப்பாண மறைமாவட்ட பங்கு மக்கள் யாவருக்கும் எமது நன்றிகள். மேலும் அடிகளாரின் ஓய்வு காலப்பகுதியில் அவருக்கு உறுதுணையாயிருந்து உதவிகள் பல புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது நன்றிகள். - குடும்பத்தினர். -

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு [illegible] – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org